
Sangathamil
சங்கத்தமிழ்

குரல் – 14 | சர்வதேச மின் செய்தித்தாள் | 01 டிசம்பர் 2021



சிங்கள ஆக்கிரமிப்பு அரசே!

நிறுத்து

தமிழீழ நில ஆபகரிப்புக்கள்

எங்கள் நிலம் தமிழர் உயிர்

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
◆ Purchasing a Residential Property
◆ Selling a Residential Property
◆ Residential Mortgage Refinancing
◆ Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
விருகள், கொண்டோக்கள், வாடகை வசியபிடங்கள், விட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN) Alchemist (IND), Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

B.J டெய்லரிங்க & ஜுவலரி
TAILORING & JEWELLARY CLASSES
We provide training in Jewellery Making & Tailoring Classes Available
ONLINE CLASSES AVAILABLE
உங்கள் தொடர்புகளுக்கு:
416.720.4472
jegathees2007@gmail.com

SARA
TAILORS & FASHION
தையற் கலையில் 38 வருட அனுபவம் மிக்கவரின் மேற்பார்வையில் தையல் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன
பாடத்திட்டம்: 3 மாதம், 6 மாதம், 2 வருடம்
65 வயதானவர்களுக்கு படிப்பதற்கு $100 மட்டும்
Saree Blouse, Wedding, Birthday Garments, Flower Girl's Dresses
Ladies Garments, Maternity Gowns, Churithar, Children's Garments
Coat, Pants Hem, Alterations, Ironing
Sewing Classes (Full time & Part Time) Sewing Machine Repairs Etc.
சாரா தையல் பயிற்சி நிலைய ஆசிரியர் திருமதி சரஸ்வதி பாலராசா
2699 Eglinton Ave. East, Scarborough, ON. (Brimley & Eglinton)
Tel: 416-265-0025 / 647-270-1949 | Cell: 416-910-5351

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

SCARBOROUGH HOME Renovation INC
...your Home Improvement Specialists
24 HOUR EMERGENCY SERVICE
Theepan
Cell: 647 218 7157
VALUE PACK HOME MAKEOVER:
• All General Home Repairs
• Basement Renovation
• Carpet Installation
• Drywall Installation
• Hardwood Flooring Installation
• Washroom Remodeling
• Kitchen Cabinets
• Kitchen Cabinets Installation
• Painting
• Plumbing
• Tiling
100% SATISFACTION GUARANTEED
www:shr1.ca e-mail: y2k21@hotmail.com
At Scarborough Home Renovation, We've definitely get the Experience and the know-how to make your Dream Renovaiton...a practical Reality!

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

MT CPA CA
MAYURAN THARMABALAN PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993


Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

முக்கிய அறிவித்தல்
உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் சர்வதேச மின் செய்தித்தாள் ஊடக
மக்களிடம் சென்றாடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து

எமது தாயக தேசத்தின் விடுதலைக் காக ஆயிரமாயிரம் புலி வீரர்கள் களமாடி வீழ்ந்தார்கள். எமது வீர மண்ணின் மார்பைப் பிளந்து அந்த வீரர்களைப் புதைத்தோம். உயிரற்ற சடலங்களாக அவர்கள் மண்ணிற்குள் மறையவில்லை. விடுதலையின் விதைகளாகவே எமது தாயின் மடியில் அவர்களைப் புதைத்தோம். வரலாற்றுத் தாய் அவர்களை அரவணைத்துக்கொண்டாள்.





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

முகநூல் (Facebook)


Sangathamil Canada

அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



இன்னொரு காவியம் கரும்புலி லெப். கேணல் போர்க்



1986, முள்ளியவளைப் பகுதி அன்று இராணுவத்தினரால் நிரம்பி இருந்தது. தமது அட்டூழியங்களை நிகழ்த்திவிட்டு இராணுவத்தினர் பின்வாங்கத் தொடங்கினார்கள். அவர்கள் மூன்றாம் கட்டை வயல்வெளியை அண்மித்தபோது மேஜர் பசீலனின் தலைமையில் ஒரு தாக்குதற்பிரிவு தனது தாக்குதலை ஆரம்பித்தது.

வயல்வெளி, ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் அவர்களை நோக்கி ஏவப்பட்ட மோட்டார் செல்களிலும், ரவைகளிலும் அவர்கள் நனைந்தனர். இராணுவத்தினருக்கு பலத்த இழப்பு. போர்க் அன்றுதான் ஒரு போராளியாக முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வந்திருந்தான். வந்த அன்றே ஒரு பெரும் போர் முனையில் அவன் பங்கு பற்றினான். அன்றுமுதல் சிறீலங்கா இராணுவத்தினருக்கு எதிரான பல போர் முனைகளில் போர்க் பங்கு பற்றிக் கொண்டிருந்தான்.

இந்தியப்படை எம் மண்ணை ஆக்கிரமித்த நேரம் சிறிது காலம் அமைதியும் பின் பலத்த போரும் ஆரம்பித்தது. அந்த யுத்தத்தின் மிகக் கடுமையான எதிர்ப்பை இந்தியப்படைகள் முல்லைத்தீவு மாவட்டத்தில் சந்தித்தன. ஒட்டிசுட்டானில், முள்ளிய வளையில், தண்ணீரூற்றில், அளம்பிலில் என பல முனைகளில் இந்தியப் படையினர் மீது தாக்குதல்கள் தொடுக்கப்பட்டது. எல்லாப் போர்முனைகளிலும் போர்க்கும் ஒரு போராளியாக கலந்து கொண்டான். அப்போர்க்களங்களில் தன் திறமையை வெளிப்படுத்தினான்.

அந்நேரத்தில்தான், முல்லைத்தீவு காட்டுப்பகுதியில் ஒரு மலைக்கல்லில் முகாம் அமைக்கும் பொறுப்பு போர்க்கிடம் ஒப்படைக்கப்பட்டது. அது ஒரு மிகக் கடுமையான வேலை, வயல்வெளிகளிலும், காட்டுப்பாதைகளிலும் மழைநீர் நிறைந்து சேறும், சகதியுமாக இருக்கும். அப் பாதைகளினால் உணவுப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு உழவு இயந்திரத்தில் செல்ல வேண்டும். அவைகள் புதையும், வயல் வெளியில் சேற்று நிலத்தில் உழவு இயந்திரத்தை மீட்பதற்காக போராட வேண்டும். இந்திய வானூர்திகள் வந்து மிரட்டும், இடைக்கிடை தாக்குதலும் நடாத்தும். அவர்கள் தொடர்ந்து செல்வார்கள். உழவு இயந்திரத்திலிருந்து மூட்டைகளை இறக்கி மலையின் வேறு பகுதிக்கு தோள்களில் சுமக்க வேண்டும். மரங்களில் தங்கி நிற்கும் மழைநீர் அவர்களை நனைக்கும். மறு நாள் இருமலும் தடிமலும்தான் - ஆனாலும் வேலைகள் தொடரும்.

போர்க்கிற்கு ஏற்கனவே இடுப்பு முறிந்திருந்தது. பாரமான பொருட்களை தூக்க அவனால் இயலாது. அப்படித் தூக்கினால் மீண்டும் அவன் நடக்க முடியாமல் படுக்கையில் இருக்க வேண்டி வரும் என்பதை தெரிந்திருந்தும் அவன் வேலைகளைச் செய்தான். உணவுப் பொருட்கள் சேமிக்கப்பட்ட ஒரு பலமான முகாமை உருவாக்கினான்.

ஆனால், அந்த முகாம் இந்தியப்படையினரின் தேடுதல் நடவடிக்கைக்கு உட்பட்டது. பலமான ஒரு சண்டை அந்தக் காட்டுப் பிரதேசத்திலும் நடந்தது. அப்போரில் கப்டன் வாதவூரான் வீரச்சாவைத் தழுவிக் கொண்டான். போர்க் காலில் காயமடைந்தான். கானகச் சண்டைக்கு நாம் பழக்கப்படாத காலம் அது. காட்டின் எந்தப் பக்கம் சென்றாலும் எதிரி இருந்தான். பசி, களைப்பு, தண்ணீர் இருக்குமிடங்களில் எதிரி இருந்தான். தன்னைத் தூக்கிச் செல்லும் போராளிகளுக்குப் போர்க் கதைகளின் மூலம் உறுதியூட்டினான். அவர்கள் பின்வாங்கிச் சென்றார்கள்.

அதே காட்டின் மூலையில் - எமது புதிய முகாம். அங்கு போர்க் தனது காயத்திற்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தான். அதே நேரம் அங்கு எமது பயிற்சி முகாமும் ஆரம்பமாகியது.

போர்க் முழுமையாக குணமடையும் முன்பே புதிய போராளிகளை உருவாக்கும் பணியில் ஈடுபட்டான். அங்கேதான் முதன் முதலாக இந்தியப்படைக்கெதிராகப் போராடும் புதிய அணி உருவாகியது.

அதன் பின்பு போர்க்,முல்லைத்தீவு மாவட்டத்தின் இராணுவப் பிரிவுப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அக் காலத்தில் போர்க்கின் தலைமையில் பல தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டன. இதில் 4ம் கட்டையில் நடந்த தாக்குதல் நடவடிக்கை, தேர்தல் நேரத்தில் பரவலாக நடந்த தாக்குதல்கள் ஆகியவை குறிபிடத் தக்கவை.

இதன் பின்பு, போர்க் முல்லைத்தீவு மாவட்டப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். அந்நேரத்தில் புலிகளின் முகாம்களை சீராக்கி எந்தவொரு தாக்குதலையும் எதிர் கொள்ளக்கூடியளவு பலமுள்ளதாக மாற்றி அமைத்துக் கொண்டான். அதேவேளை தாக்குதற் திட்டங்களை உருவாக்கி இந்தியப்படையினர் மீது நெடுங்கேணி, முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு என எல்லா இடங்களிலும் பரவலாகத் தாக்குதலை மேற்கொண்டான்.

பின்பு, வன்னிப் பிராந்திய தளபதியின் நேரடி கண்காணிப் பிலிருந்த படைப் பிரிவொன்றின் பொறுப்பாளனாக நியமிக்கப் பட்டான். இக்காலகட்டத்தில் கிளிநொச்சி, முசல்குத்தி என சமூக விரோதிகளை செயலிழக்கச் செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டான்.

ஆனி 15, இரவு 12 மணி,

இருளில் மூழ்கி இருந்த மாங்குளம் இராணுவ முகாம்

வன்னி மண்ணில் சேமமடு என்னும் கிராமத்தைச் சேர்ந்த போர்க்- முல்லைத்தீவு மாவட்டத்தின் பொறுப்பாளராகவும், அதன் பின்பு, மாங்குளம் இராணுவ முகாம் முற்றுகைக்குப் பொறுப்பாளராகவும், பின்பு வன்னி நடமாடும் அணியின் பொறுப்பாளராகவும் இருந்தவர். இந்தியப் படைகளுக்கு எதிராகவும், சிறீலங்கா படைகளுக்கு எதிராகவும் பல தாக்குதல்களை திட்டமிட்டு, தலைமையேற்று வழி நடாத்தியவர். தன்னுயிரைத் தந்து மாங்குளம் படைமுகாம் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்தவர்.



சிரித்த முகத்துடன், சாவை ஏற்று
வெடிமருந்து வண்டியில் கரும்புலி போர்க்

புலிகளால் திடீரெனத் தாக்கப்பட்டது. பல முனைகளால் புலிகள் எதிரியின் காவலரண்களை நோக்கி முன்னேறினார்கள். போர்க் ஒரு தாக்குதல் அணிக்கு தலைமை வகித்து முன் னேறினான். எதரியின் காவலரணுக்கு அருகில் அவனது பல மான துப்பாக்கிப் பிரயோகத்திற்கு நடுவே எம்மவர்களின் ஆயு தங்கள் இயங்கின. கண்ணிவெடி அகற்றியை பிரயோகித்துவிட் டு எதிரியின் காவலரணை நோக்கி போர்க் சென்றான். ஆனால் அவன் தனி ஒருவனாகவே இருந்தான். அவனுடன் சென்ற தோழர்களில் பலர் வீரச்சாவடைந்து விட்டனர். சிலர் காயம டைந்து விட்டனர்.

அந்தத் தாக்குதல் முழுமையடையவில்லை. தொடர்ந்து நாம் காப்பரண்களை அமைத்து முற்றுகையிலீடுபட்டோம். முற்று கைக்குப் பொறுப்பாக போர்க் நியமிக்கப் பட்டான். பலமுனை களில் பலமுறை போர் நடந்தது. போர்க்கும் அவனது தோழர் களும் கடுமையாகப் போரிட்டார்கள். சில வேளைகளில் பின் வாங்கினார்கள், சில வேளைகளில் முன்னேறினார்கள். ஆனால் தொடர்ந்து எங்கள் மண்ணைக் காப்பதற்காகப் போரிட் டுக் கொண்டிருந்தார்கள்.

பின்பு, மாங்குளம் இராணுவ முகாம் முற்றுகைக்கான பொறுப்பை மேஜர் திலீப்பிடம் ஒப்படைத்துவிட்டு போர்க் மீண் டும் தன் படைப்பிரிவின் பொறுப்பாளனாகச் செயற்பட்டான்.

மாங்குளம் இராணுவ முகாம் மீதான இரண்டாவது தாக்குதல், தளபதிகள் போர்த் திட்டங்களை வகுத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களில் போர்க்கும் ஒருவன். ஒரு தாக்குதற் பிரிவுக்கு தலைமையேற்று உள்ளே செல்லும்படி போர்க் கேட்கப்பட்டான். ஆனால் அதற்கு அவன் மறுத்து விட்டான். அக்கூட்டத்தில் "நான் வெடிமருந்து வண்டியை ஓட்டிச் செல்கின்றேன்" என்ற அவனது வார்த்தைகள் உறுதியாக வெளி வந்தது.

மற்றவர்கள் வியப்புடன் பார்த்தார்கள். ஆனால் அவனது கண் களில் தெரிந்த ஆழமான உறுதி அவர்களை மௌனமாக் கியது.

இறுதி மூன்று நாட்கள்...

போர்க் தன்னந்தனியாக எந்தவிதமான பொறுப்புக்களும் இல் லாமல் சுற்றித்திரிந்தான். தான் பிறந்த வீடு, தவழ்ந்த மண், பழ கிய மக்கள், மரங்கள், குளம் எல்லாவற்றையுமே பார்த்தான். சேமமடுதான் அவனது கிராமம். சிங்கள எல்லை அருகில் தான். "நாங்கள் ஆயுதம் தூக்கியிராவிட்டால் இப்ப இங்க சிங் களவன்தான் திரிவான்" என்று அடிக்கடி அவன் சொல் லுவதுண்டு.

போர்க் ஏற்கனவே இனிமையானவன், இறுதி மூன்று நாட் களும் அவன் சக போராளிகள் மீது அன்பையும் பாசத்தையும் கொட்டினான். அவன் என்ன செய்யப் போகிறான் என்பது எவருக்குமே தெரியாது. அவர்கள் வழமை மாதிரி போர்க்கிடம் பழகினார்கள். ஆனால் அவன் தம்மீது ஒரு பெரும் சோகச் சுமையை சுமத்தப் போகிறான் என்பது அவர்களுக்குத் தெரி யாது.

காவலரண்கள் வீழ்ச்சியடைந்திருந்தன. அதுவரை நேரமும் தனது போராளிகளுடன் இருந்த போர்க் புறப்படுவதற்குத் தயா ரானான். இறுதி நேர நிமிடங்கள், இருள், தன் போராளிகளின் முகங்களைத் தேடியபடியே – போர்க் சொன்னான்.

"பெடியள் கவனம். பசீலன் செல் வெடிக்கேக்கை சத்தம் தாங்க முடியாமலிருக்கிறது. எதற்கும் பெடியளைத் தள்ளியே நிற்கச் சொல்லுங்கோ" தன் தோழர்கள் மீது அவன் வைத்திருக்கும் அன்பை வெளிப்படுத்தும் வார்த்தைகள் அவை.

போராளிகள் விலகிச் சென்றார்கள்.

"எல்லாம் சரியாக இருக்கிறதா?" வோக்கியில் அவனது இறுதி வார்த்தை - தன் தோழர்களின் பாதுகாப்பை உறுதி செய்து கொண்டான். அந்த வெடிமருந்து நிரப்பப்பட்ட பார வண்டி, எதிரியின் வலயத்திற்குள் உறுமிக்கொண்டு நுழைந்தது. அந்த இறுதிக் கணங்களில் போர்க்கின் முகத்தில் என்ன எழுதி இருந்தது என்பது எவருக்குமே தெரியாது. ஆனால் எல்லாப் போராளிகளைப் போலவே அவனுக்கும் தெரியும், இந்த மண் நிச்சயம் மீட்சியடையும்.

அது ஒரு உன்னதமான செயல், அந்தக் கணத்தில் அவன் எடுத்த முடிவு. குறித்த இலக்கையும் தாண்டி அந்த வண்டி மேலும் பல எதிரிகளை தேடிச் சென்றது. முகாமின் மையப்பகுதி - மிகப் பெரிய சத்தம். அந்தப் பிராந்தியமே அதிர்ந்து மௌன மாகியது.

இருள் கலையும் விடியலின் நேரம் துப்பாக்கிகள் ஓய்ந்து விட் டன. எமது போராளிகள் மாங்குளம் இராணுவ முகாமிற்குள் நுழைந்து கொண்டிருந்தார்கள். **அவர்களின் கண்கள் தேடிக் கொண்டிருந்தன. போர்க் அண்ணை எங்கே? போர்க் எங்கே?** போர்க்கின் வெடிமருந்து வண்டி வெடித்த இடத்தில் ஆழமான குழி ஒன்று இருந்தது. ஆக்கிரமிப்பாளனின் முகாமின் கட்டிடங் கள் இடிந்து - நொருங்கிக் கிடந்தது. அந்தக் குழிக்கு சற்றுத் தள்ளிப் போர்க்கின் உயிரற்ற உடல்...

போர்க் வீரச்சாவைச் சந்தித்துக் கொண்டான் – அவன் வரலாற் றில் ஒருவனாக வாழவில்லை, ஒரு புதிய வரலாற்றைப் படைத் தவன். அவனது வாழ்வு அர்த்தமுள்ளது, உன்னதமானது –



தனது இனத்தின் விடுதலைக்காகத் தன்னையே ஒப்படைத்த உயர்ந்த வீரன் அவன். தனது உயிருக்கும் மேலாக தனது நாட் டின் சுதந்திரத்தை நேசித்த மாவீரன் அவன். நாளையும் காற்றாக எங்கள் உயிர் மூச்சாக வாழ்வான் அவன்.

நினைவுப் பகிர்வு:- வசந்தன்

நன்றி - விடுதலைப் புலிகள் (மார்கழி 1990) இதழி லிருந்து.

வீரத்தமிழ்க்குலம் விலங்கு சுமக்காது

எங்கள் பகைவனே இது எங்கள் சேதசம்!
புரிந்துகொள்...
இலங்கை இரண்டு தேசமே
அறிந்து கொள்...
எம் விலங்கை, விலங்குணர்வுள்ள - நீ
விலக்கமாட்டாய்... அறிவோம்!
உணர்ந்து கொள்! வீரத்தமிழ்க்குலம்
விலங்கு சுமக்காது - உன்
கனவு பலிக்காது.
அதர்மமும் வீரமும் ஓரணியில் நிற்காது

எமது துப்பாக்கிகள் துருப்பிடித்துவிட்டதென்
எவன் சொன்னான்? - எம்மண்ணில்
கரும்புலி கூட கர்ப்பத்தில் தரிக்கிறான்...
தினம் தினம் ஆயதம் உன்னிடம் பிடுங்குவோம்
உன் கொள்வனவெல்லாம் எமக்குரியதே!
ஒரு வார்த்தை -
எங்கள் கைகள் என்றும் இரும்படா...
எங்கள் கைகளில் என்றும் நீ துரும்படா...

-இ.ஓவியநாதன்





தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைக் கருவியாக பொலிஸ் மற்றும் நீதித்துறை செயற்படுகிறது

நவம்பர் 23, 2021

இலங்கையில் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு கருவியாக பொலிஸ் மற்றும் நீதித்துறை செயற்படுகிறதென தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.நாடாளுமன்றில் இன்று உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சர்வதேச நாடுகளில் பொலிஸ் மற்றும் நீதித்துறை என்பன ஜனநாயகத்தையும் சட்டம் ஒழுங்கையும் பாதுகாக்கும் கவசமாக இருக்கும் நிலையில், இலங்கையில் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு கருவியாக அவை செயற்படுகின்றன என அவர் குற்றம் சுமத்தினார்.

பொலிஸ் துறையினால் நீதிமன்றங்கள் தவறாக வழிநடத்தப்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார்.அவர்கள் தவறாக நீதிமன்றங்களை வழிநடத்துகிறார்கள் எனத் தெரிந்தும் அரசாங்கத்தின் இறுக்கம் காரணமாக நீதிமன்றங்கள் செயற்படுவதாக அவர் தெரிவித்தார்.அதற்கமைவாகவே, மாவீரர்கள் தின நிகழ்வுகளை நடத்த தடைவிதிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரண்டு மாதமாகியும் கடலுக்கு சென்றவர்கள் திருப்பவில்லை

நவம்பர் 24, 2021

கடந்த செப்டெம்பர் மாதம் 26ம் திகதி வாழைச்சேனை துறைமுகத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற படகு இன்று புதன்கிழமை வரைக்கும் கரைக்கு வரவில்லை என்றும், அவர்கள் தொடர்பான திருப்திகரமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்தில் கடலுக்கு சென்ற மீனவர்களின் உறவினர்கள் இன்று புதன்கிழமை ஓட்டமாவடி பாலைநகர் கிராமத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தனர்.

வாழைச்சேனை மீன்பிடி துறைமுறைகத்திற்கு கடந்த மாதம் வருகை தந்த கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடலுக்கு சென்றவர்கள் அந்தமான் தீவில் கண்டு பிடிக்கப்பட்டதாகவும், அவர்களை மிக விரைவில் மீட்டுத் தருவதாகவும் உறவினர்களிடம் உறுதியளித்துச் சென்றும் இன்றுவரை (24.11.2021) குறித்த நபர்கள் வரவில்லை என்றும், எங்களுக்கு கடற்றொழில் அமைச்சர், கடல்தொழில் திணைக்களம், பிரதேச மீனவ சங்கங்கள் உரிய நடவடிக்கை தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வீனை பெற்றுத் தருவதில் அசமந்தப்போக்காக உள்ளதாக மீனவர்களின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

குறித்த மீனவர்கள் அந்தமான் தீவில் உள்ளமை தொடர்பில் எங்களது தொலைபேசிக்கு புகைப்படங்கள் அனுப்பப்பட்டதுடன், தொலைபேசி அழைப்பு வந்த நிலையில் எங்களோடு அந்தமான்தீவில் உங்களது குடும்ப உறவினர்கள் உள்ளதாகவும் அவர்களை கண்ட பாதுகாப்பு தரப்பினர் தெரிவித்த நிலையில் மீண்டும் அந்த அழைப்பை தொடர்பு கொள்ள முயற்சித்த போது அழைப்பை ஏற்படுத்த முடியவில்லை. எமது உறவினர்கள் அவர்களிடம் உள்ள நிலையில் அவர்களுக்கு எங்களது தொடர்பு இலக்கம் வழங்கப்பட்டு எங்களோடு தொடர்பு கொண்டார்கள்.

அந்தமான்தீவில் இருந்து 00913192245530 மற்றும் 0115299623 என்ற இலக்கத்தின் மூலம் தொலைபேசி அழைப்பு வந்த தங்களது உறவினர்கள் தொடர்பில் பெயர் குறிப்பிட்டு விசாரணை செய்தனர். இதன் பின்னர் தொடர்பு இல்லாமல் உள்ளமைக்கான காரணம் என்ன என்று இன்னும் தெரியவில்லை என மீனவர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தமான்தீவில் கண்டுபிடிக்கப்பட்ட மீனவர்கள் தற்போது எங்கே? அந்தமான்தீவு கடல் பாதுகாப்பு பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்ட எமது உறவினர்கள் அங்கிருந்து படகுடன் எங்கு கொண்டு செல்லப்பட்டனர். இது தொடர்பில் மீனவர்கள் உள்ளனர் என்றும், பிறகு மீனவர்களின் தகவல் கிடைக்கவில்லை என்றும் அரசாங்கம் எங்களை ஏமாற்றுகின்றதா? அல்லது கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இது தொடர்பில் கரிசனை கொள்ளாமல் உள்ளாரா? என்று பாதிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

நான்கு மீனவர்களை நம்பி வாழும் நான்கு குடும்பம் தற்போது பாரிய கஷ்டத்திற்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றது. இரண்டு மாதங்களாக மற்றவர்களது உதவி மற்றும் கடன் வாங்கி தங்களது வாழ்க்கைச் செலவினை நடாத்தி வருவதாகவும், அத்தோடு காணாமல் போனவரகளது குழந்தைகள் தனது தந்தையை கேட்டு அழுதவாறு உள்ளதாகவும் அயலவர்கள் தூக்கி சென்று ஆறுதல் செய்வதாகவும் பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே கடற்றொழில் அமைச்சர், கடல்தொழில் திணைக்களம், பிரதேச மீனவ சங்கங்கள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு இரண்டு மாதமான நிலையில் எங்களது உறவினர்களை உடனடியாக கண்டு பிடித்து தருமாறு அன்பாக கேட்டுக் கொள்வதோடு, உங்களது கதைகளை நம்பியே நாங்கள் இரண்டு மாதமாக எங்களது உறவுகள் மீண்டும் வருவார்கள் என்று காத்துக் கொண்டிருக்கின்றோம் என்று பாதிக்கப்பட்ட மீனவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

நான்கு மீனவர் சென்ற குறித்த படகு நீலநிறம் என்றும் அதன் இலக்கம் ஐஆருடு யு 0093 வுடந என்று தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், இதில் வாழைச்சேனையைச் சேர்ந்த எம்.வி.ரிஸ்கான் (வயது 21), வாழைச்சேனையைச்



சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான எம்.எச். முஹம்மட் கலீல் (வயது 49), வாழைச்சேனையைச் சேர்ந்த ஏ.எம்.றியாழ் (வயது 19), வாழைச்சேனையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கே.எம். ஹைதர் (வயது 41) ஆகியோர் சென்ற நிலையில் இன்று வரை கரை திரும்பவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பருத்தித்துறை மாவீரர் நாள் ஏற்பாடுகளிலும் படையினரின் அச்சுறுத்தல்

நவம்பர் 24, 2021

பருத்தித்துறை முனைப்பகுதியில் கடந்த வருடங்களில் மாவீரர் நாள் நினைவேந்தல் நடைபெற்ற இடத்தில் இன்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினரால் சிரமதானப் பணிகள் நடைபெற்றது. அதன்போது அப்பகுதியில் பெருமளவு இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

அவர்கள் அங்கு சிரமதானத்தில் ஈடுபட்டிருந்தவா¸களை புகைப்படம் எடுத்து அச்சுறுத்தியும், வாகன இலக்கங்களையும் பதிவு செய்துள்ளனர். அத்துடன் சிரமதானம் முடிந்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர்கள் தத்தமது வாகனங்களில் திரும்பிய வேளையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வாகனங்களில் படையினர் மற்றும் புலனாய்வாளர்கள் பின் தொடர்ந்து வந்தும் அச்சுறுத்தியுள்ளனர்.

இச்சிரமதானத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், சட்டத்தரணி காண்டீபன் மற்றும் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.



சிறீலங்கா ஆக்கிரமிப்பு சிங்கள இராணுவ அச்சுறுத்தல்களின் மத்தியிலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மாவீரர்களுக்கு 25.11.2021 வணக்கம் செலுத்தப்பட்டுள்ளது.





மாவீரர் நாள் தடை உத்தரவுகளை நீக்கக்கோரி முல்லை நீதிமன்றில் நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு தாக்கல்

நவம்பர் 25, 2021

முல்லைத்தீவு மாவட்டத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு கடந்த 17ஆம் திகதி மற்றும் 23 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் உள்ளிட்ட அறுபத்தொன்பது பேருக்கு தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப் பட்டிருந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைத்தீவு, முள்ளிய வளை ஒட்டுசுட்டான், மாங்குளம், மல்லாவி ஐயன்குளம், புதுக்குடியிருப்பு ஆகிய ஏழு போலிஸ் நிலையங்களால் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததற்கு அமைவாக குறித்த அறுபத்தொன்பது பேருக்கான தடை உத்தரவுகள் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டிருந்தது.

இந் நிலையில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுக் கான தடை உத்தரவை நீக்கக்கோரி நகர்த்தல் பத்திரம் ஊடாக வழக்கு விசாரணைகள் முல்லைத்தீவு நீதிமன்றத் தில் தற்போது இடம்பெற்று வருகின்றது.

தடைக்கட்டளை விதிக்கப்பட்டவர்கள் சார்பாக முல்லைத் தீவு மாவட்ட சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் வழக்கில் முன்னிலையாகியுள்ளதுடன், தடைக்கட்டளை பெற்றவர் கள் சார்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப் பினர் சாந்தி சிறீஸ்கந்தவராசா, கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், சமூக செயற்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் ஆகியோர் முன்னிலையாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.
-ச. விஜயரத்தினம்-



மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31காயங்கள்

நவம்பர் 22, 2021

மட்டக்களப்பில் பொலிஸ் காவலில் உயிரிழந்த விதுசனின் உடலில் 31 காயங்கள் இருந்ததாக இன்றைய நீதிமன்ற விசாரணையில் தெரியவந்துள்ளதாக சிரேஸ்ட சட்டத் தரணி சுகாஸ் தெரிவித்தார்.

கடந்த ஜூன் மாதம் 03ஆம் திகதி இருதயபுரம் கிழக்கு பகுதியில் உள்ள வீட்டில் போதைப்பொருள் வைத்திருந் ததாக தெரிவித்து இளைஞர் ஒருவர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளைஞன் பொலிஸ் காவலில் உள்ளபோது உயிரிழந்திருந்தார்.

குறித்த இளைஞன் ஜஸ் போதைப்பொருள் பக்கட்டை விழுங்கியதால் அது வயற்றினுள் வெடித்து உயிரிழந்துள் ளதாக பொலிஸாரினால் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில் அதனை குறித்த இளைஞனின் குடும்பத்தினர் மறுத் திருந்ததுடன் குறித்த இளைஞனை பொலிஸார் தாக்கியதா லேயே உயிரிழந்திருந்ததாக தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பான வழக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன றில் தாக்கல் செய்யப்பட்டிருந்த நிலையில் குறித்த இளை ஞனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டு இரண்டாவது பிரேத பரிசோதனைக்காக பேராதனை பல்கலைக்கழக பேராசிரியருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இன்றைய தினம் குறித்த விசாரணை மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் நீதிபதி ஏ.சி.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட டது.

இந்த நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை யின் சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை இன்று நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் விதுசனின் உடலில் 31வகையான காயங்கள் அறியக் கிடைத்துள்ளதாகவும் உயிரிழந்த இளைஞர் சார்பில் ஆஜரான சிரேஸ்ட சட்டத்தரணி க.சுகாஸ் தெரிவித்தார்.



பொலிஸார் தெரிவித்த விடயங்களுக்கு மாறான சம்பவம் குறித்த இளைஞனுக்கு பொலிஸ் காவலில் நடைபெற்றுள் ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

பொலிஸார் ஏற்கனவே குறித்த இளைஞன் தற்கொலை செய்ததாக நீதிமன்றில் பொய்யான தகவலை வழங்கி யிருந்தார்கள். அதுபொய்யென்றும் குடும்பத்தினர் முன் பாக பொலிஸார் குறித்த இளைஞன் தாக்கப்பட்டிருந்தார் என்றும் நாங்கள் ஏற்கனவே நீதிமன்றுக்கு தெரிவித்திருந் தோம்.அது இன்று உண்மையாகியிருக்கின்றது. நீதிமன் றம் இந்த வழக்கில் மிகவும் கரிசனையுடன் உள்ளதை நாங்கள் அவதானித்தோம்.அதனை நாங்கள் வரவேற் கின்றோம்.

பேராதனை பல்கலைக்கழக பேராசிரியரின் இரண்டாவது உடற்கூற்று பரிசோதனை விரைவாக நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும் என நாங்கள் நம்புகின்றோம்.

உரிய அறிக்கையினை நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க நட வடிக்கையெடுக்கவேண்டும் என பொலிஸாருக்கு நீதிமன் றம் இறுக்கமான உத்தரவினை பிறப்பித்திருக்கின்றது. சரியான நீதி கிடைக்கும் வரையில் நாங்கள் போராடு வோம் என தெரிவித்தார்.

இதேநேரம் குறித்த வழக்கு எதிர்வரும் 15ஆம் திகதி வரையில் ஒத்துவைக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனின் மரண விசாரணைக்கான உதவி களை தமிழ் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்து வருவதுடன் இன்றைய தினம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் நீதிமன்றுக்கு வருகைதந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது



நாம் ஒரு தகவலையும் பதிவு செய்யாதநிலையில் எமது பதிவுகளை ஏற்றுக்கொண்டதாக காணாமல் போனவர்கள் அலுவலகம் தெரிவிப்பது ஏன் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சந்தேகம்

நவம்பர் 22, 2021



நாங்கள் காணாமல் போனோர் தொடர்பான அலுவலகத்தில் எந்த ஒரு தகவலையும் பதிவு செய்யவில்லை இவ்வாறான நிலையில் எங்களுக்கு மரணச்சான்றிதழ்களை வழங்குவதற்காக எமது பதிவுகளை அவர்கள் பெற்றுக் கொண்டதாக கூறுகின்றார்கள் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

எம்மிடமிருந்து தகவலை பெற்று எமக்கான மரணச்சான்றிதழ் இழப்பீடுகளை வழங்குவதற்கே அவர்கள் முனைகின்றனர் எனவே காணாமல் போனோரின் உறவுகள் இந்த விடயத்தில் மிகவும் கவனமாகயிருக்கவேண்டும் என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப் பட்டவர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

காணாமல்போன ஆட்கள்பற்றிய அலுவலகம் நாங்கள் ஏற்றுக்கொள்ளாத அலுவலகம் - இவர்கள் எங்களை பதிவு செய்ததாக கூறி அதாவது காணாமல் போனோர் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப் படையில் தங்களுக்கு மிகுதி தகவல்களையும் வழங் குமாறு மக்களிற்கு கடிதங்களை அனுப்பிவருகின்றது என முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட் டவர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன நாங்கள் இந்த அலுவலகத் தில் எந்த தகவலையும் பதிவு செய்யவில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு இந்த ஒரு பொய்யான தகவலை வைத்துக்கொண்டு மக்களிடமிருந்து தகவலை ஏற்று எமக்கான மரணச்சான்றிதழ் இழப்பீடுகளை வழங் குவதற்கான ஆரம்பகட்ட வேலைகளை செய்வதற்கு முயல்கின்றனர் எனவும் முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கம் தெரிவித் துள்ளது.

இதில் மக்கள் மிகவும் அக்கறையாக இருக்கவேண்டும், அதாவது வலிந்து காணாமல்ஆக்கப்பட்ட உறவினர் களாகிய நீங்கள் நாங்கள் இந்த முறைப்பாடுகளை செய்ய வில்லை என்பது உங்களிற்கே தெளிவாக தெரிகின்ற காரணத்தினால் அவர்கள் எங்களிற்கு மரணச் சான்றிதழ்களை வழங்குவதற்காக எமது பதிவுகளை அவர்கள் ஏற்றுக்கொண்டதாக கூறுகின்றனர்.

சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் குழப்பநிலை!

யாழ்ப்பாணம் சாட்டி மாவீரர் துயிலும் இல்லப் பகுதியில் இராணுவத்தினருக்கும் மக்களுக்கும் இடையில் குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது.
மாவீரர் நினைவேந்தலுக்காக சுடரேற்றச் சென்றிருக்கின்ற மக்களை உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்து வைத்திருப்பதால் குழப்ப நிலை .ஏற்பட்டுள்ளது.
மக்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் சட்டத்தரணி சுகாஸ்ம் சென்றுள்ளார்







முள்ளிவாய்க்கால் பகுதியில் ஊடகவியலாளர் மீது இராணுவத்தினர் தாக்குதல்

நவம்பர் 27, 2021

முள்ளிவாய்க்கால் பகுதியில் முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் மீது நான்கு இராணுவத்தினர் இணைந்து மூர்க்கத்தனமான தாக்குதல் மேற்கொண் டுள்ளனர்.

Lankasri ஊடக நிறுவனத்தின் முல்லைத்தீவு பிராந்திய ஊடகவியலாளர் விஸ்வலிங்கம் விஷ்வசந் திரன் மீதே மூர்க்க தனமாக இராணுவத்தினர் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

காயமடைந்த ஊடகவியலாளர் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்







குறிஞ்சாக்கேணி படகு விபத்து – 4 மாணவர்கள் உட்பட 6 பேர் பலி


நவம்பர் 23, 2021

திருகோணமலை குறிஞ்சாக்கேணியில் இடம்பெற்ற படகு விபத்தில் பாடசாலை மாணவர்கள் 4 பேர் உட்பட 6 பேர் பலியானதுடன் 11 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர், அவர்களில் நால்வர் கவலைக்கிடமாக உள்ளதாகக் கூறப்படுகிறது.

படகின் கொள்ளவை மீறி பயணிகளை ஏற்றிச்சென் றமையாலேயே விபத்து சம்பவித்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.







தமிழர்கள் அனைவரினதும் ஆழ்மன உணர்வுகளோடு இரண்டறக் கலந்து போன ஈகைத்திருநாளே தமிழீழத் தேசிய மாவீரர் நாள்.

நவம்பர் 27, 2021



இலங்கை நாடாளுமன்றத்தில் மாவீரர்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் அஞ்சலி செலுத்தியுள்ளார்.
நாடாளுமன்றத்தில் இன்றைய நாள் உரையாற்றிய அவர்,

மாவீரர் நாள் பற்றி உரையாற்றுகையில்,
இந்தப் பூமிப்பந்தின் தேசமெங்கணும் பரந்து வாழும் உலகத்தமிழர்கள் அத்தனை பேரினதும் ஆழ்மன உணர் வுகளோடு இரண்டறக் கலந்துபோன ஈகைத் திருநாளே தமிழ்த்தேசிய மாவீரர் நாள்.

மக்களுக்கான போராட்டம் ஒன்றின் தோற்றுவாய்க்கு, மனிதாபிமான மனோநிலையும், மனிதநேய மாண்புகளுமே அடிப்படையாய் அமைய முடியும். அத் தகையதோர் மக்கள் போராட்டத்திற்கு, சக மனிதர் களையும், தன் சார்ந்த சமூகத்தையும் நேசிக்கத்தக்க அன்பின்பாலான மனநிலை மட்டுமே மூலாதாரமாக முடியும். அந்தவகையில் அனைத்துலகும் பிரமித்து நிற்கத்தக்க பிரமாண்டத்தோடு, தமிழின விடுதலை ஒன்றையே மூச்சாகவும், வீச்சாகவும் கொண்டு, முப்பது ஆண்டுகாலமாக நடைபெற்றுமுடிந்த மக்கள் போராட்டத் திற்காக தம்மையே தாரைவார்த்த எம் தேசவீரர்களை பயங்கரவாதிகள் என்று பறைசாற்றுவது எத்தனை அபத் தமானது?

நீண்ட, நெடிய, நெருப்பாறாய் நிகழ்ந்தேறிய போரின் விளைவாக, பொருளாதார ரீதியாகவும், வேலைவாய்ப்பு, கல்வி, கலை, கலாசார, மொழி, நில அடையாள ரீதியா கவும் கடுமையாக பாதிக்கப்பட்டு, உறவுகளின் உயிரி ழப்பு, அவயவ இழப்பு, மாற்றுத்திறனாளிகளின் உருவாக் கம், ஆயிரக்கணக்கான விதவைகளின் தோற்றம், அன் னை, தந்தையை இழந்த நிலையில் அநாதரவாக்கப்பட்ட சிறுவர்கள், வலிந்து காணாமலாக்கப்பட்டோர், இன்னும் விடுவிக்கப்படாத நிலங்கள் , வன்பறிப்புச் செய்யப்படும் பூர்வீக நிலங்கள் என வலிதாங்கிய இனமாக வாழத் தலைப்பட்டிருக்கும் எமது மக்களின் மனக்காயங் களுக்கும், அவர்களின் ஆற்றாமைகளுக்கும் ஆறுதலளிப் பதாய், அமைதி தருவதாய், நம்பிக்கை ஊட்டுவதாய் அமையக்கூடியது, இறந்தவர்களை நினைவு கூரும் உரி மை ஒன்றே ஆகும். அந்த அடிப்படை உரிமையைக்கூட, வலிந்து மறுதலிக்கும் இலங்கை அரசின் செயற்பாடுகள், இந்த மண்ணில், எமது மக்களின் இருப்பை இன்னும் இன்னும் கேள்விக்குட்படுத்துவதாகவே அமைந்துள்ளது.

இழப்பின் வலி சுமந்து நிற்கும் ஒரு இனத்தின் ஒவ்வொரு குடும்பத்தவர்களதும் சமய, சமூக, பண்பாட்டு விழுமியங் களைத் தழுவிய "நினைவுகூரல்" என்னும் அடிப்படை உரிமைக்கான பிரார்த்தனைகளையும், சடங்குகளையும் மேற்கொள்கின்றபோது அவை உள்ளூர் அதிகாரத்துவ முடைய அதிகாரிகளினால் பயங்கரவாத விடயங்களோடு ஒத்துப் பார்க்கப்படுதல், அல்லது போராட்டம் ஒன்றினை மீள உருவாக்கம் செய்வதற்கான செயல் முனைப்பாக காண்பிக்கப்படுதல், அத்தகைய பிரார்த்தனைகளில் ஈடுபடுபவர்களை கோரமான உணர்வுகளைக் கொண் டவர்களாக சித்தரித்து அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்தல் என்பன தவறான அர்த்தப்படுத்தல்களாகும். அது எமது மாவீரர்களின் உயிர்த் தியாகங்களையும், மாவீரர் தினத்தின் புனிதத் தன்மையையும் வலிந்து மலினப்படுத்தும் செயலாகவே அமைந்துள்ளது.

இன விடுதலை என்னும் சத்திய இலட்சியத்திற்காக, தமிழ்ச் சமூகத்தின் விடிவுக்காக, அடுத்த சந்ததியின் அமைதியான வாழ்வுக்காக, வாழ்வியலின் அத்தனை சுகபோகங்களையும் துறந்து, மனித சுதந்திர உணர்வின் பிரதிபலிப்பாய் தம்மையே தற்கொடையாக்கிய அறுப தாயிரத்திற்கு (60,000) மேற்பட்ட மாவீரர்களை இந்த மண்ணிலே புதைத்து விட்டு, விடுதலை நோக்கிய ஆழ்மன ஏக்கங்களோடு தவித்திருக்கும் எமது மக்களின் வலி சுமந்த மனப்பரப்பு முழுமைக்கும், மாவீரர்களின் தியாகங்கள் என்றென்றைக்கும் சுடர்ந்தவண்ணம் தான் இருக்கும். கையறு நிலையிலிருக்கும் எம் மக்கள், அரூபத்தன்மை கொண்ட ஆபத்பாந்தவர்களாக, தமது ஆழ்மனங்களில் வைத்துப் பூசிக்கும் மாவீரத்தியாகி களின் நினைவுகளை, நீதிமன்றத் தடையுத்தரவுகளா லோ, நீண்டிருக்கும் ஆயுத முனைகளாலோ நீர்த்துப் போகச் செய்யமுடியாது என்பதை நீங்கள் ஒவ்வொரு வரும் உணர்ந்திருப்பீர்கள்.

தமது சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமைகளற்ற, நசுக்கப்பட்ட இனமாக இருந்துகொண்டு தனது இருப்பைத் தக்கவைப்பதற்காய் எல்லாவழிகளிலும் போராடத் தலைப்பட்டுள்ள தமிழினத்திற்கு, இத்தகையதோர் இழிநிலை வந்துவிடக்கூடாதென்ற வரலாற்றுக் கண்ணோட்டத்தோடு, "விடுதலை என்பது ஒரு அக்கினிப் பிரவேசம், நெருப்பு நதிகளை நீந்திக்கடக்கும் நீண்ட பயணம், அது தியாகத்தின் தீயில் குதிக்கும் யாகம்" என்ற தலைவரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுத்து, தர்மத்தின் வழி நின்று, இனவிடுதலை என்ற சத்திய இலட்சியத்திற்காக தமது இன்னுயிர்களை ஈகம் செய்து, தமிழினத்தின் எழுச்சிக்கு மூச்சாகி நின்ற எம் மாவீரச்செல்வங்களை என் நெஞ்சிருத்தி அஞ்சலித்து நிறைவு செய்கிறேன்.

துட்டகைமுனு மன்னன் தாம் போரில் வெற்றிகொண்ட எல்லாளனுக்கு மரியாதை செலுத்தக்கூறிய இந்த நாட்டில் போரில் இறந்த மாவீரர்களின் நினைவேந்தலுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.


அத்துடன் இன்று நவம்பர் 27ஆம் திகதி மாவீரர்களின் தினத்தை முன்னிட்டு மாவீரர்களுக்கு தமது அஞ்சலியை செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இலங்கையில் தற்போதுள்ள பொருளாதார நிலையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு இரண் டாயிரம் ரூபா வரையில் வேதனம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

விருதலைப்புலிகளின் முதல் மாவீரர் லெப். சங்கர் வீட்டில் சுடரேற்றி வீரவணக்கம்! பண்டிதரின் தாயாரும் பங்கேற்பு

எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் வல்வெட்டித் துறையில் உள்ள சங்கரின் இல்லத்தில் குறித்த நிகழ்வு நடைபெற்றுள்ளது.
இதன் போது விடுதலைப்புலிகள் அமைப்பின் மூத்த போராளி பண்டிதரின் தாயாரும் பங்குகொண்டு அஞ்சலி செலுத்தியுள்ளார்.







நந்திக்கடலில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார் ரவிகரன்

உயிர்நீத்த உறவுகளுக்கு, முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அவர்கள் 27.11.2021 இன்று நந்திக்கடலில் மலர்தூவி அஞ்சலி செலுத்தியுள்ளார்.
எங்கள் பெருமைமிகு வரலாறின் சோகமான இறுதிக் காட்சிகளின் மௌனமான சாட்சியே இந்த நந்திக்கடல் ஏராளமான எங்கள் உறவுகளின் கண்ணீரும், செந்நீரும் கலந்துள்ள இந்தக் கடலன்னையை வணங்கி, உயிர்நீத்த எங்கள் உறவுகளுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தியதாக அவர் தெரிவித்தார்.
மேலும் இந்த அஞ்சலி நிகழ்வுகளில் கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன், சமூகசெயற்பாட்டாளர் பத்மநாதன் சுபாகரன் ஆகியோ ரும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.











மாவீரர் நாள் – தமிழீழம் நவம்பர் 27, 2021


வன்னி விளாங்குளம்


அளம்பில் – முல்லை


யாழ். பல்கலைக்கழகம்


யாழ். பருத்தித்துறை முனைப்பகுதி


யாழ். தீவகம் சாட்டி


நந்திக்கடல் – முல்லை



முல்லை கடற்கரைப்பகுதி


முல்லை இரட்டை வாய்க்கால்


அம்பாறை

தமிழர் நினைவேந்தல்களுக்கு இடையூறு செய்வது மனிதாபிமானமற்ற செயல் தென்னிலங்கையிலிருந்து வெளியான வலியுறுத்தல்!

நவம்பர் 27, 2021



யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூரும் தமிழ் மக்களின் உரிமையை தடுக்கும் மனிதாபிமான மற்ற செயற்பாட்டை அரசாங்கம் கைவிட வேண்டுமென தென்னிலங்கையில் உள்ள இடதுசாரி கட்சியொன்று வலியுறுத்தியுள்ளது.

வடக்கு, கிழக்கில் நீதி, நியாயம் மற்றும் நீதிக்கான போராட்டத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூரும் நடவடிக்கை மேற்கொள்வதை தடுக்க, அரசாங் கத்தின் உத்தரவின் பேரில், பாதுகாப்புப் படையினரும் காவல்துறையும் நடவடிக்கை எடுத்து வருவதாக நவ சமசமாஜக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

தேசிய உரிமைகளுக்கு மதிப்பளித்து செயற்படுமாறும், தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்தில் உயிரிழந் தவர்களை நினைவுகூருவதற்கு மனிதாபிமானமற்ற முறையில் இடையூறு விளைவிப்பதைத் தவிர்த்துக் கொள் ளுமாறும் இலங்கை அரசாங்கத்தின் அதிகாரிகளை கேட்டுக் கொள்வதாக, நவ சமசமாஜக் கட்சியின் தலைவர் பேராசிரியர் விக்கிரமபாகு கருணாரத்ன விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் எனப்படுவது தனிப்பட்ட விடயம் அல்ல எனத் தெரிவித்துள்ள பேராசிரியர் விக்ரமபாகு கருணா ரத்ன, தமது தேசத்தையும் மதத்தையும் கடைப்பிடிதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்பதை ராஜபக்ச அரசாங் கத்தின் நினைவூட்டியுள்ளார்.

இந்த செயற்பாடுகளுக்கு சவால் விடுக்கப்பட்டாலோ? அல்லது இடையூறு விளைவிக்கப்பட்டாலோ அதற்காக போராடுவதற்கு அந்த மக்களுக்கு நியாயமான உரிமை உண்டு எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். இந்த விடயத்தை ஆதரிக்கும் ஏனைய மக்களின் உரிமையும் இதில் அடங்கும் எனவும், அதற்கு தடையாக இருந்தால், அந்த நாட்டை ஜனநாயக ரீதியாக செயற்படும் நாடாக அங்கீகரிக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நான்கு தசாப்தங்களுக்கும் மேலாக அனைத்து மக் களினதும் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வரும் நவ சமசமாஜக் கட்சி, இந்த தடைகளுக்கு எதிராக தமது சுதந்திரத்திற்காக ஒழுங்கமைக்கப்பட்டு போராடியவர்கள் இந்நாட்டு மக்களே என சுட்டிக்காட்டியுள்ளது.

தேசிய உரிமை என்பது அதற்காக குரல் கொடுப்பது மாத்திரமல்ல எனவும், அமைப்பு ரீதியாக போராடுவதற் கும் உரிமையுண்டு எனக் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச அளவில் ஒரு தேசமாக தம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமைக்காக பிரசாரம் செய்வது சர்வதேச மனித சமூகத் தின் உரிமையும் கூட, என நவ சமசமாஜ கட்சி கூறியுள் ளது.

இவை அனைத்தும் ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கோட்பாடுகள் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யுத்தத்தில் உயிரிழந்த தமது உறவுகளை நினைவு கூரும் தமிழ் மக்களின் உரிமை யை தடுக்கும் மனிதாபிமானமற்ற செயற்பாட்டை அரசாங் கம் கைவிட வேண்டுமென தென்னிலங்கையில் உள்ள இடதுசாரி கட்சி வலியுறுத்தியுள்ளது.

வீரத்தமிழனிற்கு இன்று பிறந்தநாள் என நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் நாடாளுமன்றத்தில்இன்று தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நவம்பர் 26, 2021

இவ்வாரம் வடக்குகிழக்கு மக்களிற்கு ஒரு முக்கிய வாரம், வீரமரணம் அடைந்த மாவீரரை நினைவுறுத்தும் வாரம். அதுவும் இன்றைய தினம் அந்த வாரத்தில்அதி விசேட தினம்.

இந்த தருணத்தில் பிரிட்டிஸ் ஆட்சியாளர்களிற்கு எதிராக ஆயுதம் ஏந்திய சுபாஸ்சந்திரபோஸ் பற்றி அகிம்சா வாதியான மகாத்மாகாந்தி கூறிய வாசகங்கள் சிலவற்றை நான் உங்களிற்கு நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

நேதாஜியின் தேசப்பற்று எவர்க்கும் குறைந்ததல்ல அவரின்வீரம் சகல காரியங்களிலும் பளிச்சென பிரதிபலிக் கின்றது அவர் உன்னத குறிக்கோள்களை முன்வைத்தார் ஆனால் தோல்வியுற்றார் யார் தான் தோல்வியை தழு வாதவர்கள் என மகாத்மா காந்தி தெரிவித்திருந்தார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில் காந்தி பின்வருமாறு கூறினார் இந்தியாவிற்கு ஆற்றிய சேவைக்காக நேதாஜி என்றென் றும் சிரஞ்சீவியாக வாழ்வார்.

அகிம்சையின்பால் ஈர்க்கப்பட்டவன் என்ற முறையில் மேற்கண்ட வாசகங்களை இலங்கையின் வடக்கு கிழக்கை மையமாக வைத்து அங்கு உதித்த வீரத் தமிழனின் இன்றைய பிறந்தநாள் அன்று அவர் ஞாபகார்த் தமாக சமர்ப்பிக்கின்றேன் என குறிப்பிட்டார்.



ஊடகவியலாளர்களிற்கே இந்த நிலைமை என்றால் தங்களிற்கு என்ன நிலைமை என பொதுமக்கள் அச்சமடைந்துள்ளனர் - ரவிகரன்

நவம்பர் 28, 2021



ஊடகங்களிற்கே இந்த நிலைமை என்றால் பொது மக்கள் தங்களிற்கு என்ன நிலைமை என கேட்கின் றார்கள் என தெரிவித்துள்ள வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரவிகரன் ஊடகத்துறையை முடக்கினால் இங்குள்ள கொடுமைகள் அனைத் தையும் வெளியில் கொண்டு செல்ல முடியாது என திட்ட மிடலுடன் தான் நேற்று ஊடகவியலாளர் தாக்கப்பட்டுள் ளார் என தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் ஊடகவியலாளர் தாக்கப்பட் டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இடம்பெற்ற ஆர்ப்பாட் டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
முல்லைத்தீவு மாவட்ட ஊடகவியலாளர் விஸ்வா என்பவர் தாக்கப் பட்டமை தொடர்பில் இன்று தமிழ் மக்களிற்கு இருக்கின்ற ஒரேயொரு நம்பிக்கை இந்த ஊடகத்துறைதான்.

இங்கு நடக்கும் கொடுமைகளை உடனடியாக வெளிச் சத்திற்கு கொண்டுவருவது எங்கள் தமிழ் ஊடக வியலாளர்கள் தான் என்பது அனைவருக்கும் தெரி யும். அந்த ஊடகத்துறையை முடக்கினால் இங்குள்ள கொடுமைகள் அனைத்தையும் வெளியில் கொண்டு - ஊடகங்களிற்கே இந்த நிலைமை என்றால் பொதுமக் களிற்கு என்ன நிலைமை?

பொதுமக்கள் தங்களிற்கு என்ன நிலைமை என எங் களிற்கு சொன்னார்கள், இப்படியாக உங்களின் பெரிய துறைகளிற்கே நடந்தால் எங்களிற்கு என்ன நிலை மை, என கேட்டார்கள். சம்பவத்தை நேரில் பார்த்தவர் கள் நேரடியாக வந்து பேட்டி குடுக்க பயப்பிடுகின்றார் கள், தமிழ்மக்களிற்கு நம்பிக்கையாக உள்ள ஊடகத் துறையை தயவு செய்து முடக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்வதோடு இதற்கு நீதிவேண்டும், நீதித் துறை இதில் தலையிட்டு அதற்குரிய ஒழுங்குகளை செய்து எங்கள் மக்களை காப்பாற்றுங்கள் என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவில் ஊடகவிலாளர் மீதான தாக்குதலுக்கு தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை கடும் கண்டனம்

நவம்பர் 28, 2021

முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதியில் சுயாதீன ஊடகவியலாளர் ஒருவர் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மிலேட்சத்தனமாக தாக்கப்பட்ட சம்பவத்தினை வன்மை யாக கண்டிப்பதாக தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை யின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந் தன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் இன்று ஞாயிற்றுக்கிழமை (27) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

தமிழர் தாயகப் பகுதிகளில் கடமையாற்றும் ஊடக வியலாளர்கள் நீண்ட காலமாகவே ஸ்ரீலங்கா அரச படைகளாலும், புலனாய்வாளர்களாலும் தொடர்ந்தும் பல அச்சுறுத்தல்களையும், விசாரணைகளையும் எதிர் கொண்டு வருகின்றார்கள்.

ஜனநாயக நாடு என்று கூறப்படுகின்ற இதே நாட்டிலேயே ஒரு ஊடகத்துறையினர் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட விதமாக மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான மிலேட்சத்தனமான சம்பவங்கள் இன்னும் நாட்டை மிக மோசமான பாதைக்கே இட்டுச்செல்லும்.

இந்த நாட்டில் தமிழர்களாகிய நாம் எமது தாயகப் பகுதியில் நிம்மதியாக வாழ்வதற்கு நாம் விரும்பும் ஒரு நிரந்தர மான அரசியல் தீர்வையே எதிர்பார்க்கின்றோம். ஆனால் இவ்வாறான மோசமான சம்பவங்கள் தொடரும் பட்சத் தில் எமக்கான தீர்வு என்பது சாத்தியமற்றது என்பதை அனைத்து அரசியல் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர்களது கருத்து மற்றும் ஊடக சுதந்திரத்தை ஆயுதம் கொண்டு அடக்க நினைப்பது என்பது இந்த அரசின் மடமைத்தனம்.

முல்லைத்தீவு ஊடகவியலாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவமானது தமிழர்களுடைய ஊடக சுதந் திரத்தின் மீதும் கருத்துச் சுதந்திரத்தின் மீதும் மேற் கொள்ளப்பட்ட தாக்குதலாகவே கருதமுடியும்.

மேலும் இச் சம்பவத்திற்கான நீதியான விசாரணை மேற்கொள்ளப்படுவதோடு குறித்த ஊடகவியலாளரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டு இச் சம்பவத்துடன் தொடர்புபட்ட இராணுவத்தினரை கைது செய்து விசா ரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என இந்த அரசை தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வலியுறுத்துகின்றது என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது





MPC Mullaitivu Press Club

முல்லைத்தீவு ஊடக அமையம்
முலதிவி மாத்ய சமாஜய
Mullaitivu Press Club

Journalists condemn brutal attack and torture on Journalists by Sri Lankan security forces

The Journalists of the Mullaitivu district strongly condemn the brutal attack and torture on independent journalist Viswalingam Viswachandran on 27.11.21, while filming a suggestive shot of the 'Mullivaikkal' name board. He was beaten with palmyra fronds wrapped with barbed wire.

He suffered serious injuries in his stomach, arms and legs and admitted to the Mullaitivu district hospital undergoing treatment. The security forces have forcefully seized his video camera and mobile phone and damaging his two-wheeler.

Journalists in Sri Lanka, in particular war affected areas of North and East are subjected to serious challenges amidst severe threats to their lives and profession. This attack is yet another on media freedom and a serious human rights violation.

This attack on the independent journalist has come at a time when the Special Rapporteur on contemporary forms on slavery Tomoya Obokata is in Colombo on a weeklong visit to study labour conditions.

While attacks against Tamil journalists continue unabated complaints even up to the President have gone unattended. This culture of impunity continues to put journalists and freedom of expression into serious hardship. If action has been taken earlier and the guilty held accountable such continued action against journalists would not continue.

The Sri Lankan government continues its policy of stifling press freedom and the right to information by intimidating and harassing journalists and media houses as police and military continue their hard-line stand on targeting journalists even on flimsy reasons.

Continued attack on the fourth pillar of democracy has sounded a death knell for journalism and journalists in Sri Lanka.

Despite 44 Tamil journalists being abducted or subjected to forced disappearance or killed none of the perpetrators have been justice.

The Mullaitivu journalists' association and the press club strongly condemn the brutal attack on journalists whose only aim is to inform the public of the events happening in the respective areas. We also call upon those interested in press freedom, international bodies to interfere and ensure that journalists are safe and continue to their profession without any hindrance.

Press Club, Mullaitivu
28.11.2021

mail: info.mullaipress@gmail.com
ullaitivu Press Club, PWD Road, Mullaitivu.

சிறலங்கா அரசபடைகளாலும், ஒட்டுக்குழுக்களாலும் கடந்த காலங்களில் வடக்கு கிழக்கில் 44 தமிழ் ஊடகவியலாளர் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் கொலைசெய்யப்பட்டிருக்கும் நிலையில், அதற்கான நீதி மறுக்கப்பட்டு வரும் நிலையில் மீண்டும் ஊடகவியலாளர் மீதான இராணுவத்தினரின் மிலேச்சதனமான சித்திரவதையை வன்மையாக கண்டிக்கின்றேன்

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் பொருளாளரும் சுயாதீன ஊடகவியலாளருமான விஸ்வலிங்கம் விஸ்வச்சந்திரன் அவர்கள் நேற்று 27.11.21 காலை முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியில் "முள்ளிவாய்க்கால்" எனும் அடையாளப் பெயர்பலகையினை செய்தி அறிக்கையிடலுக்காக ஒளிப்படம் எடுத்துக்கொண்டிருந்த வேளை இராணுவத்தினர் அவரது ஊடக பணிக்கு இடையூறு விளைவித்ததுடன் ஊடகவியலாளர் மீது முள்ளுக்கம்பி சுற்றப்பட்ட பனை மட்டையால் மிக மூர்க்கதனமாக தாக்குல் மேற்கொண்டதை கண்டித்து இன்று 18.11.21 முல்லைத்தீவு பண்டார வன்னியன் சிலை முன்பாக நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில்







வடகிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டமையைக் கண்டித்தும் நீதி கோரியும் மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்

நவம்பர் 28, 2021



வடக்கு மற்றும் கிழக்கில் ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்றைய தினம் மட் டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம், மட்டு ஊடக அமையம், மாகாண ஊடகவியலாளர் ஒன்றியம் என்பனவற்றின் ஏற்பாட்டில் பாரிய ஆர்ப்பாட்டமொன்று காந்திப் பூங்காவில் அமைந்துள்ள ஊடக வியலாளர்களின் நினைவுத் தூபி முன்றலில் இடம் பெற்றது.

நேற்றைய தினம் முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பிரதேசத்தில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடக வியலாளர் மீது இராணுவத்தினாரால் மேற்கொள்ளப்பட்ட மிலேச் சத்தனமான தாக்குதலைக் கண்டித்தும், அண்மையில் திருகோணமலை கிண்ணியாவில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர் மீது மேற் கொள்ளப்பட்ட தாக் குதலைக் கண்டித்தும் அதற்கான நீதி கோரியும் மேற்படி ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தில் மட்டக்களப்பு மாவட்ட ஊடக வியலாளர்கள், மதகுருமார்கள், தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கரணா கரம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா. அரியநேத்திரன், ஞா.சிறிநேசன், கிழக்கு மாகாண சபை முன்னாள் பிரதித் தவிசாளர் பிரசன்னா இந்திர குமார், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா. துரைரெட்ணம், மட்டக்களப்பு மாநகரசபைப் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட மாநகரசபை உறுப் பினர்கள், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன் னணித் தலைவர் கி.சேயோன், கல்முனை மாநகரசபை உறுப்பினர் ராஜன் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் த.சுரேஸ், சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண் டிருந்தனர்.



ஊடகங்கள் மிதும், ஊடகவியலாளர்கள் மீதும் மேற் கொள்ளப்படுகின்ற அடக்குமுறைகளை நிறுத்து, தாக் குதலை மேற்கொண்டவர்களை உடனடியாகக் கைது செய், ஊடகவியாளர்களைத் தாக்காதே, ஜனநாயகத் தைக் குழிதோண்டிப் புதைக்காதே போன்ற கோசங் களை எழுப்பியவாறும், ஊடகவியலாளர்களைச் சுதந் திரமாகச் செயற்பட அனுமதி, இராணுவ அடக்குமுறை ஒழிக, அரசே ஊடக சுதந்திரத்தை உறுதிப் படுத்து, சிறைப்படுத்தப்பட்ட ஊடகவியலாளர்களை உடன் விடுதலை செய், ஊடகவியலாளர் மீது தாக்குதல் நடத்திய இராணுவத்தினரைக் கைது செய் போன்ற வாசகங்களை ஏந்தியவாறும் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.








மாவீரர் நாள் – தமிழீழம் நவம்பர் 27, 2021















கனடிய செய்திகள்

கனடாவில் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வரலாறு காணாத மாழை மற்றும் அழிவு

நவம்பர் 18, 2021

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் இரு தினங்கள் அடித்த புயல் மழையால் வன்கூவர் நகரம் நாட்டின் பிற பகுதிகளில் இருந்து துண்டிக்கப் படும் நிலைமை தோன்றியுள்ளது. வெள்ளம் மண்சரிவு, மலைச்சரிவு காரணமாக ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள் ளனர்.

“வளிமண்டல நதி” (“Atmospheric River”) எனப் பெயர் குறிப்பிடப்படுகின்ற கடும் ஈரப்பதன் மிகுந்த காற் றலை ஒரு நதி போன்று உருவாக்கிப் பறந்து பிரிட்டிஷ் கொலம்பியாவின் மேற்குப் பகுதி மீது வெள்ளத்தைக் கொட்டிவிட்டுச் சென்றி ருப்பதாக வானிலை வல்லுநர்கள் கூறு கின்றனர்.

வெப்ப மண்டலப் பகுதிகளில் இருந்து துருவங்களை நோக்கி வீசுகின்ற காற் றின் அதிக ஈரப்பதன் காரணமாக அதனை “வளிமண்டல நதி” என்று குறிப்பிடுகின்றனர். வன்கூவர் பகுதி ஒரு மாதத்தில் பெறுகின்ற மழை வீழ்ச் சியின் மொத்த அளவை 24 மணி நேரத்தில் கொட்டி விட்டுப் போயிருக்கிறது.

அந்த அசூர “வான்நதி”. அனர்த்த அவசரகால நிலை அங்கு அறிவிக்கப் பட்டிருக்கிறது. வெள்ளத்தில் சிக்குண் டவர்களை மீட்க இராணுவம் அழைக்கப் பட்டிருக்கிறது.

“சந்தேகத்துக்கு இடமே இல்லை. இது பருவநிலை மாறு தலின் நேரடி விளைவு தான்” - என்று அடித்துக் கூறியிருக் கிறார் பிரிட்டிஷ் கொலம்பியாவின் அமைச்சர் ஒருவர்.

கனடாவின் இதே பிராந்தியம் கடந்த கோடையின் போது வெப்ப அனல் காரணமாக வெந்து தணிந்தது. அங்கு ஒரு கிராமத்தையே முழுமையாகத்தவிழுங் கியது நினை விருக்கலாம். வெப்பம், வெள்ளம் என மாறிமாறி வெளுத் து வாங்குகிறது இயற்கை. பூமியின் வெப்ப நிலையைக் குறைப்பதற்கான அவசர திட்டங்களை ஆராய்வதற்காக உலகத் தலைவர்கள் ஒன்று கூடி கிளாஸ்கோவில் நடத்திய பருவநிலை மாநாடு முடி


Toronto Star Image

வடைந்து ஓரிரு நாட்களுக்குள் கனடா வெள்ள அனர்த்தம் நேர்ந்திருக் கிறது.

சிங்கள அரசின் அடிவருடிகளாக நினைவெழுச்சி அகவம் மற்றும் NCCT & Ex-WTM.

“மாவீரர் நாள்” என்ற பெயரை வெறுக்கும் இவர்கள்

மாவீரர் நாள் பரப்புரை சுவரொட்டிகளை 300 க்கும் மேற்பட்ட வர்த்தக நிலையங்களில் இவர்களால் கிழிக்கப்பட்டுள்ளது

அடுத்த தலைமுறைக்கு வரலாற்றை கையளிக்கும் முறை இதுவா?

மக்களே முடிவு உங்கள் கையில்



பிறம்பு 2012



காலம் பதில் சொல்லும்





தமிழக செய்திகள்



சிங்கள கடற்படையினரால் சடலமாக மீட்கப்பட்ட மீனவர்? நீதிமன்ற உத்தரவின் பேரில் உடல் மறுகூறாய்வு

நவம்பர் 19, 2021

புதுக்கோட்டை மாவட்டம் கோட்டைப்பட்டினத்திலிருந்து கடந்த அக்டோபர் 18-ம் தேதி, சுரேஷ்குமார் என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் சுகந்தன், சேவியர், ராஜ்கிரண் ஆகிய மூன்று மீனவர்கள் கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர். 19-ம் தேதி 17 மைல் நாட்டிக்கல் தொலைவில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது, அங்கு வந்த இலங்கை கடற்படை எல்லைத் தாண்டி வந்து மீன்பிடித்ததாகக் கூறி, மீனவர்களின் படகை இடித்துச் சேதப்படுத்தியதில் விசைப்படகு நடுக்கடலில் மூழ்கியது. இதில், மீனவர் ராஜ்கிரண் மாயமானார் என்று கூறப்பட்டது. இந்த நிலையில், நெடுந்தீவு அருகே கடந்த மாதம் 20-ம் தேதி மீனவர் ராஜ்கிரணை இலங்கை கடற்படையினர் சடலமாக மீட்டனர். மீனவர் சடலமாக மீட்கப்பட்ட விவகாரம் பெரும் அதிர் வளைவுகளை ஏற்படுத்தியது.

ராஜ்கிரணின் உறவினர்கள் அவர் கடலில் மூழ்கி இறக்கவில்லை. இலங்கை ராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார் என்று குற்றம்சாட்டினர். மேலும், அவரின் உடலை உடற்கூறு ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தினார்கள். இதற்கிடையே, கடந்த மாதம் 23-ம் தேதி ராஜ்கிரணின் உடலை இலங்கை கடற்படையினர், இலங்கையில் உடல் கூறாய்வு செய்துவிட்டு, கோட்டைப்பட்டினத்துக்கு அனுப்பி வைத்தனர். அதையடுத்து, அவர் உடல் மறு உடல் கூறாய்வு செய்யப்படாமல் கோட்டைப்பட்டினத்தில் அடக்கம் செய்யப்பட்டது.



மீனவர் ராஜ்கிரண்

இறந்த ராஜ்கிரணின் மனைவி பிருந்தா, தன் கணவர் இறப்பில் சந்தேகம் இருப்பதாகக் கூறி ராஜ்கிரணின் உடலை மறு உடல் கூறாய்வு செய்ய வேண்டும் என, மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் வழக்குத் தொடர்ந்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள், ராஜ்கிரண் கடலில் மூழ்கி இறந்தாரா, அல்லது துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டு இறந்தாரா என்பதைத் தெளிவுபடுத்தும் வகையில், நவம்பர் 18-ம் தேதி ராஜ்கிரணின் பிரேதத்தை மறு உடல் கூறாய்வு செய்து, அந்த அறிக்கையை நீதிமன்றத்தில் வரும் 24-ம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டனர்.

அதன்பேரில் நேற்றிரவு, ஓய்வுபெற்ற தடயவியல் துறை பேராசிரியர் சேவியர் செல்வ சுரேஷ், மணமேல்குடி அரசு மருத்துவமனை மருத்துவர்கள், மணமேல்குடி வட்டாட்சியர் காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்டோர் முன்னிலையில் ராஜ்கிரணின் உடல் தோண்டி எடுக்கப்பட்டு, புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரியில் உடல் கூறாய்வு செய்யப்பட்டது. அதையடுத்து, மீண்டும் ராஜ்கிரணின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

தலைவர் ஆகி நின்ற தத்துவம் நம்மை வழி நடத்தட்டும்!–சீமான்

நவம்பர் 26, 2021



சென்னை: விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் 67-வது பிறந்த நாளை முன்னிட்டு நாம் தமிழர் கட்சியின் பிரதான ஒருங் கிணைப்பாளர் சீமான் அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார். தலைவர் ஆகி நின்ற தத்துவம் நம்மை வழி நடத்தட்டும்! தமிழீழம் என்கின்ற மாவீரர்களின் புனிதக்கனவு ஈடேறட்டும்! என்று அவர் தனது நீண்ட அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார். அறிக்கையின் சாரம்சம்:

‘உலக வரலாறு என்பதே சில தனி மனிதர்களின் வரலாறுதான்’ என்கிறார் இரசியப்புரட்சியாளர் லெனின். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தக்குடியான தமிழர் என்கிற தேசிய இனத்தின் வரலாறு என்பது ஒப்பாரும் மிக்காரும் இல்லாது மறத்தின்வழி நின்று அறத்தின் மொழியெடுத்து பேசிய சில தனி மனிதர்களின் இரத்தமும், தசையும் நிரம்பிய வாழ்வியலாலே எழுதப்பட்டு இருக்கிறது. சூழ்ந்து நிற்கும் வன்பகை நடுங்க, வேலெடுத்து பாய்ந்து, தாய் நிலம் காத்து நின்ற முப்பாட்டன் முருகன் பாரினுக்கே தெய்வம் ஆனான். அலைமிகுந்து ஓடும் நீரை ஓரிடத்தில் தேக்கி வேளாண்மை கண்டு விளைச்சல் அடைய முடியும் என்று என உலகத்திற்கு கற்பித்தான் நமது பாட்டன் கரிகால் பெருவளத்தான். பாறைகளே கிடைக்காத வண்டல் நிலத்தில் எங்கிருந்தோ கரும்பாறைகளை தூக்கிவந்து, எழில்மிகு சிற்பங்களாக செதுக்கி வைத்து, வானை முத்தமிடும் அளவிற்கு அடுக்கி வைத்து, தஞ்சை பெருவுடையாரால் வான்புகழ் கொண்டான் நமது பாட்டன் அருண்மொழிச்சோழன்.

இப்படி கணக்கற்றவர் தமிழின வரலாற்றுப் பெருமிதப்பக்கங்களில் தங்க எழுத்துக்களில் மிளிர்ந்தாலும், அவர்கள் அனைவரையும் தாண்டி ஒரு மடங்குமேலாக உயர்ந்து நின்று, தமிழின பெருமிதச்சிகரத்தில் வைரமாய் ஒளிர்பவர் நமது தேசியத்தலைவர் அன்பு அண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் மட்டும்தான்.

தாய்நிலம் மீட்க, தங்கள் உரிமை காக்கப் பொங்கியெழுந்து போராடப் புறப்பட்ட எத்தனையோ புரட்சிகர இயக்கங்கள் இந்த புவியில் உண்டு. எப்படியேனும் எதிரியை வீழ்த்த வேண்டும் என்பதில் கவனம் செலுத்தி, களத்தில் நின்ற போராளிகள் எங்கும் உண்டு. ஆனால், மானம் காக்க, மண்ணை மீட்க களத்தில் நின்றாலும், ஒரு துளி அளவிலும் அறத்தை இழக்காத மானமறவர் கூட்டம் உலகில் உண்டென்றால் அது எங்கள் தாய்நிலம் காக்கப் போராடிய தமிழீழத்தேசிய இராணுவமான விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டும்தான்.

அறம் வழிநின்ற ஆன்றோனாய், மறம் பாடும் வீரகளத்தில்கூட ஈர இதயம் கொண்ட சான்றோனாய் எங்கள் முன்னால் வாழ்ந்தார் தலைவர் பிரபாகரன் அவர்கள். இந்த உலகத்தில் வாழ்கிற எல்லா தேசிய இனங்களையும் போல தன்மானத்தோடு, தன்னுரிமையோடு வாழ, எங்களுக்கென்று உள்ளங்கை அளவு கொண்ட ஒரு நாடு என்கின்ற அடிப்படை மனித உரிமையை கோரித்தான் அடிமை மக்களின் ஆவேசக்குரலாய் எங்கள் தலைவர் களத்தில் நின்றார்.

ஈழம் என்பது அந்தத் தீவில் வசிக்கும் பூர்வக்குடி தமிழினத்திற்கான நாடு மட்டுமல்ல் இந்தப்பூமிப்பந்தில் வசிக்கும் 12 கோடி தமிழர் என்கின்ற தேசிய இனத்திற்கான தாய் வீடு என்பதை உலகத்திற்குக் காட்டவே தலைவர் பிரபாகரன் அவர்கள் வரலாறுகாணாத வீரம் செறிந்த ஒரு மாபெரும் போராட்டத்தை உலக வல்லாதிக் கங்களுக்கெதிராக ஒற்றை மனிதராக நின்று நிகழ்த்தினார். இரண்டு விழிகள் தான் ஆனால் எத்தனை கனவுகளோ என்பது போல, பிரபாகரன் என்கின்ற ஒற்றை மனிதன் ஆற்றலும், அறிவும் கொண்ட கற்றை மனிதர்களை புனித இலக்கிற்காக படையாகக் கட்டி நிமிர்ந்து நின்றார்.

‘உயிர் உன்னதமானது என்பதை நானறிவேன் ஆனால், அந்த உயிரைவிட உன்னதமானது எமது மதிப்பு எமது உரிமை எமது விடுதலை’ என முழங்கி, காலம் காலமாய் அடிமைப்பட்டுக் கிடந்த தமிழர்களை மீட்க, தாய்நிலம் காக்க, தமிழ்மொழி போற்ற, தன் உயிரை விதையாக விதைக்கும் இலட்சக்கணக்கான மாவீரர்களை தன் சமரச மில்லாத வாழ்வியலால், அறம் போற்றியப் போர்க்குணத்தால், பெற்றெடுத்த ஆண் தாயாக எங்கள் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் திகழ்ந்தார். தன் குடும்பம், தன் வீடு, தன் சொத்து என வாழ்ந்து வரும் தலைவர்களுக்கு மத்தியில் இன விடுதலைக்காக தன் இல்லத்தில் உதித்த மூன்று தலைமுறையையும் களத்தில் பலிகொடுத்து நாடு போற்றும் நாட்டார் தெய்வமாகவே மாறிப்போனவர் எங்கள் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

யாராலும் கனவில்கூட கட்டமுடியாத ஒரு நாட்டினை கட்டி, தமிழரின் காலந்தொட்ட களங்கமான சாதித்துயர் போக்கி, அடுக்களையில் முடங்கிக் கிடந்த பெண்ணை துவக்கேந்த வைத்துக் களத்தில் முன்னிறுத்தி பெண்ணிய விடுதலையை சாத்தியப்படுத்தி, வீதி எங்கும் முழங்கட்டும் நற்றமிழ் என தாய்த்தமிழ் காத்து, ஒழுக்கமும், விடுதலையும் ஒருங்கே நிறைந்த ஒரு தேசத்தை கட்டி, இப்படியும் ஒரு ஆட்சி நடக்குமா என்ற வகையில் அறம் வழுவாத புகழ் ஆட்சிசெய்து உலகத்தைத் திரும்பிப்பார்க்க வைத்தவர் எங்கள் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள். உலகில் எல்லோராலும் கைவிடப்பட்ட எம் தமிழ் இனத்தை அழிக்க புறப்பட்ட சிங்கள இனவாதப்படைகளுக்கு முன்னால் நிலம், நீர், வானம் என முப்படை கட்டி , காட்டுக்குள் இருந்தாலும் கணப்பொழுதில் விமானம்கட்டி விண்ணில் பறக்க வைத்து தமிழர் என்ற தொன்மை தேசிய இனத்திற்கு அடையாளமாக மாறிப்போனவர் எங்கள் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்.

எங்கள் நெஞ்சங்களில் நிறைந்து நின்று, எதனாலும் அடங்கிவிடாத ஆற்றலை, எதிரிகளை கலங்கச்செய்யும் மன உறுதியை, தாயக விடுதலை என்கிற புனித இலட்சியக்கனவை எங்களுக்குள் விதைத்துத் தத்துவமாக நிறைந்து , தலைவராக நின்று எங்களை வழிநடத்துபவர் என் உயிர் அண்ணன் எங்கள் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள்.

அவர் தான் எங்களது அடையாளம்! முகம் முகவரி என அனைத்துமே! எந்தப்புனிதக் கனவுக்காக என்னுயிர் அண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் இறுதிவரை களத்தில் அசைக்க முடியாத மனவுறுதியோடு நின்றாரோ, அந்த தாயக விடுதலை என்கின்ற புனிதக்கனவு நம் ஒவ்வொருவருக்கும் கையளிக்கப்பட்டு இருக்கிறது. தமிழீழத் தேசிய இராணுவமான விடுதலைப்புலிகள் என்கின்ற புனிதப்போராளிகளின் உயிரில் நிறைந்திருந்த தமிழீழம் என்ற இலட்சியநோக்கு உலகத்தமிழர்களின் உள்ளங்களுக்கு தலைவர் பிரபாகரன் அவர்களது அறமும், வீரமும் நிறைந்தப் புனித வாழ்வின் மூலம் நகர்த்தப்பட்டு இருக்கிறது.

அன்புத்தலைவர் ஆருயிர் அண்ணன் மேதகு வே. பிரபாகரன் அவர்களது 67-வது பிறந்த நாள் இன்று! தன் வாழ்வையே நமக்கு வழிகாட்டியாக அடையாளப்படுத்தி, இன விடுதலைப்போரில் சளைக்காமல் நிற்பதற்கான பற்றுறுதியை அவர் நமக்கு வழங்கி இருக்கிறார்.

அந்த மாறாப்பற்றுறுதியோடு, ஆயிரம் இடர்பாடுகள் எழுந்தாலும், உலகமே ஓரணியில் நின்று எதிர்த்தாலும் நம் தாயக விடுதலைக்கான இலட்சியப்பாதையில் இடை நின்றுவிடாது தொடர்ந்து முன்னேறுவோம் என்பதுதான் நம் தேசியத்தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களது பிறந்த நாளில் நாம் நம் உயிரை சான்றாகக் கொண்டு உள்ளத்தளவில் ஏற்க வேண்டிய உறுதியாகும்.

உலகத்தமிழர்கள் அனைவருக்கும் நமது தேசியத் தலைவர் அண்ணன் மேதகு வே.பிரபாகரன் அவர்களது 67 ஆவது பிறந்த நாளில் எனது உளப்பூர்வமான வாழ்த்துகளைத் தெரிவிப்பதில் அளப்பெரும் பெருமிதமும், உள்ளநெகிழ்ச்சியும் அடைகிறேன்!

என்று விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை, பிரபாகரனின் 67-வது பிறந்த நாளை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் சீமான் அவர்கள் தெரிவித்துள்ளார்

மாவீரர் நாள் நவம்பர் 27, தமிழ்நாடு









யாழ்ப்பாணம் – மாதகல் கிழக்கு பகுதியில் சிறீலங்கா ஆக்கிரமிப்பு கடற்படையினரின் தேவைக்காக தனியார் காணிகளை சுவீகரிக்கும் முயற்சி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.





தமிழீழ தேசிய தலைவர் மேதகு. வே. பிரபாகரனின் பிறந்த நாளை யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரகசியமாக கொண்டாடினர்.

தமிழீழ தேசிய தலைவர் மேதகு. வே. பிரபாகரனின் 65 வது பிறந்த நாளை முன்னிட்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் 26.11.2021 அன்று நடைபெற்ற இரகசிய நிகழ்வில் மாணவர்கள் கேக் வெட்டி கொண்டாடினர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அவரது உருவப்படத்திற்கு முன்பாக மாணவர்கள் கேக் வெட்டி பிறந்தநாள் கொண்டாடினர். சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தின் அடக்குமுறைக்கு மத்தியில், கடந்த வருடங்களில் மிகவும் சிறப்பாகவும் விரிவான கொண்டாட்டங்கள் இடம்பெற்றிருந்த நிலையில்,





பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் உறவினர்கள் 100க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்

நவம்பர் 29, 2021

வடக்கு கிழக்கு முழுவதும் பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் உறவினர்களின் சங்கங் களைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் நீதிக்கான போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து உயிரிழந் துள்ளனர்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர்கள், இதில் பெரும்பாலும் தாய்மார்கள் மற்றும் மனைவிகள் உட்பட, தங்கள் மகன்கள் மற்றும் கணவர்களின் இருப்பிடத்தை அறியக் கோரி, நீதி கோரி பல ஆண்டுகளாக போராடி வருகின்றனர்.

போராட்டங்கள் தொடங்கியதில் இருந்து இதுவரை 108 பேர் பல்வேறு நோய்கள் மற்றும் உடல்நலக்குறை வால் உயிரிழந்துள்ளனர் என்று சங்கள உறுப்பினர் கள் தெரிவித்தனர். வவுனியா மாவட்டத்தில் மாத்திரம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்தக் குடும்பங்கள் சர்வதேச சமூகத்தின் ஆதரவைக் கோருகின்றன. சிங்கள ஆக்கிரமிப்பு அரசாங்கம் சமீபத்தில் குடும்பங்களுக்கு இழப்பிடு வழங்க பரிந்துரைத்த போது, உறுப்பினர்கள் அவர்களை விலைக்கு வாங்கும் முயற்சி என்றும், உண்மையைத் தேடுவதில் தொடர்ந்து ஈடுபடுவது என்றும் கண்டித்



தனர்.

உலக செய்திகள்

சிறீலங்கா பொலிஸாருக்கு தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்கப்போவதில்லை

ஸ்கொட்லாந்து பொலிஸ் அறிவிப்பு

நவம்பர் 24, 2021

மனித உரிமை கரிசனைகள் காரணமாக சிறீலங்கா பொலிஸாருக்கு பயிற்சிகளை தொடர்ந்தும் வழங்கப்போவதில்லை என ஸ்கொட்லாந்து பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சிறீலங்கா பொலிஸாருக்கு பயிற்சிவழங்குவது குறித்த ஒப்பந்தம் 2022 இல் முடிவடைந்த பின்னர் அதனை புதுப்பிக்கப்போவதில்லை என ஸ்கொட்லாந்து பொலிஸ் அறிவித்துள்ளது.

இடைக்கால பகுதியில் சிறீலங்காவுக்குகு விஜயம் மேற்கொள்ளப்போவதில்லை எனவும் ஸ்கொட்லாந்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஆங்கில கால்வாயில் குடியேற்றவாசிகளின் படகு மூழ்கியதில் 25 பேர் பலி

நவம்பர் 23, 2021

ஆங்கில கால்வாயில் குடியேற்றவாசிகளின் படகு மூழ்கியதில் பலர் உயிரிழந்துள்ளனர்.

ஆங்கில கால்வாயை கடக்க முயன்றவேளை ஏற்பட்ட விபத்து காரணமாக இந்த உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. பிரிட்டனிற்குள் நுழையும் நோக்கத்துடன் படகில் பயணித் துக்கொண்டிருந்த குடியேற்றவாசிகள் கலைஸ் பகுதியில் உயிரிழந்துள்ளனர்.

20 பேர் உயிரிழந்துள்ளனர் என பொலிஸாரை மேற கோள் காட்டி ஏஎவ்பி செய்தி வெளியிட்டுள்ளது.

மீனவர்கள் எச்சரிக்கை விடுத்ததை தொடர்ந்து தங்களிற்கு இந்த விடயம் தெரியவந்ததாக தெரிவித்துள்ள கரையோர காவல்படையினர் மீட்பு பணிகள் இடம்பெறுவதாக தெரிவித்துள்ளனர். 24உடல்களை மீட்டுள்ளோம் 20 பேரை உயிருடன் மீட்டுள்ளோம் என டெட்டெஹெம் மேயர் பிராங்டெர்சின் தெரிவித்துள்ளார்.

இது பெரும் துர்நிகழ்வு என தெரிவித்துள்ள பிரான்ஸ் பிரதமர் குற்றவாளிகளான ஆட்கடத்தல்காரர்களின் நடவடிக்கைக்கு மக்கள் பலியாகியுள்ளனர் என குறிப்பிட்டுள்ளார்.
பிரான்சின் உள்துறை அமைச்சர் கலைஸ் பகுதிக்கு செல்வதாக டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.



உலகப்பந்தில் தமிழீழத் தனியரசு தனக்கான இடத்தைப் பிடிக்கும் – வி. உருத்திரகுமாரன்

நவம்பர் 21. 2021

உலகின் புவிசார் அதிர்வுகளிள் விளைவாகவும், சுதந்திர வேட்கையின் பயனாகவும், உலகப்பந்தில் ஒரு நாள் தமிழீழத் தனியரசு தனக்கான இடத்தைப் பிடிக்கும் என தமிழீழ தேசியக்கொடி நாள் உரையில் தெரிவித்திருந்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திர குமாரன், அப்போது தமிழீழத் தேசத்தின் கொடி தமிழீழ நாட்டுக்கான கொடியாகவும் உலகப்பரப்பெங்கும் பட்டொளி வீசிப்பறக்கும் தெரிவித்துள்ளார்.

உலகில் அமைந்துள்ள தேசங்கள் எல்லாம் தமக்கான தொரு தனியரசை இதுவரை அமைத்துவிடவில்லை. அரசாக அமைந்த தேசங்கள் மட்டுமன்றி அரசற்ற தேசங்களும் தமது விடுதலையை அவாவை தமது தேசியக் கொடிகள் மூலம் வெளிப்படுத்தி நிற்கிறார்கள் எனவும் வி. உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார்.

இன்று தமிழீழத் தேசியக்கொடி நாள்.

1990 ஆம் ஆண்டு இரண்டாவது மாவீரர் நாளையொட்டி நமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களால் இதே நாளில் தமிழீழத் தேசியக்கொடி பிரகடனம் செய்யப்பட்டதை மனதில் நிறுத்தி அத் தேசியக்கொடியை அதற்குரிய அனைத்து மரியாதையோடும் போற்றிக் கொண்டாடும் வகையில், 2021 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 21 ஆம் நாளை, தமிழீழத் தேசியக்கொடி நாளாக நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை பிரகடனம் செய்திருக்கிறது.

தமிழீழத் தேசியக் கொடி அறிமுகம் செய்யப்பட்டமை குறித்து அந்நேரம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு தமது பத்திரிகையான விடுதலைப்புலிகள் பத்திரிகையில் – தேசிய சுதந்திரத்தை வேண்டி நிற்கும் ஒரு மக்கள் சமுதாயத்துக்கு ஒரு தேசியக்கொடி இன்றியமையாதது. தேசிய தனித்துவத்தையும், ஒருமைப்பாட்டையும், இறைமையையும் ஒரு தேசியக்கொடி சித்தரித்துக் காட்டுகிறது. தேசாபிமானத்தின் சின்னமாகவும் அது திகழ்கிறது. அரசியல் சுதந்திரத்தின் ஆணிவேரான குறியீடாகவும் தேசியக்கொடி அமைகிறது - என முரசறைந்திருந்தது.

தேசியக்கொடியின் நிறங்களாக மஞ்சள், சிவப்பு கறுப்பு நிறங்கள் அமைந்திருப்பதற்கான காரணங்கள் குறித்தும் விடுதலைப்புலிகள் அமைப்பு மக்களுக்கு விளக்கம் அளித்திருந்தது.

தமிழீழ மக்களுக்கு ஒரு தாயகம் உண்டு. அந்தத் தாயகம் அவர்களது சொத்துரிமை. தமிழீழ மக்கள் தனியான தொரு தேசிய இனம் என்பதால் அவர்களுக்கு தன்னாட்சி உரிமை உண்டு. இந்தத் தன்னாட்சி உரிமை அவர்களின் அடிப்படையான அரசியல் உரிமை. தமது தாயகத்தை மீட்டெடுத்து. தன்னாட்சி உரிமையினை நிலை நிறுத்துவதற்காகத் தமிழீழ மக்கள் மேற்கொண்டுள்ள போராட்டம் அறத்தின்பாற்பட்டது. மனித தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்பதனை மஞ்சள் நிறம் சுட்டி நிற்கிறது எனவும்,

தேசிய சுதந்திரம் பெற்று தமிழீழத் தனியரசை அமைத்து விட்டாற்போல நாம் முழுமையான சுதந்திரம் பெற்றதாகக் கொள்ள முடியாது. தமிழீழ சமுதாயத்தில் உள்ள ஏற்றத் தாழ்வுகள் ஒழிக்கப்பட வேண்டும். வர்க்க சாதிய முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண்அடிமைத்தனம் நீக்கப்பட வேண்டும். அதற்கு சமுதாயத்தில் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவரவேண்டும். சமத்துவமும் சமதர்மமும் சமூகநீதியும் நிலைநாட்டப்பட வேண்டும். இப்படியான புரட்சிகரமான மாற்றத்தை வேண்டிய அரசியல் இலட்சியத்தை சிவப்பு நிறம் குறியீடு செய்கிறது எனவும், விடுதலைப்பாதை கரடுமுரடானது. சாவும் அழிவும் தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இத்தனையையும் தாங்கிக் கொள்ள இரும்பு போன்ற இதயம் வேண்டும். அசைக்க முடியாத நம்பிக்கை வேண்டும். அதற்கு என்றும் தளராத உறுதி வேண்டும். கறுப்பு நிறம் மக்களின் மனஉறுதியினைக் குறித்துக் காட்டுகிறது எனவும், தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மக்களுக்கு விளக்கம் அளித்திருந்தது.

தமிழீழ மக்களின் சுதந்திரவேட்கை அறத்தின்பாற்பட்டது என்பதன் குறியீடாய், தேசிய விடுதலை மட்டுமன்றி சமூக விடுதலையை எட்டியவர்களாய் தமிழீழ மக்கள் வாழ்வதற்கு சமத்துவமும் சமூகநீதியும் நிலவும் புரட்சிகர சமூகத்தை உருவாக்கும் அரசியல் இலக்கின் குறியீடாக, எத்தனை தடைகள் வந்தாலும் அவற்றை எதிர்கொண்டு விடுதலையை அடைய வேண்டும் என்ற மக்களின் உறுதியின் குறியீடாக அன்றுமுதல் எமது தமிழீழத் தேசியக்கொடி நிமிர்ந்து நிற்கிறது.

நமது தமிழீழத் தேசியக்கொடியினை தமிழீழ மக்கள் அனவரும் உணர்வோடும் எழுச்சியோடும், தமிழீழத் தனியரசை அமைத்திடும் உறுதியோடும் நம் கைகளில் ஏந்தி நிற்க வேண்டும்.

அன்பான மக்களே,

தேசியக்கொடி என்பது தேசங்களின் கொடி. அந்தத் தேச மக்களின் கொடி. உலகில் அமைந்துள்ள தேசங்கள் எல்லாம் தமக்கானதொரு தனியரசை இதுவரை அமைத்து விடவில்லை. அரசாக அமைந்த தேசங்கள் மட்டுமன்றி அரசற்ற தேசங்களும் தமது விடுதலையை அவாவை தமது தேசியக் கொடிகளை ஏந்தி நிற்கிறார்கள்.

உலகில் உள்ள தேசங்களின் மக்கள் தமது தேசப்பற்றை வெளிப்படுத்தவும், தம் தேசத்தை உலக அரங்கில் பிரதி நிதித்துவம் செய்யவும், தமது தேசங்களின் பெருமையினைக் கொண்டாடுவதற்கும் கொடியை ஏந்தி நிற்பார்கள். தேசங்களின் மகிழ்வின் போது தேசியக்கொடியினை தலைநிமிர்த்தியும் துயரத்தின் போது தலைதாழ்த்தியும் தமது உணர்வினை வெளிப்படுத்திக் கொள்வார்கள்.
தமிழீழ மக்களுக்கு எமது தாயகத்தில் இத் தேசியக் கொடியினை ஏந்தி நிற்கும் உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது. 2009 ஆம் ஆண்டு மே மாதம் முதல் எமது தமிழீழ தேசம் சிங்கள பௌத்த பேரினவாதப்பூதத்தின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் தமிழீழத் தேசியக்கொடியினை ஏந்தி நிற்கும் அடிப்படை அரசியல் உரிமை எமது மக்களுக்கு மறுக்கப்பட்டிருக்கிறது.

தாயகத்தில் வாழும் தமிழீழ மக்கள் தமிழீழத் தேசியக் கொடியினை ஏந்தி நிற்கும் உரிமையினை நாம் மீட்டெடுக்க வேண்டும்.

நம் தேசத்தின் தேசியக் கொடியினை, நமது மாவீரர்கள் ஏந்தி நின்ற கொடியினை, உலக வரலாறு கண்டிராத வீரத்தினதும் ஈகத்தினதும் குறியீடாக அமைந்திருக்கும் நமது தேசியக் கொடியினை, போர்க்களத்தில் நமது வீரர்கள் அடைந்த வெற்றிகளின்போது பட்டொளி வீசிப்பறந்த நமது தேசியக்கொடியினை, தமிழீழ தேசத்தின் தேசிய நிகழ்வுகளில் எல்லாம் தேசியக்கொடிப் பாடலுடன் கம்பீரமாக ஏறிநின்ற நமது தேசியக்கொடியினை, புலம் பெயர் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் தத்தமது நாட்டுக் கொடிகளுக்கு நிகராக ஏற்றி மகிழ்ந்து கொண்டாடி வரும் கொடியினை, மாவீரர் நாளில் நாம் வணங்கி நிற்கும் கொடியினை, நாம் இன்றைய நாளில் தமிழீழத் தேசியக் கொடிக்குரிய நாளாக இந்நாளைப் பிரகடனம் செய்து ஒன்று கூடி எமது கொடியினை பெருமையுடன் ஏந்தி நிற்கிறோம் என்பது எத்தனை தடைகள் வந்தாலும் மனித அறத்தின் பாற்பட்ட தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமையின் அடிப்டையில் அமைந்த தனியரசு அமைக்கும் உரிமையினையும், சமூகநீதி நிலவும் சமூகத்தைப் படைப்பதில் எமக்குள்ள பற்றுறுதியினையும், எமது மக்களின் தளராத மனஉறுதியினையும் எவராலும் தகர்க்க முடியாது என்பதனை உலககெங்கும் முரசறைந்து கொள்வதற்குத்தான்.

எமது மக்கள் மீதான அனைத்து அடக்குமுறைகளையும் நாம் உடைத்தெறியத் திடசங்கற்பம் பூண்டிருக்கிறோம் என்பதன் வெளிப்பாடாய் தான் நாம் தமிழீழத் தேசியக் கொடியினை ஏந்தி நிற்கிறோம். சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழீழத் தனியரசு அமையப்போவது காலத்தின் நியதி. வரலாற்றின் கட்டாயம். உலகின் புவிசார் அதிர்வுகளிள் விளைவாக, தமிழீழ மக்களின் சுதந்திரவேட்கையின் பயனாக ஒரு நாள் உலகப் பந்தில் தமிழீழத் தனியரசு தனக்கான இடத்தைப் பிடிக்கும்.

அப்போது தமிழீழத் தேசத்தின் கொடி தமிழீழ நாட்டுக்கான கொடியாகவும் உலகப்பரப்பெங்கும் பட்டொளி வீசிப்பறக்கும்.

யுத்தத்தில் இறந்தவர்களை நினைவுகூர்வதற்கான உரிமை தமிழர்களிற்கு உள்ளது பிரிட்டனின் தொழில் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சாம் டரி

நவம்பர் 27, 2021

இலங்கை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கான தருணம் இது தமிழ் மக்கள் இனப்படுகொலையை எதிர் கொண்டுள்ளனர், நீதி மற்றும் சுயநிர்ணய உரிமைக் கான தமிழ் மக்களின் போராட்டத்தில் தொழில் கட்சி என்றும் அவர்களிற்கு ஆதரவாகயிருக்கும்





பிரித்தானியாவில் தமிழ் குடும்பம் தீயில் கருகியது தாய், 2 பிள்ளைகள், பாட்டி பலி!

நவம்பர் 20, 2021

பிரித்தானியா, தென்கிழக்கு லண்டனில் உள்ள பெக்ஸ் லிஹீத்தில் உள்ள வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 4 இலங்கையர்கள் தீயில் கருகி உயிரிழந்தனர். இளம் தாய், அவரது 4,1 வயதான பிள்ளைகள், பாட்டி ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

வீடு தீப்பற்றியதும், இளம் தாய், தனது கைத்தொலை பேசி செயலிழப்பதற்கு முன்னதாக, கணவரை தொடர்பு கொண்டு, 'நெருப்பு...நெருப்பு' என கதறியுள்ளார்.

தீயணைப்பு படையினர் பகீரத பிரயத்தனப்பட்ட போதும், வீட்டிலிருந்த 4 பேரை காப்பாற்ற முடிய வில்லை. உயிரழந்த இளம் தாயின் சகோதரன், மேல் மாடியிலிருந்து குதித்து தப்பித்தார். அவர் கால்கள் உடைந்துள்ளன.


தனது மனைவி, 4,1 வயதுடைய பிள்ளைகள், மாமி யாரை பறிகொடுத்த கணவன், தீயில் கருகிய வீட்டின் முன்பாக கதறியழுது, சரிந்து விழுந்த காட்சிகளை பிரித்தானிய ஊடகங்கள் ஒளிபரப்பின.

அவரது மனைவியின் தாயார் இன்று இலங்கைக்கு திரும்பவிருந்தார். இதற்காக மாடியில், அவரது பயண பொதிகளை கட்டிக் கொண்டிருந்த போது, இந்த தீ விபத்து நேர்ந்துள்ளது.

எனினும், தீ விபத்து எப்படி ஏற்பட்டது என்பது இன்னும் உறுதியாகவில்லை. குழந்தைகள் இருவரும் படுக்கையிலே யே உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.







உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கருகிய வீட்டிற்கு வெளியில் இன்று கண்ணீருடன் கூடியிருந்தனர். அந்த பகுதி மக்களும் மலரஞ்சலி செலுத்தினார்கள்.

இந்தோனேசியாவில் வீதிக்கு இறங்கிய தமிழர்கள்!

நவம்பர் 15, 2021

ஈழத்தில் கடந்த பல தசாப்தங்களாக பேரினவாத சிறீலங் கா அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் தமிழின அழிப்பு நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்டு இலட்சக்கணக்கான தமிழர்கள் உலக நாடுகளெங்கும் ஏதிலிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

அந்தவகையில், கடந்த 2009ம் ஆண்டில் இருந்து நாட்டை விட்டு வெளியேறி இந்தோனேசியாவில் அகதி களாக வாழ்ந்து வரும் தமிழர்கள் இம்மாதம் 08 திகதியில் இருந்து மெடான் நகரில் அமைந்துள்ள UNHRC அலுவலகம் முன்பாக மாபெரும் கண்டனப் போராட் டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

தமிழர்கள் போலவே பல்வேறு நாடுகளின் அகதிகளும் இந்தோனேசியாவில் தஞ்சமடைந்துள்ளனர்.இவர்கள் அனைவரும் ஐ.நா வின் அகதிகளுக்கான நிறுவனத்தில் பதிவு செய்வதன் மூலம் மீள்குடியேற்ற நடவடிக்கை ஊடாக அங்கிருந்து ஐ.நா வின் அகதிகளுக்கான உடன் படிக்கையில் கைச்சாத்திட்ட மூன்றாம் நாடுகளில் குடியேற் றப்பட்டு வருகின்றனர்.

இந்த வசதி கடந்த 2014 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் ஏதிலி களுக்கு மறுக்கப்பட்டு வருகின்ற காரணத்தினாலேயே தாம் இப்போராத்தினை முன்னெடுத்து வருவதாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் UNHRC அதிகாரிகளிடம் தாம் பேசிய போது தமிழ் அகதிகளை ஏற்றுக்கொள்ள எந்தவொரு நாடும் முன்வரவில்லை என வாய்மூலமாக தெரிவிக்கின் றார்களோ தவிர சட்டபூர்வமாக எந்தவொரு அறிவித் தலையும் இதுவரை தமக்கு வழங்கவில்லையெனவும், ஏனைய நாடுகளைச் சேர்ந்த ஏதிலிகள் அனைவரும் சீரான முறையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மிகுந்த மன உளைச்சலுடன் அவல வாழ்க்கையை வாழ்ந்து வரும் தமிழ் ஏதிலிகளின் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளமையை கருத்தில் கொண்டு, மீண்டும் தமிழ் ஏதிலிகளை ஐ.நா வின் மீள்குடியேற்ற திட்டத்தில் உள்வாங்கும் படியும் மற்றைய நாட்டு ஏதிலிகள் போல தமக்கான உரிமையையும்,பெற்றுதருமாறு கோரியுமே தாம் இப்போராட்டத்தினை முன்னெடுத்து வருவகாக தெரிவித்துள்ளனர்.

மேலும் தமது நிலை குறித்து புலம்பெயர் வாழ் தமிழர்கள் தாம் வாழும் நாடுகளின் அரசுகளுக்கும், அகதிகளின் உரிமை சார்ந்து செயற்படும் நிறுவனங்களுக்கும் எடுத் துரைத்து மீள்குடியேற்ற நடவடிக்கையில் ஈழ ஏதிலிகளை மீளவும் இணைத்துக்கொள்ளும் படி ஐ. நா விற்கு அழுத்தம் கொடுத்து தமது இருப்பினை உறுதி செய்யுமாறு புலம்பெயர் தமிழ் சமூகத்திடம் கேட்டுக்கொண்டுள்ளனர்.









தமிழீழ மாவீரர் நாள் – உலகப்பரப்பில் நவம்பர் 27, 2021


பிரான்சு


ஸ்ருட்காட், யேர்மனி


சிட்னி, அவுஸ்ரேலியா


கான்பரா, அவுஸ்ரேலியா


பேர்த், அவுஸ்ரேலியா


தஸ்மானியா, அவுஸ்ரேலியா


மெல்பேர்ண், அவுஸ்ரேலியா


வூப்பெற்றால், யேர்மனி


பிரித்தானியா


கிளாஸ்கோ, ஸ்கொட்லாந்து


நோர்வே


லண்டன், பிரித்தானியா


ஆக்ஸ்போர்டு, பிரித்தானியா





குயின்ஸ், நியூயார்க்


றீயூனியன்


ஒட்டாவா, ஒன்டாரியோ, கனடா


நியூசிலாந்து



MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private 1st Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

MORTGAGE IN ANY SITUATION

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

ஜெ(Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843



எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto ON M3C 1W3

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto ON M2J 5B4

Manaja

manajaskitchen.ca

MANAJA'S KITCHEN

A Fusion of Indian & Sri Lankan Cuisine



மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.

Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party



அனைத்து தாயக சைவ
மற்றும் அசைவ உணவுகளுக்கு
உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த
அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட
நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள
அழையுங்கள்

FREE Delivery for orders over $150 in GTA

75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4

905.427.8263



BOROS CANADIAN
PAPER CONVERTING INC.



Alan Maniam
Director

647 299 2450

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

இந்தியாவிற்கு ஏற்பட்ட பெருதோல்வி: தலையில் அடிக்கப்படும் ஆணி



இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான மறுநாள், ராஜீவ் காந்தி டெல்லிக்கு புறப்பட்டார். அவரை வழியனுப்பி வைக்கும் வகையில், அரச தலைவர் ஜெயவர்த்தனாவின் மாளிகையில் இலங்கை கடற்படை அணி வகுப்பு நடந்தது. அந்த அணி வகுப்பு மரியாதையை ராஜீவ் காந்தி ஏற்க சென்றார்.

முதல் வரிசையில் நின்ற வீரர்களின் அணிவகுப்பை ஏற்றுவிட்டு திரும்ப முயன்றார். அப்போது இலங்கை கடற்படை சிப்பாய் ஒருவர் திடீரென்று பாய்ந்து வந்து, தனது துப்பாக்கியை திருப்பி, துப்பாக்கிக் கட்டையால் ராஜீவ் காந்தியை தாக்கினார் துப்பாக்கிக் கட்டை, ராஜீவ் காந்தியின் இடது தோளில் பட்டு தரையில் விழுந்தது.

அதிர்ச்சியில் உறைந்துபோன ராஜீவ் கொஞ்சம் முன்னே வேகமாக நடந்து சென்று திரும்பி பார்த்தார். இதற்குள், ராஜீவ் காந்தியின் பாதுகாப்புக்குச் சென்ற அதிகாரிகள் பாய்ந்து சென்று, துப்பாக்கியால் தாக்கிய சிப்பாயை கீழே தள்ளினார்கள் இவ்வாறு ராஜீவ் காந்தியை தாக்கிய வரின் பெயர் விஜித ரோதன. அவரிடம் ராஜீவை ஏன் தாக்கினீர்கள் என்பதற்கு விஜித ரோதன சொன்ன பதில் இதுதான்.

சிங்களவர்களை அச்சுறுத்தும் சட்டம்

"இன்றைக்கு நான் அந்நியனான ராஜீவுக்கு மரியாதை செலுத்த வேண்டும். இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் பிரபாகரனுக்கு மரியாதை செலுத்த வேண்டிய நிலை வரும்". இந்த எண்ணத்தை சிங்கள மக்கள் மத்தியில் விதைத்திருக்கும் 13 ஆம் திருத்த சட்டத்தின் முக்கிய சரத்துக்கள் கீழ்வருபவைதான்.

இலங்கை பல மொழிகளையும், பல இனங்களையும் கொண்ட பன்முகச் சமூகம் என ஏற்றுக் கொள்ளல், அனைத்து இனக்குழுமங்களையும் பேணிப்பாதுகாக்க வேண்டிய, குறிப்பாக கலாசார மொழி அடையாளம் உண்டென்பதை அங்கீகரித்தல்,வடக்கு கிழக்கு மாகாணங்கள் தமிழ் பேசும் மக்கள் வரலாற்று ரீதியாக வாழும் பிரதேசம் என ஏற்றுக் கொள்ளளல், வடக்கு கிழக்கு மாகாணத்தை ஒன்றிணைத்து ஒரு நிர்வாக மாவட்டமாக்குதல்.

தேவைப்படும் போது பொதுசன வாக்கெடுப்பை நடத்தி இரண்டு மாகாணமாகப் பிரித்தல் என்பவையே 13ஆம் திருத்தத்தின் பிரதான சரத்துக்கள். இந்த முன்வைப்புக்கள் இலங்கைத் தீவில் தமிழர் விரோதப்போக்கு அதிகரிக்கவும், சிங்களவர்கள் இந்தியா மீதுகொண்டிருக்கும் பயவுணர்வை தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளவும் பிரதான காரணியாக இருந்து வருகின்றன.

சட்டம் சொன்ன எதுவும் இல்லை ஆனால், 13 ஆம் திருத்தம் குறிப்பிடும் முக்கிய விடயங்களில் எந்த அம்சமும் இலங்கையில் இப்போது இல்லை. அனைத்தும் திட்டமிட்டே அழிக்கப்பட்டுவிட்டன. வலு விழக்கச்செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கு மதிப்பு தரவல்ல நிர்வாக நடைமுறைகளைக் காண்பதரிது. சிங்கள மொழிக்கும், பௌத்த கலாசாரத்துக்குமே முதன்மையளிக்கப்பட்டு வருவதை யாதார்த்த வாழ்வில் அவதானிக்கமுடியும்.

வடக்கு கிழக்கு தமிழரின் பூர்வீக பிராந்தியம் என்பதை ஏற்கும் மனநிலையில் எந்த சிங்கள அரசியல் வாதியும் இல்லை. சிங்கள மக்களும் இல்லை. கடந்த மாகாண சபையின் ஆட்சியின்போது சுயாதீனமாக செயற்படவல்ல ஒரு நிதியத்தைக் கூட அமைக்கமுடியாதளவுக்கு முதலமைச்சர் திணறினார். காணி அதிகாரமோ, பொலிஸ் அதிகாரமோ வாய்ப்பேச்சில் கூட நடைமுறையில் இல்லை.

மாகாணங்களின் நிர்வாக விடயங்களில் தலையிடும் உச்சபட்ச அதிகாரத்தை அரச அதிபரின் விருப்பத்தெரிவான ஆளுநரே கொண்டிருக்கிறார். எனவே மாகாண சபை முறையே தோல்வி கண்டுவிட்டது. இந்நிலையில் இந்தியாவும், அத்தேச நலன்களுக்கு சிறு கீறல்விழாது காப்பாற்றப்போராடும் ஈழத் தமிழ் தேசிய அரசியல் தரப்புக்களும் 13 திருத்த சட்டத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டிருப்பது ஏன்?

இந்தியாவின் அரசியலே 13

இலங்கைத் தீவில் தனது பிடி எப்போதெல்லாம் கைநழுவிப் போகுமளவிற்கான சூழல் உருவாகிறதோ, அப்பொழுதெல்லாம் 13 ஆம் திருத்தம் மீதான அக்கறையை - அழுத்தத்தை இந்தியா வெளிப்படுத்திவருவதை அவதானிக்கலாம். இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் இத்தகைய அழுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இறுதிப் போர் 2009 ஆம் ஆண்டில் முடிவுற்றவுடன், இத்தீவின் புவிசார் அரசியலை மையப்படுத்தி சீனா - அமெரிக்கா - இந்தியா நாடுகளிடையே ஏற்பட்ட அரசியல் போட்டியின் போது 13 ஆம் திருத்தத்தை நடைமுறைப்படுத்தியே ஆகவேண்டும் என இந்தியா விடாப்பிடி பிடித்தது. இந்தப் பிடிவாதத்தில் கொதித்தெழுந்த சிங்கள கடுந்தேசியவாத கட்சிகள், அமைப்புகள் இணைந்து நடத்திய போராட்டங்கள், இணைந்திருந்த வடக்கு கிழக்கு மாகாணங்களைத் தனித்தனியாகப் பிரிப்பதற்கு வழிகோலின.

இது இந்தியாவுக்கு ஏற்பட்ட இரண்டாவது பெருந்தோல்வி. 13 ஐ மையப்படுத்திய இரண்டாவது அழுத்தம் 2013, 2014 ஆம் ஆண்டுகளில் கொடுக்கப்பட்டது. சீனாவின் ஆதிக்கம் கொழும்பு, ஹம்பாந்தோட்டை என நிரந்தரமாக விஸ்தரிக்கப்பட்ட ஆண்டுகள் அவை. அந்த அழுத்தத்திற்கும் அப்போது ஆட்சியிலிருந்த ராஜபக்சக்கள் அடிபணியாமையினால் ஆட்சிமாற்றமே நிகழ்த்தப்பட்டது.

இருந்ததையும் களவாடிய நல்லாட்சி

2015 இல் இந்தியா - அமெரிக்க நலன்களுக்குத் துணைபோகும் நல்லாட்சி உருவாக்கப்பட்டது. 13 பிளஸ் அளவிற்குத் தீர்வு விடயங்கள் பேசப்பட்டன. ஆனால் களத்தில், 13 ஆம் திருத்தத்தை மேலும் வலுவிழக்கச்செய்யும் ஆட்சியாகவே நல்லாட்சியும் மாறியது. வடக்கில் அமைந்திருந்த இந்தியாவுக்கு ஆதரவான தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாகாண சபை ஒரு புள்ளியளவுக்குக் கூட நகரமுடியாதளவுக்கு இருந்தது.

முதலமைச்சருடன் "கோவிச்சிக்கொண்ட" உறுப்பினர்கள் நேரடியாகவே ஆளுநரிடம் முறையிடும் நிலையில் அதிகாரம் கோலோச்சியிருந்தது. போரில் அழிவுண்டிருந்த வடக்கு மாகாணத்தை பொருளாதார ரீதியில் மேம்படுத்தும் நோக்குடன் நிதியம் ஒன்றை ஆரம்பிக்கும் முயற்சியில் இறங்கியிருந்த முதலமைச்சர் அதில் பெருந்தோல்வியையே சந்தித்தார்.

தொழில் பிணக்குகள், காணிப் பிணக்குகள் கிடப்பிலேயே கிடந்தன. வடக்கின் பண்பாட்டம்சங்களை மாற்றும் நோக்குடன் 1000 பௌத்த மையங்கள் அமைக்க முயற்சிகள் நடந்தன. இந்தக் காலப் பகுதியில் மத்திய அரசின் கீழிருந்த காவல்துறையினர் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைச் சுட்டுக்கொன்றனர். அவ்வேளையில் ஆறுதலுக்காகக் கூட மாகாண காவல்துறை அதிகாரத்தின் தேவைகள் குறித்து இந்தியாவோ, தமிழ் தேசிய தரப்புக்களோ வாய்திறக்கவில்லை.

இந்தியாவுக்கு ஏற்பட்ட கிலி

2020 ஆம் ஆண்டில் மீளவும் ஆட்சி ராஜபக்சக்களின் கைக்கு மாறிவிட்டது. என்றுமில்லாத வகையில் சீன ஆதிக்கம் இலங்கை தீவில் ஏற்பட்டிருக்கிறது. கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தைக் கூட இந்தியாவுக்கு வழங்க முடியவில்லை. ஆனால் இலங்கையின் வரைபடத்தையே மாற்றுமளவுக்கு துறைமுகநகரமொன்றை கொழும்பில் சீனா அமைத்துவிட்டது.

அதற்கு சட்ட ரீதியான அந்தஸ்த்தை தரவல்ல நாடாளுமன்ற ஆணையையும் சீனா பெற்றுவிட்டது. அதுமட்டுமல்லாது இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் தலையிட்டு அவற்றைக் கட்டுப்படுத்துமளவுக்கு சீனாவின் அதிகாரத் தலையீடு நடந்திருக்கிறது.

இவ்வாறாக இலங்கையின் தென்பகுதி சீனாவினது ஆதிக்கத்திற்குப் போனாலும், நமக்குத்தான் வடக்கு, கிழக்கு பகுதிகள் உள்ளனவே, பார்த்துக்கொள்ளலாம் என்றிருந்த இந்தியாவுக்கு, வடக்கு மாகாணத்தின் தீவுக்கூட்டங்களும் சீனாவுக்கு வழங்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன என்ற செய்தி கிலியை ஏற்படுத்தியது.

அதன்பிறகுதான் மீண்டும் 13 ஆம் திருத்தம் பற்றிய பேச்சு 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மூன்றாம் தடவையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை 13 ஆம் திருத்தத்தை ஆதரித்துவந்த தமிழரசுக்கட்சி தவிர ஏனைய கட்சிகளை இந்தியா ஒருங்கிணைத்திருக்கிறது.

கூழ்முட்டைத்தனமான அரசியல்

இந்தக் கட்சியினர் அனைவரும் ஒன்றாக இணைந்து, இலங்கை இனப்பிரச்சினை தீர்வின் தொடக்கப் புள்ளியாகப் 13 ஐ கொள்ளுங்கள் என சர்வதேசத்திடம் - இந்தியாவிடம் - இலங்கையிடம் மன்றாடு மாறு பணிக்கப்பட்டுள்ளனர்.

கால மாற்றத்தையும், இலங்கையில் உருவாகியிருக்கும் இனவொடுக்குமுறையின் புதிய வடிவங்களையும் நுணுக்கமாக ஆராயாத - அறிய முற்படாத கட்சிகளின் கூழ்முட்டைத்தனமான அரசியல்தான் 13 இற்காகக் குரல்கொடுக்கும் இந்த நிலமை. மானுட மாண்புகளை அதிகம் மதிக்கும் நகரொன்றில் இலங்கை தூதரக அதிகாரி, புலம்பெயர் தமிழர்களின் கழுத்தை அறுப்பேன் எனச் சைகைக் காட்டியதைத் தமது நகரங்களில், கிராமங்களின் பிரம்மாண்ட வர்ணமாக வரைந்து வழிபடும் நிலைக்கு இந்நாடு இனவாத வேர்பரப்பியிருக்கின்றது.

பகுத்தாராய்ந்து பட்டம்பெற்று பெரும் பதவிகளில் இருக்கும் பெரும்பான்மையினரே, வடக்கு, கிழக்கில் பௌத்தமே இருந்தது. எனவே புத்தர் சிலைகளை அரச மரங்கள் காணுமிடமெல்லாம் நடவேண்டும் எனப் பொதுவெளியில் எழுதும் நிலைக்கு நாடு ஓரினமையச் சிந்தனையில் மூழ்கிவிட்டது. இந்நிலையில் 13 ஆம் திருத்தத்தில் சொல்லப்படும் எந்த விடயத்தைத்தான் இங்கு நடைமுறைப்படுத்தவியலும்?

ஒரேநாடு ஒரேசட்டம்

இவ்வாறு 13 ஐ கோரும் அணி வடக்கில் உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சம நேரத்திலேயே தெற்கில் ஒரே நாடு ஒரே சட்டம் அரச தலைவர் செயலணி உருவாக்கப்பட்டுவிட்டது. சிங்கள பௌத்த கடுந்தேசியவாதிகளின் கட்டுப்பாட்டில் இயங்கும் இந்தக் குழுவில் தமிழர்களை இணைத்துக்கொள்ளுங்கள் என பெரும் மன்றாட்டமே நடத்தவேண்டியிருந்தது.

நிலமைய இவ்வாறிருக்க, வடக்கு, கிழக்கு தமிழர்களின் பண்பாட்டு வாழிடம் என்று யாரிடம் கோருவது? யாருக்கு அழுத்தம் பிரயோகிப்பது? ஒரே நாடு ஒரே சட்டம் அரச தலைவர் செயலணி சரியாக செயற்படுமானால், அவர்கள் முன்வைக்கும் கோரிக்கைகளில் 13 ஆம் திருத்தத்தை நீக்கவேண்டும் என்பதையே முன்வைப்பார்கள்.

13 ஆம் திருத்தம் என்பது இந்தியாவினால், இலங்கைத்தீவை இரண்டாகப் பிரிப்பதற்கு முன்வைக்கப்பட்ட சட்டத் திருத்தம் என்ற வாதம் அனேக பெரும் பான்மையினர் மத்தியில் உண்டு.

எனவே அதன்படி அவர்கள் இயங்குவார்களாயின் இன்னும் சிலவருடங்களில் 13 ஐ முற்றாக நீக்கும் நிலையே ஏற்படும். இவ்வாறான நடைமுறையை விளங்கிக் கொள்ளாது இன்னமும் தரவேற்றம் செய்யப்படாத சட்டத்தைப் பிடித்துத் தொங்கிக்கொண்டிருப்பது, தனது நலன்களைக் காப்பாற்ற நினைக்கும் இந்தியாவுக்கு நன்மையளிக்கலாம். தமிழர்களுக்கு?

தலையில் அடிக்கப்படும் ஆணி

வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்கள் மட்டுமல்லாது மலையகம் உள்ளிட்ட நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழர்களும் முன்னெப்போதும் இல்லாதளவுக்குப் பிரச்சினைகளை எதிர்கொள்கினறனர். 13 ஆம் திருத்தம் பற்றி அறைகளுக்குள் உரையாடிக்கொண்டிருக்கும் சமநேரத்தில், அறைகளுக்கு வெளியே நில அபகரிப்புக்கு எதிராகத் தமிழர்கள் போராடிக்கொண்டிருக்கின்றனர்.

இறுதிப் போரின்போது சரணடைந்து - கையளிக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களுக்கு என்னவானது எனச் சொல்லுங்கள் எனக்கோரிப் போராட்டம் நடத்தும் மக்கள் தெருவில் இறந்து கிடக்கின்றர். வடக்கு, கிழக்கின் இனப்பரம்பலைச் சிதைக்கும் நோக்குடனான குடியேற்றங்கள் நடந்துகொண்டேயிருக்கின்றன.

வவுனியா வடக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குள் மதவாச்சியிலிருக்கும் சிங்கள மக்களை இணைக்கும் முயற்சிகள் நடக்கின்றன. பௌத்த சாயலுடைய தொல்லியல் எச்சங்கள் காணுமிடமெல்லாம் பல்பரிமாண ஆய்வு நோக்கற்று பௌத்த விகாரைகளைப் புதிதாக அமைக்கும் வேலைத்திட்டங்கள் விரிவுபெற்று வருகின்றன.

இவைதான் இன்று தமிழர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள். இந்தப் பிரச்சினைகள் தமிழர்களின் இருப்பையே அழிக்கும் வகையிலானவை. இவை பற்றி எதையும் சொல்லாத - இதற்கொரு தீர்வைத் தராத 13 ஆம் திருத்தம் தமிழர்களின் தலையில் அடிக்கப்படும் ஆணி.

நன்றி: - ஜெரா -

தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும் போதுதான் இந்தத் தீவு அழிவிலிருந்து மீண்டெழும்

– பாராளுமன்றில் கஜேந்திரன் –

நவம்பர் 20, 2021



தமிழர் தேசத்தை அங்கீகரிக்கும்போதுதான் இந்தத் தீவு அழிவிலிருந்து மீண்டெழும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் இன்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.
வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவரது பாராளுமன்ற உரையின் முழு முழுவிபரம் வருமாறு.

அவைக்கு தலைமை தாங்கும் உறுப்பினர் அவர்களே!

இன்றைய தினம் இந்த நாட்டினுடைய 2022ம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினுடைய இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் நாங்கள் கலந்துகொண்டுள்ளோம். நாட்டினுடைய வருமானம் பாதாளத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளதுடன் அந்நிய செலாவணி கையிருப்பும் தீர்ந்துள்ள கையறு நிலையில் நின்றவாறு இந்த வரவுசெலவு திட்டத்தை இந்த அரசு சமர்ப்பித்துள்ளது.

நாடு பிளவுபடுதலை தடுத்தல் என்ற போர்வையில் ஒற்றை அட்சியை பாதுகாக்கிறோம் என்ற கோசத்தோடு தமிழ்த் தேசத்தின் மீது நீங்கள் இன அழிப்பை மேற்கொண்டு போரை வென்றுவிட்டதாகவும் ஒற்றையாட்சியை பாதுகாத்து விட்டதாகவும் எகத்தாளம் இட்டு பிரகடனம் செய்து 12 ஆண்டுகளின் பின்னர் இந்த வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளீர்கள்.

ஆனாலும் இன்று நாட்டினுடைய நிலைமை என்ன ? நாடு கடனில் மூழ்கி உள்ளத்துடன் கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல ஒட்டு மொத்த மக்களும் பட்டினிச்சாவை எதிர்நோக்கி உள்ள நிலையிலே, நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து கிடக்கின்றது.

இதில் தமிழ்த் தேசத்தின் நிலை மிகவும் மோசமடைந்துள்ளது. கடந்த 2009இல் இனவழிப்பு மூலம் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்னரான காலப்பகுதியில் 13 வரவு-செலவுத் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் தமிழ் தேசத்தை முற்றாக புறக்கணித்தே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவற்றைப் போன்றுதான் தமிழ் தேசத்தை முற்றாகப் புறக்கணிக்கணித்தேதான் இந்த வரவுசெலவுத்திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

தமிழ்த் தேசம் அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டது மட்டுமல்ல, இந்த வரவு-செலவு திட்டங்களூடாக அரசதிணைக்களங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டு அந்த அரசதிணைக்களங்களுடாக தமிழர் தேசத்தின் மீது ஒடுக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கிறது. குறிப்பாக பாதுகாப்பு அமைச்சினுடைய முப்படைகள், பொதுமக்கள் பாதுகாப்புத்துறை மற்றும் பௌத்த கலாச்சார திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, எல்லைநிர்ணயசபை, வனஜீவராசிகள் திணைக்களம், வனபாதுகாப்பு திணைக்களம், தொல்பொருள் திணைக்களம், மீன்பிடி அமைச்சு, துறைமுக அபிவிருத்தி அதிகாரசபை, வெளிநாட்டு அமைச்சு, வர்த்தக அமைச்சு போன்றவற்றை நான் உதாரணமாக குறிப்பிடுகின்றேன். துறைமுக அபிவிருத்தி அமைச்சினூடாக வடக்கிலே மயிலிட்டித் துறைமுகம் அபிவிருத்தி செய்யப்பட்டு அது தமிழ் மக்களிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டு இன்று முழுமையாக சிங்கள மக்களிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை ஒரு உதாரணமாக குறிப்பிடுகின்றேன்.

மேற்படி துறைகள் ஊடாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழான கைதுகள், சித்திரவதைகள், தடுத்துவைப்புகள் மற்றும் நீண்டகாலமாக அரசியல் கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருப்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களது குடும்பங்களுக்க நீதி இல்லை, முன்னாள் போராளிகள் மீதான ஒடுக்குமுறைகள், சிங்கள குடியேற்றங்கள் பௌத்தமயமாக்கல்கள், மற்றும் மீன்பிடித்துறை முற்றாக ஒடுக்கப்பட்டு அழிக்கப்பட்டுவதுடன் உங்களது கொள்கையினால் விவசாயத் துறையும் வர்த்தகத்துறையும் அழிக்கப்படுகிறது. .

ஒட்டுமொத்தமாக தமிழ் தேசத்தின் நிலமையை கடந்த யுத்த காலத்தில் இருந்ததை விட மோசமான ஒரு இடத்துக்கு கொண்டு செல்கின்றது. உங்களுடைய வரவு-செலவுத் திட்டங்களும் அரசாங்கத்தினுடைய கொள்கைகளும் எங்களுடைய தேசத்தை முழுமையாக சிங்கள பௌத்த மயமாகின்ற நோக்கத்தோடுதான் உங்களுடைய நடவடிக்கைகள் நடந்து கொண்டிருக்கின்றது. அந்தக் காரணத்தினாலே கடந்த காலங்களை போன்றே இந்த வருடமும் நாங்கள் இந்த வரவுசெலவு திட்டத்தை ஆதரிக்க முடியாதது மட்டுமல்ல எதிர்த்தே ஆகவேண்டும் என்கிற நிலமைக்கு வந்து நிக்கின்றோம்.

இது ஒரு புறமிருக்க கடந்த 48ம் ஆண்டிலிருந்து தமிழர்களுக்கு சமஸ்டி வழங்கினால் அதிகாரங்கள் வழங்கினால் நாடு பிரிந்துவிடுமென்று கூறி இனவாதமாக செயல்பட ஆரம்பித்திருந்தீர்கள். குடித்தொகை பரம்பலை மாற்றி அமைத்தல், குடியேற்றங்களை மேற்கொள்ளுதல், பௌத்தமயமாக்கல், சிங்கள மயமாக்கல், கல்வித்தரப்படுத்தல் தெற்கிலிருந்து வன்முறை மூலமாக தமிழர்களை வடக்கிற்கு கப்பலேற்றி அனுப்புதல் போன்ற செயல்ப்பாடுகளை மேற்கொண்டு வந்தீர்கள். தமிழர்கள் நாட்டை பிரிக்கப்போகிறார்கள் எனக்கூறி 6 ஆம் திருத்தச்சட்டத்தை கொண்டுவந்தீர்கள். பயங்கரவாத தடை சட்டத்தை கொண்டுவந்தீர்கள். ஆனாலும் தமிழர்கள் தம் மீதான ஒடுக்குமுறைக்கு எதிராகவும், அரசியல் உரிமைக்காக்கவும் ஆயுதமேந்தி போராடும் நிலைமையை உங்களால் தடுக்க முடியவில்லை. அது மட்டுமல்லாமல் அப்போராட்டத்தை உங்களால் அழிக்கவும் முடியவில்லை. ஏனெனில் அது அரசியல் உரிமைக்கான நீதிக்கான நியாயமான போராட்டம். இறுதியில் இன அழிப்பு ஒன்றினூடாகத்தான் உங்களால் அந்த உரிமைப் போராட்டத்தை முடிவுக்கு கொண்டுவரக் கூடியதாக இருந்தது.

அவ்வாறு இன அழிப்பை அரங்கேற்றியபோது இனிமேல் இத்தீவானது தூய சிங்கள பௌத்த தீவாக மாறும், மாற்றப்படுமென்று சிங்கள மக்களை கனவுகாண வைத்தீர்கள். அனால் இன்றைய நிலை என்ன என்பதை நீங்கள் சிந்தித்து பாருங்கள். இன்று நாடு பாரிய கடனில் மூழ்கியிருப்பது மட்டுமல்லாமல் சீனாவிற்கும் ஏனைய நாடுகளுக்கும் இந்த நாடு விற்கப்பட்டு இந்த நாடு சிங்கள மக்களுக்கே சொந்தமாக இருக்குமா என்ற கேள்வியை கேக்கின்ற அளவுக்கு நிலைமை மோசமைடைந்துள்ளது, நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்தில் வீழ்ச்சி அடைந்துள்ளது. மனிதனுக்கு அடிப்படைத் தேவையாக உணவு உடை உறையுள் என்று சொல்லுவார்கள். உங்களால் உடைகளையும் உறையுளையும் வழங்க முடியாதது மட்டுமல்ல உணவைக் கூட வழங்க முடியாத நிலைமைக்கு இந்த நாடு இன்று வந்திருக்கின்றது.

நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திப்பாதையில் கொண்டு செல்வதிலும் இனங்களுக்கிடையில் ஐக்கியத்தை ஏற்படுத்துவதிலும் நீங்கள் முழுமையாக தோல்வி அடைந்துள்ளீர்கள். கடந்த 30 ஆண்டுகால யுத்தத்தில் உங்களது நயவஞ்சகத்தால் தமிழர்களுக்கு எதிராக முஸ்லீம் மக்களை திருப்பி பயன்படுத்தியிருந்தீர்கள். ஆனால் இன்று அந்த முஸ்லீம் சகோதரர்களையும் ஒட்டுமொத்தமாக ஒரு இனமாக குறிவைத்துள்ளீர்கள்.

சமஸ்டி கொடுத்தல் நாடு பிளவு பட்டுவிடுமென்ற எண்ணத்திலிருந்து நீங்கள் விடுபடுங்கள். சமஸ்டி கொடுத்தால் அதிகாரங்களை கொடுத்தால் நாடு பிளவுபட்டுவிடும் என்ற பொய்களை சிங்கள மக்களுக்கு கூறி அவர்களை ஏமாற்றி உங்களோடு வைத்துக்கொண்டு அரச அதிகாரங்களை பயன்படுத்தி நிர்வாக ரீதியாகவும் கலாச்சார பண்பாட்டு ரீதியாகவும் ஒடுக்குமுறைகளை மட்டும் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்டீர்கள். இந்த அனைத்தும் நாட்டை ஐக்கியப்படுத்தவில்லை. மேலும் பிளவுபடுத்தி சமூகங்களை துருவப்படுத்தியுள்ளது என்பதை இந்த இடத்திலே பதிவுசெய்துகொள்ள விரும்புகின்றேன்.

இந்த நாட்டில் ஆரம்பகாலத்திலிருந்து ஆட்சிப்பீடம் ஏறியவர்கள் நாட்டை அபிவிருத்தி செய்து மக்களுக்கு ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தி இந்த நாட்டு மக்களுடைய செல்வாக்கை பெற்று ஆட்சிப்பீடம் ஏறுவதற்குப்பதிலாக அவர்கள் கையாண்ட அணுகுமுறை தமிழர்களுக்கு எதிரான இனவாதத்தை கக்கி கிராமங்களை அழித்து தமிழ் மக்களை கொன்று பாலியல்வல்லுறவுக்குட்படுத்தி சிங்கள குடியேற்றங்களை மேற்கொண்டு பௌத்தமயமாக்கி தனிச் சிங்கள சட்டம் கல்வித்தரப்படுத்தல் மற்றும் கலவரங்கள் போன்றவற்றினூடாக சிங்களமக்களினுடைய ஆதரவை திரட்டி தம்மைத் தேச பக்தர்களாக காட்டி ஆட்சிப் பீடம் ஏறி வந்தார்கள்.

2009 இலே நீங்கள் இந்த போரை முடிவுக்கு கொண்டுவந்த பிற்பாடு இன்று உங்களிடம் மிஞ்சி இருப்பது என்ன? இன்று இந்த நாடு முழுமையாக அந்நிய சக்திகளுடைய பூகோள போட்டிக்குள் சிக்குண்டு சின்னாபின்னமாகி கொண்டிருக்கின்றதென்பதை இப்பொழுதாவது நீங்கள் விளங்கிக்கொள்கிறீர்களா. ஆகவே உங்கள் அணுகுமுறை முற்றாக தோல்வி அடைந்துள்ளது.

ஒற்றை ஆட்சியை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது . நீங்கள் இந்த ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்காக 70 ஆண்டுகளாக நீங்கள் மேற்கொண்ட அணுகுமுறைகள் அனைத்தும் தோல்வி அடைந்து இருக்கின்றான. 13ம் திருத்தச்சட்டமோ ஒற்றையாட்சியோ ஒருபோதும் தீர்வாக ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. எங்களது உரிமைக்காக நாங்கள் தொடர்ந்து போராடுவோம் .

ஆகவே உங்களது அணுகுமுறையை மாற்றுங்கள். தமிழர் தேசத்தையும் தமிழ் தேசத்தினுடைய இறைமையையும் சுயநிர்ணயஉரிமையையும் அங்கீகரிக்கின்ற ஒரு சமஸ்டி தீர்வை புதிய அரசியலமைப்பினூடாக கொண்டுவருவதனைப் பற்றி சிந்தியுங்கள். அதன் மூலமாக இலங்கைத்தீவில் தமிழ் தேசமும் சிங்கள தேசமும் ஐக்கியமாக வாழக்கூடிய சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஆனந்தமாக கூடி வாழக்கூடிய ஒரு சூழலை உருவாக்குங்கள். இதை எங்களுடைய தேசிய தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் 2001ம் ஆண்டு மாவீரர் உரையிலே சொல்லியிருக்கின்றார்.

ஆகவே இந்த தீவை மையப்படுத்தி நடக்கின்ற பூகோள போட்டியிலே நீங்கள் சிக்குண்டு இந்த நாடு இந்த சக்திகளினுடைய போட்டி காரணமாக பிளவுண்டு போவதை நோக்கித்தான் உங்களுடைய நகர்வுகள் நடந்துகொண்டிருக்கிறது. ஒன்றை விளங்கிக்கொள்ளுங்கள். சிங்கக்கொடியிலே சிங்கத்தை வைத்திருக்கிறீர்கள் என்பதற்காக நீங்கள் சிங்கங்களுமல்ல. சிங்கத்தினுடைய தலையுமல்ல. இந்த பிராந்திய பூகோள ஆதிக்கப்போட்டியிலே நீங்கள் சிங்கத்தினுடைய வாலில் இருக்கின்ற உரோமம் தான் என்பதனை தெளிவாக புரிந்து கொள்ளுங்கள்.

இந்த அரசாங்கம் வியத்கம என்ற பெயரிலே பலபுத்தி ஜீவிகளை தன்னோடு இணைத்துக் கொண்டுள்ளது. அவர்களுக்கு நான் ஒன்றை சொல்கிறேன். நீங்கள் வீடு கொளுத்தும் இராசாவுக்கு நெருப்பெருத்துக் கொடுக்கும் மந்திரிகளாக இருக்காதீர்கள்.

தயவு செய்து வித்தியாசமாக சிந்தியுங்கள். நீங்க இந்த ஒற்றையாட்சியை கைவிட்டு எப்பொழுது தமிழ் தேசத்தை அங்கீகரித்து தமிழ் மக்களை அரவணைப்பதற்கு முஸ்லீம் மக்களை அரவணைப்பதற்கு தயாராகிறீர்களோ அப்பொழுதுதான் இந்த தீவு அழிவிலிருந்து மீண்டெழ முடியும் என்பதை ஆணித்தனமாக பதிவுசெய்து விடைபெறுகின்றேன் என்றார்.

பாதுகாப்பிற்கு பாரிய நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்காகவா...? த.கலையரசன் எம்.பி

நவம்பர் 17, 2021



கல்வி சுகாதாரத்தை விட பாதுகாப்பிற்கு இவ்வளவு பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற விடயம் எங்கள் மத்தியில் பலவித அச்சத்தை ஏற்படுத்துகின்றது. தொல்பொருள் வனபரிபாலனம் என இராணுவத்தின் பின்னணியில் பல செற்பாடுகள் இடம்பெறுகின்ற. இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்குக் கையாளப்படுமோ என்ற அச்சம் உள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவிதுள்ளார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற 2022ம் ஆண்டுக்காக சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவிற்காகவே பாரிய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நாட்டிலே கொவிட் தொற்று, பொருளாதார வீழ்ச்சி, மக்கள் மத்தியிலே பாரிய சுமை சுமத்திப்பட்டிருக்கின்ற இந்த நேரத்தில் இவ்வாறு பாதுகாப்பிற்காக நிதி ஒதுக்கீடு செய்வது எந்தவகையில் நியாயம்? குறிப்பாக இந்த நாட்டிலே யுத்தம் நடைபெறுகின்ற போது ஒதுக்கப்படுகின்ற நிதியே தற்போதும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. இது ஏற்புடைய விடயம் அல்ல.

இந்த நாட்டிலே ஒரு பிரஜைக்கு கல்விக்காக 5253ரூபா 44 சதமும், சுகாதாரத்திற்காக 7042 ரூபா 61 சதமும் ஒக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேவேளை பாதுகாப்பிற்காக ஒரு தனி மனிதனுக்கு 22000 ரூபா வரையில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே யுத்தம் நடைபெற்றிருக்கின்றது. அதன் மூலம் பல பாதிப்புகள் இடம்பெற்றிருக்கின்றன. இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது பாதுகாப்பிற்கு இவ்வளவு பாரிய நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்ற விடயம் எங்கள் மத்தியில் பலவித அச்சத்தை ஏற்படுத்துகின்றது. ஏனெனில் யுத்தம் முடிந்த கையோடு எமது பிரதேசங்களில் பல விடயங்களை முன்னெடுக்கின்றீர்கள். குறிப்பாக தொல்பொருள், வனபரிபாலனம் என்ற அடிப்படையில் இராணுவத்தினர் பின்னணியில் பல செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. இவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் எமது பிரதேசங்களை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளுக்குக் கையாளப்படுமோ என்ற அச்சம் உள்ளது.

இந்த நாட்டிலே வரிச்சுமையின் காரணமாக ஒவ்வொரு குடிமகனும் கடனாளியாகியுள்ள நிலையில் பாதுகாப்பிற்கு இத்தனை தொகையை ஒதுக்கீடு செய்வதை விட ஒரு குறிப்பிட்ட தொகையாவது இந்த நாட்டிலே கணவனை இழந்து வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்த முடியாமல் தத்தளிக்கின்ற அந்த உறவுகளுக்கு ஒதுக்கீடு செய்திருந்தால் உண்மையிலேயே நாங்கள் பாராட்டியிருக்கலாம்.

கிழக்கு மாகாணத்தில் உள்ளுராட்சி மன்றங்களில் அமைய அடிப்படையில் 920க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்களுக்குரிய நிரந்த நியமனம் வழங்கப்படாதிருக்கின்றது. இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்து பழிவாங்குகின்ற செயற்பாடுகளையே செய்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு பணிபுரிகின்ற அந்த ஊழியாகள் மீதும் பழிவாங்கல்களைச் சுமத்தாமல் உள்ளுராட்சி சபைகளிலும் சிறந்த நிருவாகக் கட்டமைப்பினை உருவாக்க வேண்டும என்றால் உள்ளுராட்சி சபைகளில் பணிபுரிகின்ற ஊழியர்களுக்கான நிரந்தர நியமனத்தை வழங்க வேண்டும். அதனூடாவே அந்தப் பிரதேசத்தின் சுற்றம் சூழல் பாதுகாப்பினை உறுதிப்படுத்த முடியும். குறிப்பாக தற்போதைய கொவிட் நிலைமைகளிலும் இந்த ஊழியர்களின் பங்களிப்பு அளப்பரியது. எனவே எதிர்காலத்தில் நிரந்தர நியமனத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வரவு செலவுத் திட்டத்திலே காணாமல் ஆக்கப்பட்டோருக்கு 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது. ஆனால், இந்த பன்னிரண்டு வருடங்களாக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டங்களை முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கான நீதி இந்த நாட்டில் இற்றவரைக்கும் கிடைக்கப்படவில்லை. தறபோது மரண சான்றிதழ் சமர்ப்பித்தால் ஒரு குறிப்பிட்ட தொகை என்ற அடிப்படையிலே வழங்கப்பட்டுக் கொண்டிக்கின்றது. இந்தப் பணத்திற்காக எமது உறவுகள் பேராடவில்லை. அவர்கள் இந்த நாட்டிலே ஒரு நியாயமான தீர்வு கிடைக்கப்பட வேண்டும், அவர்களுக்கு ஏற்பட்டு இழப்பு இன்னுமொரு சந்ததிக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என பனவற்றிற்காகவே போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

ஜநா வினூடாக பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருந்தன. ஆனால் ஜநாவின் தீர்மானங்களை ஏற்று எந்தப் பணிகளையும் செய்யக் கூடிய ஒரு சூழலில் இந்த அரசாங்கம் இல்லை. ஜநா சொல்வது ஒன்று இந்த அரசு செய்வது ஒன்று. இந்த நாட்டில் உள்நாட்டுப் பொறிமுறையூடாக தீர்வுகளை வழங்க முடியும் என்று சொல்லுகின்ற இந்த அரசாங்கம் பன்னிரண்டு வருடங்களாக உள்ளகப் பொறிமுறையின் ஊடாக ஏதாவது தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கிறதா அல்லது போராட்டங்களுக்கு ஒரு தீர்வாவது கிடைத்திருக்கின்றாதா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். அந்த அடிப்படையில் அனைத்துலக சர்வதே சாசனத்தின்படி பாதிக்கபட்ட மக்களுக்கு வழாங்கப்பட்ட எவ்வித தீர்வுகளும் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

1980ல் இருந்து 2009 வரையான காலப்பகுதியில் சுமார் ஒரு இலட்சம் பேர் வரை காணமலாக்கப்பட்டிருக்கின்றார்கள். 2009ம் ஆண்டு இறுதி யுத்தத்திலே 146700 பேர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள். எமது உறவுகளின் போராட்டமென்பது இந்த நாட்டில் நிலையான சமாதானம் ஏற்படுத்தப்பட வேண்டும். சர்வதேசம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வு எமக்குக் கிடைக்க வேண்டும் என்ற அடிப்படையில் தான் இடம்பெற்றது. 70 வருடமாக எமது இனம் சந்தித்த இழப்புகளும் பாதிப்புகளும் எந்த அரசாங்கத்தினாலும் ஈடு செய்யப்பட முடியாதவையாகும். காணாமல் ஆக்கப்பட்ட அனைவருக்கும் மரணச் சான்றிதழ் வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதன் பின்னணி என்ன? இந்த நாட்டில் காணாமல் ஆக்கப்பட்ட அனைவரும் மரணித்து விட்டார்களா என்ற கேள்வி எழுகின்றது. அவ்வாறாயின், நியாயபூர்வமான தீர்வு இந்த மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். நாங்களும் இந்த நாட்டின் பிரஜைகளாக ஏனைய சமூகத்தைப் போன்று சம உரிமையுடன் வாழ வேண்டும் என்று நினைக்கின்றோம்.

எமது சமூகம் சலுகைகளுக்குச் சோரம் போன சமூகம் அல்ல. தமது உரிமைக்காக போராடுகின்ற இனம். ஒரு நிலையான சமாதானம் சமத்துவம் இந்த நாட்டிலே நிலைநிறுத்தப்பட வேண்டும். தங்களுடைய எதிர்கால சந்ததியினர் கடந்த 2009ம் ஆண்டு ஏற்பட்ட அழிவைப் போன்றதொரு அழிவைச் சந்திக்கக் கூடாது என்ற அடிப்படையிலேயே எமது உறவுகள் போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

சுதந்திரத்தின பின் எமது சமூகம் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றார்கள். குறிப்பாக கிழக்கு மாகாணத்தை எடுத்துக் கொண்டால் ஆரம்ப காலத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 81 வீதமான தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள். கிழக்கு மாகாணத்தில் 74.5 வீதமான தமிழர்கள் இருந்திருக்கின்றார்கள். ஆனால் இந்த நாட்டிலே ஆட்சிக்கு வந்த பெரும்பான்மைத் தலைவர்கள் திட்டமிட்ட குடியேற்றங்களை ஆரம்பித்து இனப்பரம்பலை மாற்றினார்கள். கந்தளாய், விவசாயக் குடியேற்றம், அல்லை குடியேற்றம், மொரவை, மகா திபுல, பதவியா திட்டம் என்றும் பல குடியேற்றங்களை ஆரம்பித்து அந்தப் பிரசேங்களில் தமிழர்களின் செறிவைக் குறைத்து அடுத்த கட்டமாக கிழக்கு மாகாணம் பூராகத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இன்று அம்பாறை மாவட்டத்திலும் எங்களது இனத்தின் செறிவு குறைக்கப்பட்டிருக்கின்றது. தற்போது கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் செறிவு வெறுமனே 39 வீதமாக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டிலே மாறி மாறி வந்த அரசாங்கம் எதுவும் தமிழர்களைப் பாதுகாக்கும் வகையிலும், இந்த நாட்டில் சமாதானம் எற்படும் விதத்திலும் கையாளவில்லை. இன்று ஒவ்வொரு சமூகமும் மாவட்ட ரீதியில் இனரீதியான பரம்பலை அதிகரிக்க வேண்டும். அந்த மாவட்டங்களை ஆள வேண்டும் என்று துடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த கொடிய யுத்தம காரணமாக எமது மக்கள் இன்று அகதிகளாக இந்தியாவில் இருக்கின்றார்கள். ஆனால் ஒரே நாடு ஒரே சட்டம், ஜக்கிய இலங்கை என்று மார்தட்டிக் கூறுகின்ற இந்த நாட்டின் தலைவர்கள் இந்த நாட்டில் இருந்து அகதிகளாகச் சென்ற மக்களை மீள இந்த நாட்டுக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எந்த அடிப்படை வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கவில்லை. எமது மக்கள் அங்கு மிக மோசமான துன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவ்வாறு அந்த மக்கள் வரவேண்டும் என்று குறிப்பிட்டாலும் நிதி செலுத்த வேண்டும், இங்கு வருகின்ற போது அவர்களுக்கு பாதுகாப்பு, அடிப்படை வசதி என்பவற்றை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் இந்த அரசாங்கம் தயார் இல்லை. அது தான் மனவேதனையான விடயம் என்று தெரிவித்தார்.

உலக வராலற்றில் மரணித்தவர்

(23 பக்கத் தொடர்ச்சி) அழிப்பு என்பன மேற் கொள்ளப்பட்டன என அனைத்தையும், சட்ட ரீதியாக ஒரு விசாரணையைச் செய்வதற்கான பொறிமுறையை அமைத்து சிங்கள தேசத் திற்கு ஒரு சரியான பாடம் புகட்ட வேண்டும் என்பதை நாங்கள் மிகவும் பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த மாவீரர் நாளிலே இந்த செய்தியை உலகத்திற்கும் எமது மக்களுக்கும், சிங்கள தேசத்திற்கும், சிங்கள மக்களுக்கும் சொல்லிக் கொள்ள விரும்புகின்றோம், நாங்கள் அமை தியை நேசிக்கின்றவர்கள். உலகத்திலே எங்குமே அமைதியை விரும்பகின்றவர்கள். போரிலே ஈடுபட்டு அந்த வடுக்களையும், ரணங்களையும் உணர்ந்தவர்கள்தான் அமைதியை நோக்கி நகருவார்கள். நாங்கள் அமைதியை நோக்கி நகருகின்றோம். எமது ஜனநாயக வழி செயற்பாடுகளுக்கு மதிப் பளித்து கடந்த காலத்திலே உங்களால் எமது இனம் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான யுத்தத்திற்கு எதிராக இராணுவத்துடன் போராடி இந்த மண்ணிலே வீரமரணம் அடைந்த எமது மாவீரர்களை நினைவு கூருவதற்கு சட்டரீதியாக முழு அனுமதி யையும் எமக்கு வழங்க வேண்டும். எமது மக்கள் முழுச் சுதந்திரமாக எமது வீரர்களை நினைவுகூர வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் இந்த சிங்கள தேசம் அங்கீகரிக்க வேண்டும். அது வரைக் கும் எத்தடைகள் போட்டாலும் அவற்றைத் தகர்தெறிந்து எமது வீரர்களுக்கான இதயபூர் வமான அஞ்சலியை நாம் முன்னெடுப்போம். இந்த எழுச்சிநாளைத் தமிழீழ தேசிய எழுச் சிநாளாகப் பிரகடணப்படுத்தியே நாங்கள் நினைவுகூர்ந்து வருகின்றோம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம் என்று தெரிவித்தார்.

உலக வராலற்றில் மரணித்தவர் எதிரிப்படை வீரராக இருந்தாலும் வணக்கம் செய்வதற்கு அனுமதி கொடுப்பதே ஒரு ஜனநாயக நாட்டின் பண்பு ஜனநாயகப் போராளிகள் கட்சி

நவம்பர் 26, 2021



உலக வராலற்றில் மரணித்தவர் எதிரிப்படை வீரராக இருந்தாலும் அவரது போராட்ட சின்னங்களை அழிக்காது, அதை வணக்கம் செய்வதற்கு அனுமதி கொடுப்பதே ஒரு ஜனநாயக நாட்டின் பண்பு. நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகவோ, சிங்களத் தேசியத்திற்கு எதிராகவோ போராடவில்லை. எமது இனம் மீது மேற்கொள்ளப்பட்ட கொடூரமான யுத்தத் திற்கு எதிராகப் போராடி இந்த மண்ணிலே வீரமரணம் அடைந்த எமது மாவீரர்களை நினைவு கூருவதற்கு சட்டரீதியாக முழு அனுமதியையும் எமக்கு வழங்க வேண்டும் என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவித்தார்.

மாவீரர் நாள் தொடர்பிலான தடையுத்தரவுகள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கும் பொதே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

எத்தடைகள் போட்டாலும் அவற்றைத் தகர் தெறிந்து எமது வீரர்களுக்கான இதயபூர் வமான அஞ்சலியை நாம் முன்னெடுப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

காலத்தால் அழியாத மாவீரர்களின் நினைவு வாரத்தில் நாம் இன்று பெரும் துயரத்தைச் சந்தித்து நிற்கின்றோம். சிங்களப் பெருந் தேசியவாதத்தின் இன அடக்குமுறைக்கு எதி ராக ஆயுதமேந்திப போராடி வீரமரண மடைந்த எமது மாவீரச் செல்வங்களை நினைவு கூருவதற்கு சிங்கள அரசாங்கம் பல தடைகளை எமக்குத் தந்துள்ளது. உண்மை யிலேயே தன் இனத்தின் விடுதலைக்காகப் போராடி மரணித்த எமது வீரர்கள் இந்த மண்ணுக்குள்ளே உறாங்குகின்றார்கள். அவர்களின் தியாகங்கள், அர்ப்பணிப்புகள் என்றுமே எமது மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான, விடுதலைக்கான அர்ப்பணிப் பாகவே அமைந்தது.

உண்மையான தேசிய விடுதலையை நேசித்த எமது மாவீரர்களை நினைவுகூர்ந்து அவர்களுக்கு இதயபூர்வமான அஞ்சலியைச் செலுத்தி எமது மக்கள் நிம்மதியடையும் இந்த நினைவு வாரத்தில் நொவம்பர் 27 மாவீரர் களின் இறுதி நாள் நிகழ்வை மெற்கொள் வதற்கு பேரினவாதம் தடைவித்தித்திருக் கின்றது.

ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் இலங் கையிலே, தங்களுடைய சொந்த மக்களின் விடுதலைக்காகப் போராடி மரணித்த மக் களை நினைவுகூருவதற்கு முடியாமல் இருக் கின்றது. உலகத்தில் எங்குமில்லாதவாறு அடக்குமுறையை எமது இனத்தின் மீது திணித்து நிற்கின்றது. உலக வராலற்றில் மரணித்தவர் எதிரிப்படை வீரராக இருந் தாலும் அவரது போராட்ட சின்னங்களை அழிக்காது, அதை வணக்கம் செய்வதற்கு அனுமதி கொடுப்பதே ஒரு ஜனநாயக நாட்டின் பண்பு. உலகின் பல ஜனநாயக நாடுகள் அவ்வாறு தான் செய்கின்றன. ஆனால் இங்கே எமது வீரர்களுக்கு நினைவு கூரத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் மாவீரர் துயிலுமில்லங்களை இடித்து தரைமட்டமாக்கி எமது மனங்களில் ஆறாத ரணத்தை உருவாக்கிய இலங்கை அரசாங் கம் இன்று எமது துயிலுமில்லங்களுக்குள் தாங்கள் புகுந்து தியாகத்தின் சின்னங்களை கால்களால் மிதிக்கின்றார்கள்.

போராட்டம் என்பது இனத்தின் விடுதலைக் காகவும், நாம் சுதந்திரமாக வழவேண்டும், ஒரு சமதர்மமான நாடு இங்கே அமைய வேண்டும் என்பதற்ககாகவுமே நடாத்தப் பட்டது. இந்தப் போராட்டத்தில் தங்களுடைய பிள்ளைகளை மனமுவந்து தங்களின் விடு தலைக்காக எமது பெற்றோர்கள் ஒப்படைத் தார்கள். எமது உறவுகள் அனைவரும் இந்தப் போராட்டதிற்குப் பங்களிப்புச் செய்தார்கள். அந்த அர்ப்பணிப்பும், தியாகமும் இந்த உலகத்தில் தமிழினம் இருக்கும் வரை வளர்ச்சிபெற்று ஒளிவீசும்.

எமது வீரர்களின் தியாகங்களைக் கொச்சைப் படுத்தி அதனை அழிக்க நினைக்கும் சிங்களப் பெருந்தேசியவாதம், தன்னுடைய இறுமாப்புக் கொண்ட கைகளால் தாங்களே தமக்கு மண் அள்ளிப் போடும் நிலைமை இந்த இலங்கைத் தீவிலே உருவாகிக் கொண்டிருக்கின்றது. அப்போது எமது இனம் நிச்சயம் விடுதலை பெறும்.

எமது அகிம்சை, ஆயுதம், அரசியல் ரீதியான போராட்டங்கள் அனைத்தும் தமிழ்த் தேசி யத்தை, தமிழினத்தை உலகத்தின் ஒரு உச்ச நிலைக்குக் கொண்டு சென்றது. எமது போராட் டமே தமிழன் இந்த உலகத்தில் தனித்து வமான இனம் என்பதை பறைசாற்றி நிற் கின்றது. இந்த வரலாற்று உண்மையை எத் தனை ஆண்டுகள் சென்றாலும் எந்த சக்தி யாலும் அழிக்க முடியாது.

நாங்கள் சிங்கள மக்களுக்கு எதிராகவோ, சிங்களத் தேசியத்திற்கு எதிராகவோ போராடியவர்கள் அல்ல. எமது தமிழினத்தின் விடுதலைக்காக எமது தேசியத்திற்காக எமது மண்ணிலே போராடி எமது விடுதலைக்கான கொள்கையை நிலைநிறுத்தினோம். இலங் கையின் பயங்கரவாத அரசாங்கம் எம் மீது கொடூரமான யுத்தத்தைப் புரிந்து விட்டு சர்வதேச நாடுகளில் இருந்து தப்பித்துக் கெள் வதற்காக தம்மை ஒரு ஜனநாயக அரசியல் நாடாகக் காட்டிக் கொண்டு ஒரு பொய்யான போர்வையை மூடிக் கொண்டு வலம் வருகின் றது.

எமது மக்கள் இலட்சக் கணக்கானோர் கொல் லப்பட்டார்கள் இந்தக் கொலைகளைச் செய் தவர்கள் இன்று தங்களை ஜனநாயக வாதிகளாக, மனித நேய செயற்பாட்டாளர் களாக இந்த உலகிற்குக் காட்டி தங்களை நியாயப் படுத்தி வருகின்றார்கள்.

உண்மையாக ஜனநாயகத்தை நேசிக்கின்ற சர்வதேச சமூகம் எமது மக்களின் அர்ப்பணிப் புகளையும், வீரர்களின் தியாகங்களையும் புரிந்துகொண்டு எவ்வாறு எமது இனத்தின் மீது அடக்குமுறை, (22 பக்கம் பார்க்க) இன





வேலை வாய்ப்பு

Whitby, Durham பகுதியில்

வீட்டு பணிப்பெண் தேவை

தங்குமிட வசதியுடன் கூடிய
பிள்ளைகளை பராமரிப்புடன்
சமையல் செய்வதற்கு
அனுபவமுள்ள
பணிப்பெண் தேவை.

தொடர்புகளுக்கு:

416.616.6005



சிவஶ்ரீ சிவ.ஜனா குருக்கள்

Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)

உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்

Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com

HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

ALL MAKES & MODEL

24h EMERGENCY SERVICES

Furnance, Air Conditioner, Hot Water Tank, Tankless Water Heater,
HRV, Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer



WHY UPGRADE TO TANKLESS?

KD navien®
The Leader in Condensing Tankless Technology

Endless Supply of Hot Water
No Up-front Equipment Cost
Save Up To 40%
Save Money & Space Design
15 Years Warranty
No More Risk of Flooding or Explos

FREE
ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar 416-993-8001
geansam@yahoo.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN$15,000



“மாங்குளம் இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ந்த வரலாறு”

வடதமிழீழத்திலுள்ள மிகப்பலம் வாய்ந்த சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவ முகாங்களுள் மாங்குளம் ஒன்றாகும் – இந்த முகாமைத் தாக்கி அழிப்பதற்காக நடந்த ஆறு மாதகாலமாக நாம் முயன்று வந்தோம். இறுதியில் 24.11.1990 அதிகாலை மாங்குளம் முகாமை பூரணமாக வெற்றி கொண்டு விட்டோம்.

இந்த மாங்குளப்போரில் எமது போராளிகள் கட்டிய தீரத்தையும் – அர்ப்பண உணர்வுகளையும், இதற்காக அவர்கள் செலுத்திய விலைகளையும் – முயற் சிகளையும் ஓரளவிற்கேனும் இக் கட்டுரை மூலமாக தமிழீழ மக்களுக்கு அறியத்தருகின்றோம்.

வடதமிழீழத்தின் கேந்திர முக்கியத்தவம் வாய்ந்த பகுதிகளில் மாங்குளம் பிரதான மானது. வன்னிப்பிராந்தியத்தின் மையத்தில் - அதனது இருதயத்தைப்போன்று — மாங் குளம் அமைந்துள்ளது.

வன்னியின் மேற்குப் பக்கமாகவுள்ள துணக் காயிலிருந்து ஒரு பிரதான வீதியும், கிழகுப்பக்கமாகவுள்ள முல்லைத்தீவிலிருந்து ஒரு பிரதான வீதியும், வடபுறத்தில் யாழ்ப் பாணத்திலிருந்தும், - தென்புறத்தில் வவுனி யாவிலிருந்தும் மாங்குளத்திற் கூடாகச்செல் லும் யாழ்-வவுனியா பிரதான பாதைகளையும் கொண்ட போக்கு வரைத்து மையத்தில் மாங்குளம் அமைந்துள்ளது.

1971 ஆம் ஆண்டு சிறீலங்காவில் நடைபெற்ற ஜே.வி.பி.யினரின் கிளர்ச்சி அரச படைகளி னால் ஒடுக்கப்பட்டதைத் தொடர்ந்து, கைது செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களில் நூற்றுக் கணக்கானவர்கள் அக்கராயன் மகாவித்தி யாலயத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள். அந்தக் கைதிகளுக்குக் காவலாக அங்கே இருந்த சிறிய சிங்கள இராணுவ முகாமுக்கு உதவியாக மாங்குளத்தில் இராணுவ முகாம் அமைக்கப்பட்டது.

சில காலத்தில் பின்னர் அகற்றப்பட்ட மாங்குள முகாம் பின்னர் 1976 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் மீளவும் நிறுவப்பட்டது. தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் துளிர் விடத் தொடங்கியதும், அதை முளையிலேயே கிள்ளி எறிவதற்காகவும், காடுகளின் மத்தியில் தனித்திருந்த மாங்குளம் பொலிஸ் நிலையத் தை பாதுகாப்பதற்காகவுமே அங்கே சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவ முகாம் நிறுவப்பட்டது.


ஆரம்பத்தில் 15-20 பேரைக் கொண்டிருந்த மாங்குளமுகாம் எமது போராட்ட வளர்ச்சி யுடன் சேர்ந்து படிப்படியாக பலப்படுத்தப்பட்டது.

புவியில் அமைவிடம் காரணமாகவும், போக்கு வரத்து வழிகள் காரணமாகவும், முக்கியத் துவத்தைப் பெற்றிருந்த மாங்குளம் படிப்படி யாக இராணுவ கேந்திரமாக மாற்றங்கண் டது. வடபகுதிக்கான பிரதான போக்குவரத்துப் பாதைகள் மாங்குளம் முகாமின் கட்டுப்பாட்டுக் குள் வந்தது.

இந்த முகாமிலிருந்து அடிக்கடி புறப்படும் இராணுவம், அயல்கிராமங்களுக்குள் புகுந்து சூறையாடல்களிலும், கைதுகளிலும், கொலை களிலும் ஈடுபட்டு வந்தது. தான் நினைத்த நேரங்களிலெல்லாம் போக்கு வரத்துக்களை நிறுத்தியும் கட்டுப்படுத்தியும் வந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு இங்கு நிகழ்ந்த பின்னர் மாங்குளம், துணுக்காய் உள்ளடங்கிய முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து அனைத்து இந்தியப் படை முகாங்களுக்கும் கட்டளை களை வழங்கும் நிலையமாக (“செக்மேற்” தொடங்கும் வரை) மாங்குளம் இந்தியப்படை மகாமே இருந்து வந்தது.

இந்திய ஆக்கிரமிப்பு இங்கு நிகழ முன்னரும், இந்திய இராணுவம் எமது மண்ணிலிருந்த காலம் வரையிலும் மாங்குளம் எமது தாக்குதலுக்கு உட்பட்வில்லை.



மாங்குளம் இராணுவ முகாமின் வரைபடம்.

யுத்தம் தொடங்கிய கடந்த 6 மாத காலத்தில் இரண்டு பெரிய தாக்குதலுக்கு அது உள் ளானது.



முதலாவது தாக்குதல்

கடந்த ஆனி மாதம் 10ஆம் திகதி மட்டக் களப்பில் யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து தமிழீழத்திலிருந்த அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் நிராயுத பாணிகளாக்கப் பட்டன. அதன் படி ஆனி மாதம் 13ஆம் திகதி — யுத்தம் தொடங்கிய 03ஆம் நாள் - ஒரு துப்பாக்கி வெடிச்சத்தமுமின்றி மாங்குளம் பொலிஸ் நிலையம் எம்மிடம் சரணடைந்தது.

அதைத் தொடர்ந்து 16ஆம் திகதி மாங்குளம் முகாமைக் கைப்பற்ற பெரியதொரு முயற் சியை எடுத்தோம். முகாமைச் சுற்றி பெரிய அளவிலான காப்பரண் வசதிகள் இல்லாத நிலையிலும், நன்கு அரண்செய்யப்பட்டிருந்த இராணுவ முகாம் மீது தாக்குதலை நடாத்தி னோம். யாழ் - வவுனியா பிரதான வீதியுடன் இருந்த இரண்டு காவலரண்களையும் கைப் பற்றி ஒரு எல்.எம்.ஜி. உட்பட சில ஆயதங் களையும் கைப்பற்றியிருந்தோம். சண்டை ஒரு இரவில் முடியவில்லை. இரண்டாவது நாளும் தொடர்ந்தது. அதே சமயம் வான்தாக் குதலை எதிர் கொண்டு சண்டையைத் தொடரக்கூடிய அளவுக்கு காப்பரண் வச திகளும் இருக்கவில்லை. எனவே முகாமைச் சுற்றி காவல் அரண்களை அமைக்கும் வரை முற்றுகைக்குள் முகாமை வைத்திருக்கத் தீர் மானித்து முகாம் தாக்குதல் முயற்சியை ஒத்தி வைத்திருந்தோம். இந்த முற்றுகைக்காலத் தில் இறங்கி ஏறுவதை தடுத்திருந்தோம். இந்த முதலாவது தாக்குதலில் எமது 30 போராளி கள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டர்கள்.

இதன் பின்னர் முகாம் எம்மிடம் வீழ்வதைத் தவிர்ப்பதற்காக மேலதிக படைகளை முகாமுக் குள் அனுப்பி அதைப்பலப்படுத்த சிங்கள ஆக் கிரமிப்பு அரசு முயன்றது.

மாங்குளத்துக்கு அருகிலிருந்த கற்குளம் எனும் காட்டுப் பகுதியில் உலங்கு வான்னூர் திகளின் மூலம் தரையிறக்கப்பட்ட நூற்றி ஐம்பதிற்கும் அதிகமான சிங்கள இராணுவத்தினர் 17.07.1990 அன்று ஒரு சிறிய சண்டைக்குப் பின்னர் மாங்குளம் முகாமிற்குள் சென்று விட்டனர். உலங்கு வானூர்திகள் இறங்கிய காட்டுப் பகுதியில் இருந்து முகாமை நோக்கி அவர்கள் வரலாம் என நாம் கருதிய பகுதியொன்றில், ஒரு பெரிய சண்டைக்காகக் காத்துக்கிடந்தோம். ஆனா லும் அந்தப் பரந்த பிரதேசத்திலிருந்த வே றொரு பகுதியால் ஒரு சிறிய மேதலுக்குப் பின்னர் தரையிறக்கப்பட்ட சிங்கள இராணு வத்தினர் முகாமுக்குள்ளே நுழைந்து விட் டனர்.

ஆட்பலமும் இயற்கை அமைப்பும் எமக்குச் சாதகமாக இல்லாதபடியால், இராணுவத்தினர் முகாமுக்குள் நுழைவதை எம்மால் தடுக் கமுடியவில்லை. அதைத்தொடர்ந்து முற்று கையை உடைந்து முகாமை விஸ்தரிப்பதற் காக வான்படையின் உதவியுடன் எமது நிலைகள் மீது இராணுவத்தினர் ஒரு தாக்குதலை நடாத்தினார்கள்.

அந்தத் தாக்குதலைத் தொடர்ந்து எமது கட்டுப் பாட்டில் இருந்த பொலிஸ் நிலையக் கட்டடங் கள், முகாம் சுற்றாடல்களில் இருந்த கன்னி யாஸ்திரிமடம், கிறிஸ்தவ ஆலயம், கோயில், வங்கி, தபாற் கந்தோர், பாற்சபை நெற்சந் தைப்படுத்தும் சபை உட்பட பல தனியார் அரச கட்டடங்களை சிங்கள இராணுவம் ஆக் கிரமித்துக் கொண்டது.

200 யார் நீளத்தையும், 100 யார் அகலத் தையும் மாத்திரம் கொண்டிருந்த மாங்குளம் இராணுவ முகாம், மேற்குறித்த தாக்குதலின் பின்னர் 1500 யார் நீளத்தையும், 1000 யார் அகலத்தையும் கொண்ட சுமார் 200 ஏக்கர் நிலப்பரப்பை உள்ளடக்கிய மாபெரும் படை முகாமாக விஸ்தரிக்கப்பட்டது. இப்பொழுது உலங்குவானூர்திகள் பாதுகாப்பாக வந்து இறங்கி ஏறத் தொடங்கின.

மாங்குளம் முகாமை அருகிலிருந்த படி அரித்துக் கொண்டிருந்த எம்மை பின்னால் தள்ளி, அந்த அபாயத்திலிருந்து எதிரி தன்னை விடுவிக்க முயன்றான். ஆனாலும் பின்னுக் குத் தள்ளப்பட்ட நாம் அந்த நிலையிலேயே இருந்தபடி — மத்தியில் இருந்த பிரதான முகாமை காத்து நின்ற காவல் அரண்களை

அரிக்கத்தொடங்கினோம்.

அதே போலவே தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக எதிரி தனது பலம் அனைத்தையும் திரட்டி எம்மை மேலும் பின்னால் தள்ளலாம். ஆனாலும் அவன் அங்கும் தாக்குதலுக்கு உள்ளாக்கிக் கொண்டே இருப்பான்.

முகாமின் அமைப்பும் அதன் சுற்றாடலும்

மாங்குளம் இரணுவ முகாமின் சுற்றாடல் ஒரு கெரில்லாத் தாக்குதலுக்கோ அல்லது வான் படை பயன்படுத்தப்படும் நேரடி யுத்தத்திற்கோ வாய்ப்பில்லாத ஒரு சூழலைத்தான் கொண் டிருக்கின்றது.

முகாமின் கிழக்குப்புறம் நீண்டுபரந்த வயல் வெளிகளையும், மேற்குப்புறம் புகையிரதப் பாதைக்கு அப்பால் சிறிய வெளிகளும், பற் றைக்காடுகளையும், வடக்குப்பக்கமாக மாங் குளம் சந்தியில் ஒரு சில சிதைந்த சீமெந்துக் கட்டிடங்களும் தரிசு நிலங்களும் தெற்குப் பக்கமாக சிறிய மாந்தோட்டத்தையும் அத னுடன் வயல்வெளிகளையும் கொண்டிருக் கின்றது.

சுருக்கமாகச் சொன்னால் தூரத்தில் நடக்கும் ஒரு மனித நகர்வை, இராணுவத்தின் காவல் அரண்களில் இருந்தபடி அரண்களில் இருந்த படி துல்லியமாக அடையாளம் காணும் அள வுக்கு நூற்புறமும் வெட்டவெளியாகவேகிடக் கின்றது.

மாங்குளம் பிரதான முகாமை பாதுகாக்கும் முகமாக அந்த முகாமைச் சூழ நான்கு மினி முகாம்கள் இருந்தன. பொலிஸ் நிலையக் கட்டடம், கன்னியாஸ்திரி மடம், கோயில், மாந் தோப்பு ஆகிய இடங்களிலேயே அவைகள் அமைந்திருந்தன. இத்துடன் சேர்த்து மொத் தம் 72 காவல் அரண்களும் முகாமைச்சுற்றி இருந்தன. இந்த 72 அரண்களிலும் இராணு வத்தினர் நிரந்தரமாக நிற்பதில்லை. இவற் றுள் சில போலியான காவல் அரண்களாகும், அந்தப் போலி அரண்களை நாம் இனங் காணாதவாறு தடுப்பதற்காக இரஉணுவத் தினர் அடிக்கடி அத்தப்போலி அரண்களி லிருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்வார் கள்.

இராணுவத்தினது இருப்பிடத்தையும் அந்த முகாமின் ஒட்டுமொத்த ஆள் - ஆயதபலத் தையும் நாம் சரியாகக் கணித்துவிடக் கூடாது என்பதற்காகவே அவ்விதமான ஏமாற்று யுக்தி களை இராணுவத்தினர் கையாள்வார்கள்.

சில சந்தர்ப்பங்களில் அத்தகைய அரண் களுக்குள் நின்று 50 கலிபர் துப்பாக்கியை வைத்து இயக்கிவிட்டு பின்னர் கலிபரை உண்மையான அதன் இடத்திற்கு மாற்றி விடுவார்கள். அதே சமயம் கலிபர் குழாயைப் போல் தோற்றமளிக்கக் கூடிய வகையில் ஒரு இரும்புக் குழாயையோ அல்லது பழுதடைந்த கலிபர் குழாயையோ, அந்தக் காவல் இரண் களுக்குள் பொருந்தி, எம்மை ஏமாற்றித் திசை திருப்ப முயல்வார்கள் - சண்டை ஒன்று வரும் பொது அந்தப் போலியான கலிபர் தளத்தை உண்மை என நாம் கருதி, அதை இழிக்க அங்கே எமது பலத்தைக் குவிக்கும் அதே சமயம் உண்மையான 50 கலிபரின் இருப்பிடம் வேறெங்கோ இருந்து, ஏமாந்ததிற்கான தண்டனையை எங்களுக்கு கூழங்கிக் கொண்டிருக்கும்.

இதே போன்று மிதிவெடிகளை எதிரி நாட்டும் போதும் போலிமிதிவெடிகளை நட்டு வைத்து எம்மைக் குழப்பியடிக்க முயல்வான்.

இவ்விதமான போர் ஏமாற்றுகளுக்கு மத்தி யிலும் இராணுவத்தின் சரியான இரப்பிடங் களையும், நாம் எதிரி முகாமினுள் புகக்கூடிய சரியான பாதையையும் கண்டு பிடித்தேயாக வேண்டும் - இல்லையேல் ஒரு முகாமைக் கைப்பற்றி — அழிப்பதென்பது தற்கொலைக் கொப்பாகி விடும்.

இரண்டு நாட்டு இராணுவங்கள் மோதிக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் ஒரு முகாம் பற்றிய சரியான மதிப்பீட்டை மற்றைய நாட்டு இராணு வம் பெறுவதென்பது மிகவும் சிரமமான தொன்றாக இருக்கலாம். ஆனால் ஒரு விடு தலைப் போராட்டத்தில் இது சற்று வித்தியா சமானதாக இருக்கும்.

ஏனெனில் எதிரியின் முகாம் எமது நிலத்தில் தான் இருக்கின்றது, எமது நிலத்தினது நெளிவு — சுழிவுகளை, பலம் பலவீனங்களை நாம்சரியாக அறிந்த வைத்திருக்கின்றோம்.

சுருக்கமாகச் சொன்னால் எதிரி படுத்துறங்கும் முகாம் கூட அவனது எதிரிதான் ஏனென்றால் அது எங்களுடைய மண்.

எமதுகாவல் அரண்கள்

ஒரு பரந்த நிலப்பரப்பை தன்னகத்தே விழுங்கி வைத்திருந்த மாங்குளம் முகாமிற்கு ஊடாகச் செல்லும் யாழ்-வவுனியா பிரதான வீதியின் குறுக்கே, கனகராஜன்குளப்பக்கமாக ஒன்றும், மாங்குளம் சந்தியில் ஒன்றும், அதே சமயம் மாங்குளம் - முல்லைத்தீவு வீதியில் கோயிலுக்கு அப்பால் வீதிக்குக் குறுக்கே ஒன் றுமாக — மொத்தம், மூன்று பெரிய காவல ரண்களை அமைத்து வைத்திருந்தோம்.

பாலைவனத்தில் இருக்கும் பிரமிட்டுக்களைப் போல வெட்டவெளியில் அக்காவல் அரண்கள் காட்சி அளித்தன. தண்டவாளம் சிலுப்பர்க் கட்டை, மண்மூடைகள் கொண்டு அவற்றை அமைத்திருந்தோம். இவைகளைத்தவிர அந் தப் பிரமாண்டமான முகாமைச் சுற்றி பல கண்காணிப்பு அரண்களை நிறுவியிருந் தோம். எனினும் மாங்குளம் முகாம் எமது பூரணமுற்று கைக்குள் இருக்கவில்லை.

யாழ்- கோட்டையில் சிலகாலம் கடமையாற் றிய பின்னர் மாங்குளம் காவல் அரண்களில் கடமையாற்றிய போராளி ஒருவர் தனது அனுபவத்தை இவ்விதமாக நினைவு கூருகின்றார்...

"நாங்கள் கோட்டைக் காவலரண்களில் இருந் தபோது எதிரியின் வரவை எதிர்பார்த்து முன் பக்கமே பார்த்துக்கொண்டிருந்தோம். குடாக் கடலை அண்டியிருந்த காவல் அரண்களில் கடமையாற்றிய போராளிகள் கோட்டை யையும் கண்காணித்து குடாக்கடலையும் கண்காணித்தார்கள் ஆனால் இங்கோ (மாங் குளம்) எமது காவலரணில் இருந்தபடி நான்கு புறமும் பார்வையை கூர்மையாக்கிய பார்க்க வேண்டியிருக்கிறது. எங்கோ ஓர் இடத்தி லிருந்து சத்தமில்லாமல் எமக்குப் பின்புற மாகவும் எதிரி வரக்கூடிய சாத்தியங்கள் இருந்தன.

மாங்குளம் இராணுவ முகாமானது உண் மையில் பலமானதும் மிக மிகப் பாதுகாப் பானதுமான இடத்தில் தான் அமைக்கப் பட்டிருக்கிறது.

ஒரு வெற்றிகரமான இராணுவ நடவடிக் கைக்கு அப்பிரதேசத்தினது இயற்கை அமைப் பு மிக முக்கியமானது. அதுவும் ஒரு கெரில் லாத்தாக்குதலுக்கு இயற்கை அமைப்பு மிக மிகப் பிரதானமானது. எனவேதான் கெரில் லாத் தாக்குதல்களிலிருந்து தப்புவதற்காக நீண்ட வெளிகளைக் கொண்ட இயற்கை அமைப்புடைய இடங்களையே இராணுவம் தேர்ந்தெடுத்து அங்கேயே தனது முகாம்களை அமைக்கும். இதை தமிழீழத்தில் பொதுவாகக் காணலாம் - மாங்குளம் முகாமும் அவ் வாறான தொரு தன்மையுடன் இருந்தது.

இந்த மாங்குளம் முகாம் தாக்கி அழிக்கப்படப் போகின்றது என எதிரி கனவிலும் நினைத் திருக்க மாட்டான்.

அவனது கண்களிலிருந்துமிகவும் தொலைவில் அமைந்திருந்த எமது காவலரண்களை நீரில் தெரியும் ஒரு சாதுவான வாத்தைப் போன்று தான் எதிரி கற்பனை செய்திருப்பான். அந்த வாத்து தங்களை ஒன்றுமே செய்ய முடியாது என்ற இறுமாப்பிலேயே எதிரி காலத்தைக் கடத்தியிருப்பான். ஆனால் நீர் மட்டத் திற்குக் கீழே இருந்த வாத்தின் கால்கள் அசுர வேகத்தில் இயங்கிக்கொண்டிருந்ததை எதிரி அறிந்திருக்க வாய்ப்பில்லை.

இந்த முகாமைத் தாக்கி அழிப்பதற்கான நட வடிக்கைகள் நடந்து கொண்டிருந்தன.

வன்னிப்பிராந்தியத் தளபதி திரு. பால்ராஜ், உதவித்தளபதி தீபன் ஆகியோருடன் வன்னி யின் மாவட்டத் தலைவர்கள் சக குழத் தலைவர்களும் சேர்ந்து மாங்குளம் முகாமின் அமைப்பு, அதன் பலம்-பலவீனம் ஆகிய இராணுவவிடயங்களை நுணுகி ஆராய்ந்தார் கள்.

இந்தப் பரந்த நிலப்பரப்பின் மத்தியிலிருந்து பிரதான முகாமின் உயிர் நாடி எங்கே இருக் கின்றது என ஆராய்ந்தார்கள். முகாமுக்கு வடபகுதியிலிருந்த கன்னியாஸ்திரி மடமும், வட-கிழக்குத் திசையிலிருந்த கோயிலும் முகாமின் உயிர் நாடியெனக்கண்டு கொண் டார்கள்.

கோயிலை நாம் கைப்பற்றுவோமாக இருந் தால், அதன் சுற்றாடலில் இருந்தபடியே முகா மின் கிழக்குப் புறத்தில் இருந்த விமான இறங்கு தளத்தைக் கட்டுப்படுத்தல் கூடியதாக



தாக்குதல்த் திட்டத்தை குழுத்தலைவர்களுக்கு தளபதி பால்ராஜ் விளக்குகின்றார்

இருக்கும். அவ்விதம் நடந்தால் வெளியி லிருந்து முகாமுக்கு எந்தவித உதவிகளும் வந்து சேராத படி தனிமைப்படுத்தலாம். அதன் மூலம் மாங்குளம் முகாமின் சமிபாட்டத் தொகுதியை இயங்க விடாது செய்து முகாமை வலுவிழக்கச் செய்யமுடியும்.


அதேபோல், கன்னியாஸ்திரி மடத்தில் அமைக்கப்பட்டிருந்த முகாமை நாம் கைப் பற்றுவோமாக இருந்தால் விமான இறங் குதளத்தை முழுமையாகக் கட்டுப்படுத் துவதுடன்; மத்தியில் இருந்த பிரதான முகா மையும் நெருங்கிநின்று தாக்கி அதைச் சுவா சிக்க விடமால் திணறடிக்கமுடியும்.

ஆனால் இந்த இரண்டு மனிமுகாம்களும் அதனுடன் சேர்ந்த காவல் அரண்களும் மிகப் பலமாகவே இருந்தன.

எந்தப்பலத்திலும் ஒரு பலவீனம் இருக்கின்றது. அதைத் தேடிக் கண்டுபிடித்து அதற்கேற்ற விதத்தில் துணிகரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தான் எங்களுடைய வெற்றியே இருக்கின்றது. அசுரபலம் கொண்ட கோலியாத்தை ஒரு சிறுவன் வெற்றி கொண் டது இதன் அடிப்படையில் தான். தலைவர் பிரபாகரன் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள் இவை.

மாங்குளம் முகாமில் பலத்துடன் இருந்த பகுதி களில் மறைந்திருந்த ஒரு பலவீனத்தையும் நாம் கண்டுபிடித்தோம்.

அதாவது மத்தியில் அமைந்திருந்த பிரதான முகாம் பகுதியிலிருந்து தொலைவில் (சுமார் 500 யாரிலிருந்து 700 யார்வரை) அமைந் திருந்த இந்த இரு மினிமுகாம் பகுதிகளுக் கும், அவசர நேரத்தில் ஆயுத — ஆள் உதவி களை அனுப்புவது இராணுவத்துக்கு சிரம மானதாக இருக்கும். எனவே சண்டை தொடங்கியதும் இந்தப் பகுதிகளுக்கு மத்திய முகாமிலிருந்து உதவிகள் வந்து சேராதபடி தடுப்பதற்காக எங்களது எறிகணைகளைப் பயன்படுத்தத் தீர்மானித்தோம்.



வான் ஆதிக்கம் எதிரியிடமே இருந்தது. இருந் தாலும் தாக்குதல் தொடங்கியதும் உலங்கு வானூர்திகள் முகாமுக்குள் இறங்கி — ஏற முடியாது. அவ்வப்போது முகாமைநோக்கி தடுப்பாரின்றி மிடுக்குடன் பறக்கப் போகும் "பசீலன்" அவற்றைத் தடுப்பான். ஆனாலும் முகாம் சுற்றாடலில் - அது நான்கு — ஐந்து மைல் தூரமாக இருந்தாலும் - விமானப் படையின் உதவியுடன் துருப்புக்களை இறக்கி, முகாமை நோக்கி நகர்த்தி, எம்மை பின்புறமாகத் தாக்க எதிரிக்கு நிறைய வாய்ப் புகள் இருந்தன. அதனால் மாங்குளத்தையும் அதை அண்டியிருந்த கிராமங்களிலும் உலங்கு வானூர்திகள் இறங்கக்கூடிய எல்லா இடங்களிலும் எமது போராளிகளை நட்டு வைத்திருந்தோம். முகாம் சுற்றாடல் எங்கும் அது வயல் வெளியோ, பற்றைகளோ, எல்லா இடங்களிலும் விமானத் தாக்குதலில் இருந்து பாதுகாக்க பாதுகாப்பு குழிகளை வெட்டிவைத் திருந்தோம். அது போல் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளையும் சில இடங்களில் பொருத்தி வைத்திருந்தோம்.

முகாமைச்சூழ வயல் வெளிகளே அதிகமாக இருந்தபடியால் அங்கே நெல்லு நாற்றுக் களைப்போல் மதிவெடிகளை எதிரி நட்டு வைத்திருந்தான். இவற்றை அகற்றுவதற்காக "பெங்களூர் டோபிடோ" எனப்படும் மதிவெடி அகற்றும் வெடிப்பொருளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது.

இது ஒரு மிகப்பெரிய தாக்குதல் முயற்சி என் பதால் காயமடையப்போகும் போராளிகளுக்கு அவசர சிகிச்சை செய்ய தற்காலிக வைத்திய நிலையம் ஒன்றை போர்முனையில் அமைத் தோம். மயக்க மருந்தோ, விறைப்பு மருந்தோ இல்லாத அறுவைச் சிகிச்சைகள் அங்கு நடக் கும். 18, 20 வயதுடைய வைத்திய நிபுணர் கள் - வரிபுலி உடையுடன் - குண்டு வெடிப்புக் களுக்கு மத்தியில் சிகிச்சை அளித்துக்கொண் டிருப்பார்கள்.

இவ்விதமாக ஒரு பெரிய தாக்குதலுக்காக எம்மை தயார்ப்படுத்தி வைத்திருந்ததோம்.

இரண்டாவது தாக்குதலுக்கான திட்டம்.

இந்தத்தாக்குதலைத் திட்டமிடும் போதே இரண்டு கட்ட முயற்சிகள் மூலம் முகாமை கைப்பற்ற முடிவுசெய்தோம்.

முதலாவது முயற்சியில் முகாமை சூழவுள்ள முக்கிய காவல் அரண்களைக் கைப்பற்றி அங்கே எமது நிலைகளை அமைத்தல்.

அங்கிருந்து அடுத்த முயற்சியாக. பிரதான முகாமைத்தாக்கி அதை முழுமையாக கைப் பற்றி, இராணுவமுகாமை அழித்தல்.

இந்த முயற்சி எத்தனை நான் நீடித்தாலும், இறுதி வெற்றி காணும்வரை முயல்வது என் பதில் திட்டமிடும் போதே உறுதியாக இருந் தோம்.

மாங்குளம் முகாம் எம்மிடம் வீழ்வதை தடுக்க சிறீலங்கா அரசின் முப்படைகளும் சேர்ந்து ஒருபாரிய இராணுவ நடவடிக்கையை எடுத் தால் முயற்சி தொடங்கப்படும் இடத்துக்கே சென்று எதிரிக்கு தொல்லை கொடுப்பது என் றும் தீர்மானித்து வைத்திருந்தோம்.

21-11-1990 அன்று மாவீரர் வாரத்தின் தொடக்க நாள். தமிழீழ தேசத்தை பிணைத் திருக்கும் அடிமைச்சங்கிலியை உயிர்ச்சுத் தியல் கொண்டு அடித்து நொறுக்க முயன்று வீரச்சாவடைந்தவர்களை மக்கள் நினைவு கூர்ந்துகொண்டிருந்தார்கள். அதேசமயம் எமது பீரங்கிப் படை அணி மாங்குளம் முகா மின் சுற்றாடலில் சுறுசுறுப்பாக வேலை செய் துகொண்டிருந்தது. முகாமையும் அதன் பிர தான காவல் அரண்களையும் குறிபார்க்கும் வண்ணம் எமது தயாரிப்புக்களான பீரங்கிகள் நிறுத்தப்பட்டக்கொண்டிருந்தன.

இன்னொரு புறத்தில் மாங்குளம் முகாமின்



வரைபடத்தை சுட்டிக்காட்டியபடி முகாமினுள் நாம் புகவேண்டிய பாதைகளையும், எங் கெங்கே இராணுவத்தின் மிதிவெடிகள் உள் ளன என்ற விபரங்களையும், இந்தத் தாக் குதலில் நாம் பயன்படுத்தப்போகும் தந்திரோ பாயங்களையும் தளபதி பால்ராஜ் தாக் குதலணிகளுக்கு விளங்கப்படுத்திக் கொண டிருந்தார்.

முகாம் தகர்ப்பிற்கான தாக்குதலணிகளும், அவற்றிற்குப் பக்கபலமாக உதவித்தாக்குத லணிகளும். இவற்றிற்கு ஆயுத — வெடிமருந் துகளை வழங்க விநியோக அணிகளும், தாக் குதலில் காயமடையும் போராளிகளை பாது காப்பான இடத்திற்கு அப்புறப்படுத்த மீட்புக் குழுவினரும், அவர்களுக்கு சிகிச்சை வழங் கும் மருத்துவ அணிகளும் பிரிக்கப்பட்டு அவற் றிற்குரிய கடமைகளும், கட்டளைகளும் வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன.

திருந்தது. இந்தப் புற்களை ஊடறுத்தபடி கப்டன் வதனனின் தலைமையில் ஓர் குழுவும், கப்டன் ஜெகனது தலைமையில் ஒரு குழுவும் நீண்ட கத்தரிகளைப் பயன்படுத்தி, முட்கம்பிகளை வெட்டி, முகாமினுள் புகுந்து கொண்டிருந்தார்கள்.

நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக அநேக மான எதிரி அரண்களிலிருந்து இயந்திரத் துப்பாக்கிகள் (எல். எம்.ஜி) இயங்கிக்கொண் டிருந்தன. எங்களுடைய தோழர்கள் ஒருவர் பின் ஒருவராகப் புல்தரைகளிலும், வரம் புகளிலும், மதில் ஓரங்களிலும் இரத்தம் கொப் பளிக்கச் சாயத்தொடங்கினார்கள்.

வதனனது குழுவும், ஜெகனது குழுவும் கிட்டத்தட்ட அழிந்தே போயின. இந்தக் குழுக் களினது இடத்தை நிரப்புவதற்காக லெப். கோபுவின் தலைமையிலும், மேஜர் திலீப்பின்



இராணுவத்தின் மிதிவெடிகள் தொடர்பாக வன்னிப் பிராந்தியத்தின் துணைத் தளபதி திரு. தீபன் கூறினார்...

இந்த முகாமைச்சுற்றி பெருமளவு மதிவெடிகள் புதைக் கப்பட்டுள்ளன என்பது எமக்கு நன்கு தெரியும். இந்த மிதி வெடிகளை அகற்றுவதற்காக "பெங்களூர் டோபிடோவைப்" பயன்படுத்தினோம் ஆனாலும் இதன் மூலம் எல்லா மிதி வெடிகளையும் அகற்ற முடியாது என்பதும் எமக்கு நன்கு தெரியும்

இருப்பினும், இந்த மாங்குளம் முகாமை வெற்றி கொண்டு விட வேண்டும் என்ற வெட்கைதான் இந்த மதிவெடிகளுக் கூடாகஎங்களை, முகாமை நோக்கி முன்னேற வைத்தது.

அடுத்தநாள் (22-11-1990) மேற்கு வானின்அ டிவாரத்திலிருந்த காடுகளில் சூரியன் மெது மெதுவாக மறையத் தொடங்கினான். இருள் மெதுமெதுவாக மூடத்தொடங்கியது. தாக் குதல் அணிகள் அவரவர்களென்று ஒதுக்கப் பட்ட பகுதிகளுக்கு நகரத்தொடங்கின்ற. வேறு வேறு தாக்குதல் அணிகளில் இருந்த நண் பர்கள் பரஸ்பரம் விடைபெற்றக் கொள்கின் றார்கள்.

சரியாக இரவு 7:00 மணிக்கு முகாமைச் சுற்றியிருந்த அனைத்துப் பீரங்கிகளும் இயக் கிவைக்கப்படுகின்றன. காட்டின் மௌனத் தைக் கழித்தபடி குண்டுகள் முகாமினுள் விழத்தொடங்கின.

எமது தாய்மண்ணில் ஒரு சிங்களப்படை முகாம் எங்கிருந்தாலும் அங்கே ஒரு நாள் பூகம் பம் வெடிக்கும் என்ற செய்தியைச் சொல் வதைப் போல், எமது பீரங்கிக் குண்டுகள் மாங்குளம் முகாமினுள் கார்ச்சித்துக்கொண் டிருந்தன.

இயற்கையான பூகம்பம் ஒரு சில வினாடிகள் தான் நீடிக்கும். நாம் அனுப்பிய பூகம்பம் 5 மணித்தியாலங்களாக மாங்குளம் முகாமை உலுக்கியெடுத்துக் கொண்டிருந்தன.

பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும்போதே எமது தாக்குதற்குழுவினர் எதிரியின் காவல் அரண் களுக்கு முன்னால் வந்துவிட்டார்கள்.

சரியாக நள்ளிரவு 12:00 மணிக்கு முகாமைச் சுற்றியிருந்த அனைத்துக் காவல் அரண் களையும் எமது வீரர்கள் தாக்கத் தொடங் கினார்கள்.

கன்னியாஸ்திரிமட மினி முகாமைச் சூழ முட்கம்பி வேலியிட்டு முகாம் பாதுகாக்கப் பட்டுக்கிடந்தது. செழிப்பான மண்ணைக் கொண்ட வயல்களில் நெல்லுக்குப் பதிலாக இடுப்பளவு உயரத்திற்கு புல்லு முளைத்

தலைமையிலும் குழுக்கள் அனுப்பப்பட்டன.

வதனன், ஜெகன் ஆகியோரது குழுவினரது உயிரற்ற உடல்களுக்கு அருகில் கிடந்து கோபு வினதும், திலீப்பினுனதும் குழுக்கள் போரா டிக்கொண்டிருந்தன. சண்டை கடுமையாக நடக்கின்றது திடீரென அசுரபலம் பெற்றதைப் போல் அந்தக் காவல் அரண்களிலிருந்து எதிரி சண்டையிட்டுக்கொண்டிருந்தர். எதிர்பார்த் ததை விட மேலதிக எதிர்ப்புக்களை போராளி கள் சந்தித்துக் கொண்டிருந்தார்கள்.

காப்பரண் வசதிகள் அற்ற யுத்தமுனையில் கோவுவும் திலீப்பும் வீரச்சாவடைகின்றனர்.

இந்தச் சம்பவத்தைப் பின்னர் தளபதி பால்ராஜ் நினைவு கூர்ந்தார்.

தாக்குதற்குமு ஒவ்வொன்றுடனும் நான் வோக் கி — டோக்கியில் தொடர்பு வைத்திருந்தேன், கப்டன் ஜெகனினதும், கப்டன் வதனனினதும் தொடர்புகள் அற்றுப்போக நிலைமையை ஊகித்து லெப். கோபுவையும், மேயர் திலீப்பை யும் அனுப்பியிருந்தேன். ஆனால் சிறிது நேரத்தில் இவர்களது தொடர்பும் அற்றுப் போகின்றது. எனக்கு ஒன்று புரிந்துவிட்டது. நான் அனுப்பிய குழுத் தலைவர்கள் நால்வரும் இறந்துவிட்டார்கள். ஆனாலும் சண்டை தொடர்ந்து கொண்டே இருந்தது. கட்டளைகள் அற்ற நிலையிலும் எஞ்சிய போராளிகள் சண் டையிட்டுக் கொண்டிருந்தார்கள். இந்த நிலை யில் அவர்களுக்கு என்ன கட்டளைகளை — எப்படி வழங்குவது என்ற சிக்கல் எழுந்தது. அவர்களை பின்வாங்கச் சொல்லுவதா, அல் லது அடுத்த அணி அவ்விடம் போய்ச் சேரும் வரை தற்காப்பு யுத்தத்தை நடாத்தச் சொல் வதா என திண்டாடிக் கொண்டிருந்தேன்.

அப்போது ஒரு சிறுவனின் குரல் என்னை வோக்கி டோக்கியில் அழைத்தது. மடத்திற்கள் சில அரண்கள் எம்மால் கைப்பற்றப்பட்டு விட் டது. என்றும் அவ்விதம் கைப்பற்றப்பட்ட ஒரு அரணுக்குள் இருந்து தான் தொடர்பு கொள் வதாகவும் அறிவித்தான்.

உடனே நான் மேலதிகமாக மேஜர் பிரபா தலைமையில் இரண்டு குழுக்களை அனுப்பி வைத்தேன்.

நேரம் பின் இரவு 3:15 மணி மடம் எமது கைக்குள் விழுந்துவிட்டது. உடனடியாக எமது குழுவொன்று வெற்றுச் சாக்குகளுடனும் மண்வெட்டிகளுடனும் உடசென்று கைப் பற்றிய பகுதியை பாதுகாப்பதற்காக அரண் களை அமைத்துக் கொண்டிருந்தது.

இது இவ்விதம் இருக்க இனி கோயில் மினி முகாமையும் அதனுடன் சேர்ந்த காவல் அரண்களையும் பார்ப்போம்.

கோயிலுக்கு முன்னால் ஒரு பெரிய மரம் உண்டு. அந்த மரத்தையும், அதன் சூழலை யும் காப்பரணாக்கிய எதிரி வெட்டவெளியால் வந்து கொண்டிருந்த எமது போராளிகளை நோக்கி தாக்கிக் கொண்டிருந்தான். முன்னரே குறிப்பிட்டபடி இந்தச் சண்டை எதிரிக்கு வாய்ப் பாகவே இருந்தது. கோயிலுக்கு முன்னால் இருந்த சுமார் 800 யார் தூரம் உடைய வயல் வெளிகளில் பாதுகாப்பில்லாது நகர்ந்துவந்த எமது குழுவில் பலரை தீர்த்துக்கட்டுவது எதிரிக்கு சுலபமானதாக இருந்தது.

பெண் போராளிகளின் வியத்தகு பங்கு.

இந்தப் பகுதி எதிரி அரண்களை நோக்கி பெண் போராளிகள் அணியைச் சேர்ந்த இரண்டு குழுக்களும் ஆண் போராளிகளுடன் இணைந்து தாக்குதலை நடாத்தினார்கள்.

அழிவைக் கொடுக்கும்.

ஒரு சண்டைக்களத்தில் எறிகணைகளும் கைக்குண்டுகளும் வெடிக்காத இடமொன்று இல்லையென்றே கூறவேண்டும் அந்த அபா யத்திற்கூடாகத்தான் இந்த டோபிடோவையும் கொண்டு செல்ல வேண்டும்.

இராணுவத்தினது மிதிவெடிகள் தொடர்பாக வன்னிப் பிராத்தியத்தின் துணைத்தளபதி திரு. தீபன் கூறினார்...

இந்த முகாமைச் சுற்றி பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பது எமக்கு நன்கு தெரியும் இந்த மிதிவெடிகளை அகற்றுவதற் காக "பெங்களூர் டோபிடோவைப்" பயன்படுத் தினோம் ஆனாலும் இதன் மூலம் எல்லா மதிவெடிகளையும் அகற்ற முடியாது என்பதும் எமக்கு நன்கு தெரியும்.

இருப்பினும், இந்த மாங்குளம் முகாமை வெற்றி கொண்டு விடவேண்டும் என்ற வேட் கைதான் இந்த மிதிவெடிகளுக்கூடாக எங் களை முகாமை நோக்கி முன்னேற வைத்தது.

கோயிலுக்கு கிழக்குப்பக்கத்தில் வீதியோரமாக இருந்த பிரதான காவல் அரணை எமது போராளிகள் நெருங்கிவிட்டார்கள். அந்த அரணுக்கு 20 மீற்றர் தொலைவிலிருந்த வயல் வரம்பைத் தவிர அங்கே எந்தக் காப் பரண்களும் இல்லை அந்த வரம்பின் மறை வுக்கூடாக முன்னால் இருக்கக்கூடிய எதிரி யின் மிதி வெடிகளை அகற்றும் பணியில் பெண்கள் அணி இறங்கியிருந்த வேளையில் தான் அரணுக்குள் இருந்த எதிரி வீசிய கைக் குண்டொன்று டோபிடோவுக்கு மிக அருகில்



50 கலிபர் துப்பாக்கியுடன், கைப்பற்றப்பட்ட ஏனைய ஆயுதங்களும்.

கோயிலுக்கு அப்பால் இருந்த பலமான இராணுவநிலை ஒன்றை தாக்கி அழிக்கப் பெண்களில் அணியொன்று சென்றுகொண் டிருந்தது. அதில் மிதிவெடி அகற்றும் குழு வொன்றும் இருந்தது.

எதிரி விதைத்த மிதிவெடிகளை அப்புறப்படுத்தி எமது வீரர்களை எதிரி முகாமுக்குள் பாதுகாப் பாக அனுப்பவேண்டிய பாரிய பொறுப்பு மதிவெடி அகற்றும் குழுவையே சேர்ந்தது.

போர் எவ்விதம் நடாத்திச் செல்லப்படுகின்றது என்பது சுலபமாக விளங்கிக்கொள்ள உதை பந்தாட்டப் போட்டியொன்றை உதாரணம் கொள்ளலாம். பல்வேறு பொறுப்புக்களுடன் நின்று விளையாடும் பதினொரு வீரர்களும் எவ்விதம் தத்தமது கடமைகளை சரியாக செய் வதன்மூலம் வெற்றியைப் பெற்றுக்கொள் கின்றார்களோ அதே போலத்தான் போரில் பல வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் குழுக்கள் தத்தமது கடமைகளை செவ்வனே நிறைவேற்றுவதன் மூலமே இறுதி வெற்றி யைப் பெறமுடியும்.

பெங்களூர் "டோபிடோ" எனப்படும் வெடிப் பொருளே மதிவெடி அகற்றப் பொதுவாகப் பயன்படுத்தப்படுவது. மதிவெடி உள்ள பகுதிக் குள் இந்த "டோபிடோ" வை வெடிக்கச் செய்வதன் மூலம் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் உள்ள மிதிவெடிகள் அதிர்வு காரணமாக வெடிக்கும் இதன் பின் அந்தப் பாதையூடாக எமது குழு முகாமுக்குள் புகமுடியும்.

எவ்விதமாக டோபிடோ வெடிக்கும் போது ஏற் படும் அதிர்வினால் அதைச் சூழ உள்ள மதி வெடிகளும் சேர்ந்து வெடிக்கின்றதோ, அதைப் போல இந்த டோபிடோவுக்கு அருகில் ஒரு எறி கணை, அல்லது ஒரு விமானக்குண்டு அல் லது ஒரு கைக்குண்டு விழுந்து வெடிக்கு மாயின் டோபிடோவும் அதனுடன் சேர்ந்து வெடித்து ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பாரிய

விழுந்து வெடிக்கின்றது. அதன் அதிர்வலை காரணமாக டோபிடோவும் வெடிக்கின்றது. வைதேகி, பெனாசிர். மரிஸ்டலோ மூவரும் வீரச்சாவடைகின்றார்கள் சிலர் பலத்த காய மடைகின்றார்கள். அதைத் தொடர்ந்து சில நிமிடநேரங்களில் அந்த அரண் எம்மிடம் வீழ்ச்சியடைகின்றது. இதே சமயம் கோவில் மினிமுகாமும் எம்மிடம் வீழ்ச்சியடைகின்றது.

இதேபோல் மாங்குளம் முகாமைச்சுற்றியி ருந்தபெரும் பாலான காவல் அரண்கள், மினிமுகாம்கள் வீழ்ந்துவிட்டன. அதற்குள் இருந்த இராணுவத்தினரின் பலர் மத்தியில் இருந்த முகாமுக்குள் தப்பி ஓடிவிட்டனர்.

கைப்பற்றிய அனைத்து அரண்களையும் நாம் இரவோடிரவாக புனரமைத்துக் கொண்டிருந் தோம். விடிந்ததும் நிகழப்போகும் விமானத் தாக்குதலை எதிர் கொள்ளத் தயாராகிக் கொண்டிருந்தோம்.

விடியற்காலை 5:00 மணி - இரண்டு குண்டுவீச்சு விமானங்களும், இரண்டு உலங்குவானூர்திகளும் முகாமை ஒரு முறை வட்டமிட்டபின் கன்னியாஸ்திரி மடத் தையும், கோவிலையும் நோக்கி தாக்கு தலைத் தொடங்கியது. இதே சமயம் மத்திய பகுதியிலிருந்த பிரதான முகாமிலிருந்த பிரதான முகாமிலிருந்து கிழக்குப்புறமாகப் புறப்பட்ட இராணுவம் வான்படையின் உதவி யுடன் இழந்த அரண்களை மீண்டும் கைப் பற்ற முயற்சி செய்தது.

இருள் கலைந்து விடிந்து கொண்டிருந்தது. விமானத்தாக்குதல் கடுமையாக இருந்தது. அதில் இருந்து பாதுகாப்புத்தேட எம்மால் முடியாமலே போயிற்று, ஏனென்றால் கடும் மழை காரணமாக மாங்குளம் பகுதிகளில் நிலக்கீழ் நீர் மட்டம் மிக உயர்ந்து காணப் பட்டது. இதனால் நிலக்கீழ் பதுங்குகுழிகளை அமைக்க முடியாமல் போய்விட்டது. மண் மூடைகள் கொண்டு நிலத்துக்கு மேல்



மாங்குளம் முகாமுக்கூடாகச் செல்லும் பாழ். - வவுனியா பிரதான பாதையில் — புலிகள்

அவசரம் அவசரமாக அமைத்த அரண்கள் விமானத் தாக்குதல்களும் ஈடுகொடுக்கவில்லை.

இதனால் நாம் கைப்பற்றிய எதிரியின் பல காவல் அரண்களிலிருந்து பின்வாங்க வேண்டி ஏற்பட்டது. ஆனாலும் கன்னியாஸ்திரிமடப் பகுதியையும், கோவிலடிப் பகுதிகளையும் என்ன விலை கொடுத்தேனும் பாதுகாத்தேதீருவது என்ற உறுதியுடன் மிகப் பெரிய இழப்பைச் சந்தித்துப் போராடிக் கொண்டிருந்தோம்.

23.11.1990 காலை 8:00 மணி எம்மிடம் இருந்து இராணுவம் மீண்டும் கைப்பற்றிய அரண்கள் பல வற்றின் மீது மீண்டும் தாக்குதலைத் தொடங்கினோம். சிதைந்த நிலையில் எம்மிடமிருந்து மீண்டும் கைப்பற்றிய அரண்களை, எதிரி புதுப்பித்துக்கொண்டிருந்தான். இவனை தாக்காது சில மணி நேரம் நாங்கள் விடுவோமாக இருந்தால் புதியதும் பலமானதுமான அரண்களை எதிரி அமைத்துவிடுவான் அதன் பின்னர் மீண்டும் அதைத்தாக்கி அழிக்க அதிகளவு விலையை நாங்கள் செலுத்த வேண்டி இருக்கும் என்ற காரணத்தினாலும், மனோரீதியாகச் சிதறடிக்கப்பட்ட எதிரியை மீண்டும் மனோபலம் பெற விடக் கூடாது என்ற யுத்த தந்திரோபாயத்திற்கு அமையவும் விமானங்களின் கண்களுக்குமுன்னே மீண்டுமொரு தாக்குதலைத் தொடுத்தோம்.

அது ஒரு மிகப்பெரிய — அசாதாரண துணிச்சல்மிக்க ஒரு தாக்குதல். வெட்டவெளியூடாக எதிரி அரணைநோக்கி எமது போராளிகள் பாய்ந்து சென்றார்கள் அதேசமயம் எந்தவித இடையூறுகளும் இல்லாது விமானங்களும் எமது போராளிகளைத் தாக்கிக் கொண்டிருந்தது.

எதிரியைப் பொறுத்தளவில் இது வாழ்வா — சாவா என்பதை தீர்மானிக்கும் யுத்தம். ஏனென்றால் முகாமைச் சுற்றி வர இருந்த அனைத்துக் காவல் அரண்களையும் பறிகொடுப்பதாக இருந்தால் அடுத்த நள் முகாம் நிச்சயமாக அழிக்கப்பட்டே தீரும் என்பதை எதிரி அறிந்து வைத்திருந்தான்.

எனவேதான் முழுமூச்சுடன் போரிட்டான். மடப்பகுதியையும், கோவிலடியையும் என்ன விலை கொடுத்தேனும் கைப்பற்றியே ஆக வேண்டும் என்ற எமது உறுதிக்கு நிகராக அதைப்பறிபோகவிடக்கூடாது என்பதில் எதிரியும் உறுதியாக இருந்தான்.

ஆனாலும் இழப்புக்களைத் தாங்கமுடியாது படிப்படியாக ஒவ்வொரு அரணையும் விட்டு எதிரி ஓடிக் கொண்டிருந்தான். பிற்பகல் 4:00 மணியளவில் கோயில், மடப்பகுதி, லக்சபானா மின்சாரம் செல்லும் பாதையடி ஆகியவை எமது முழுமையான கட்டுப்பாட்டுக்குள் வந்து விட்டது.

வான ஊர்திகள் இப்போதும் வட்டமிட்டுத் தாக்குதல்களை நடாத்திக் கொண்டிருந்தன. உலங்குவானூர்தி ஒன்றும், போர் விமானம் ஒன்றும் மாறிமாறி 24 மணிநேரமும் தாக்கிக் கொண்டே இருந்தன.

இதற்கு மத்தியில் தான், முகாமைச் சுற்றியிருந்த பச்சைப் புற்களை சிவப்பாக்கி, வீர சாவடைந்த போராளிகள் உடல்களை மீட்டுக் கொண்டிருந்தோம்.

எங்களுடைய போராளிகள் ஒவ்வொரு வருமே சாவைச் சந்திக்கின்றபோது, இன்னும் பல போராளிகளின் நெஞ்சில் சோகச்சுமையைப் புகுத்தி விட்டுத்தான் இறக்கின்றார்கள்.

ஒரு போராளி தனது நெஞ்சுக்கு நெருக்கமான பல போராளிகளை போராட்ட வாழ்வில் இழக்கின்றான்.

ஒரு விடுதலைப் போர் மற்றெல்லோரையும் விட போராளிகளில் தான் அதிகளவு சோகத்தை ஏற்படுத்துகின்றது. ஏனென்றால் ஒரு போராளி அன்பை, நேசத்தை மதிப்பவன், இரக்கம் நிறைந்தவன். தனது நண்பனை இழக்கும் போதும் மிகவும் வேதனை அடைகின்றான் ஆனால் அடுத்த கணம்... யதார்த்தத்தை புரிந்து கொண்டு — தன்னைத் தேற்றிக் கொள்ளவும் தெரிந்து வைத்திருக்கின்றான்.

கப்டன் ஜெகன், கப்டன் வதனன், மேஜர் திலீப் மூவருமே இணைபிரியாத நண்பர்கள். பல தாக்குதல்களில் ஒன்றாகப் பங்கு பற்றியவர்கள். இந்த மாங்குளம் தாக்குதலைப் பற்றி அவர்களுக்கு நன்கு தெரியும். இந்தத் தாக்குதலில் தாங்கள் சாவைச் சந்திக்கப்போகின்றோம் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

புகைப்படக் கருவியை கையில் வைத்திருந்த சக தோழன் ஒருவனைப் பார்த்து சிரித்துக் கொண்டு ஜெகன் கூறினான், "மச்சான்! எங்கள் மூண்டு பேரையும் ஒருபடம் எடுத்துவிடு. நாளைக்கு சுவரிலைதான் நிப்பம்."

மாங்களம் முகாம் தகர்ப்பு தொடர்பான எமது முதலாவது திட்டம் எதிர்பார்த்த படியே வெற்றியைக் கண்டு விட்டது.

இந்த முதற்கட்ட வெற்றிக்காக 57 போராளிகள் வீரச்சாவடைகின்றார்கள். இவர்களில் 45 பேர் கன்னியாஸ்திரி மடத்தையும், கோவிலடியை உள்ளிட்ட முகாமின் வடக்கு, வடகிழக்கு முனைகளை கைப்பற்றும் முயற்சியில் வீரச்சாவடைந்திருந்தனர் இவர்களில் 18 பேர் பெண்புலிகள்.

தென்பகுதி அரண்களை கைப்பற்றும் முயற்சியில் 12 போராளிகள் வீரச்சாவவைத் தழுவினார்கள். இவர்களில் இருவர் பெண் புலிகள்.

23ம் திகதி அந்திசாய்கின்றது. இன்றும் ஒரு வேள்வி நடக்கப் போகின்றது என்று சூரியனுக்கும் தெரிந்து விட்டது. அவசரம் அவசரமாக மேலைவானத்தின் அடிவாரத்தில் சென்று மறைந்து பொண்டிருக்கின்றான். போராளிகளின் இழப்பை குறைப்பதற்காக பகலைக் சுருக்கி இரவை நீடித்து முகாம் தாக்குதலில் தானும் ஒரு பங்களிப்பை செய்ய விரும்பியிருக்க வேண்டும் போலும்.

முகாமைச் சுற்றியிருந்த பீரங்கிள் அனைத்தும் முன்னோக்கி நகர்த்தப்பட்டு பிரதான முகாமை மட்டும் குறிபார்க்கின்றன.

இரவு 8:00 மணி அனைத்து பீரங்கிகளும் இயக்கி வைக்கப்படுகின்றன. அது ஒரு போர் முரசைப் போல முகாமினுள் விழுந்துவெடிக்கின்றது. முதல் நாள் சந்தித்த இறப்புக்கள் காரணமாக இன்றைய இரவு தாக்குதலில் ஈடுபடாது விட்டுவிடுவோம் என எதிரி முதலில் நினைத்திருக்காலம். ஆனால் எங்கள் பீரங்கிகள் முதல் நாள் இரவைப் போலவே இன்றும் உறுமத் தொடங்கியபோது எதிரி மிரளத் தொடங்கியிருப்பான்.

ஒரு கரும்புலித்தாக்குதலுடன் இன்றைய முகாம் தகர்ப்பை தொடங்குவோம் என எதிரி





கரும்புலி லெப் கேணல் போர்க் வெடிமருந்து நிரப்பிய வண்டியுடன்

எண்ணியிருக்க வேண்டும்.

சரியாக நள்ளிரவு 1:00 மணியளவில் எமது பீரங்கித் தாக்குதல் நிறுத்தப்படுகின்றது. யாழ் - வவுனியா பிரதானவீதியில் ஒரு வாகனத்துடன் இருளில் போர்க் நிற்கின்றான். மாங்குளம் முகாமைச் சுற்றியிருந்த அனைத்துப் போராளிகளுக்கும் வெடிமருந்து வண்டி செல்லப்போகும் செய்தி இரகசியபாசை மூலம் அனுப்பப்பட்டு தற்பாதுகாப்பை எடுக்கும் படி கட்டளையிடப்படுகின்றது...



கரும்புலி லெப். கேணல் போர்க்

போர்க் வண்டியில் ஏறி அமருகின்றான். துணைத்தளபதி தீபனை அழைத்து போர்க் சொன்னான். "பசீலன் விழும் போதே நிலம் அதிருது. நான் போக என்ன நடக்கும் என் பதை கற்பனை செய்ய இயலாமல் கிடக்குது எதுக்கும் பெடியளை கவனமாக தூரத்தில் போய் பாதுகாப்பெடுக்கும்படி சொல்லுங்கோ".

தன்னைத்தவிர தனது தோழர்களில் ஒருவன் கூட தனது வெடிமருந்து வாகனத்தால் இறக்கக்கூடாது என்பதில் போர்க் உறுதியாக இருந்தான்.



சிரித்த முகத்துடன், சாவை ஏற்று
வெடிமருந்து வண்டியில் கரும்புலி போர்க்

வெடிமருந்து வாகனம் ஓடத் தயாராகின்றது. அனைத்துப் போராளிகளுக்கும் இறுதிச் சமிக்கை கொடுக்கப்படுகின்றது. சிரித்த முகத்துடன் சாரதியின் இருக்கையில் அமர்ந்திருந்த போர்க் தனது இடுப்புப்பட்டியில் இருந்த கைத்துப்பாக்கியை கழற்றி எடுத்து அதனைத் தளபதி தீபனின் கையில் கொடுக்கின்றான்.

பூகம்பத்தை சுமந்த படி வாகனம் மெதுவாக முகாமை நோக்கி உருளத் தொடங்குகின்றது. மாங்குளம் சந்தியை சென்றடைந்தலும் பெரும் இரைச்சலுடன் உறுமிக்கொண்டு சென்றது. முகாமுக்குள்ளே பீப்பாய்கள் சிலிப்பர் கட்டைகள் கொண்டு வீதிக்கு குறுக்கே அரணகளை இராணுவத்தினர் அமைத்து வைத்திருந்தனர். அந்த அரண்களை இடித்துத் தள்ளியபடி செல்ல வேண்டும் அப்படிச் செல்லும் போது வாகன இயந்திரம் திடீரென நின்று விடக்கூடாது என்பதற்காக வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி முதலாவது கியரிலேயே வாகனம் உறுமிக் கொண்டு சென்றது.

பிரதான முகாமின் வாசலில் வெடிமருந்து வாகனம் நிற்பாட்டப் படவேண்டும் என்பது தான் திட்டம். ஆனால் அந்த இடத்திற்குப் போனபின்னர்தான் அதை விட அதிக அளவில் எதிரிகளை அழிக்கக்கூடிய இடம் ஒன்று போர்க்குக்கு தெரிந்திருக்கின்றது ஏற்கனவே குறிப்பிட்ட இடத்தையும் தாண்டி சென்ற வாகனம் முகாமே அதிரும் வண்ணம் வெடிக்கின்றது. அந்த இடம் ஒரே புகைமண்டலமாகக் கிடந்தது. சிங்களப்படை திணறிக் கொண்டு ஓடத்தொடங்குகின்றது.

தூரத்தில் தற்காப்பெடுத்திருந்த எமது அணிகள் முகாமிற்குள் நுழையத் தொடங்குகின்றன.

வாகனம் உறுமிக்கொண்டு வரும்போதே சிங்களப் படைகளுக்கு நடக்கப் போவது தெரிந்திருக்கும். முகாமுக்குள் பிரதான வீதிப்பக்கம் இருந்த அனைத்து இராணுவத்தினரும் முகாமின் உட்பக்கத்திற்குள் ஓடிச் சென்று தஞ்சம் புகுந்துவிட்டனர்.

எமது போராளிகள் முகாமிற்குள் புகத் தொடங்க அதே சமயம் முகாமின் கிழக்குப் பகுதியில் இருந்து ஒரு முனைக் கூடாக இராணுவம் தப்பியோடிக் கொண்டிருந்துது.

சரியாக 3:15 மணிக்கு முகாம் முழுவதும் சல்லடை போட்டுத் தேடப்பட்டு முடிந்தது. தப்பியோடிய இராணுவத்திற்குப் பின்னால் உடனடியாக எமது வீரர்களை அனுப்புவதைத் தவிர்த்தோம். லக்சாபானா மின்சார இணைப்பை வழிகாட்டியாகக் கொண்டே அவர்களின் கால்த்தடங்கள் கிடந்தன.

உடனடியாகவே இவர்களை அதிக தூரம் செல்லவிடாது வழிமறிப்பதற்காக அப்பகுதிக் காட்டை சுற்றி வளைத்தோம்.

புற்றுக்குள் இருந்து நாகபாம்பு புறப்பட்டு விட்டது.

அது புற்றுக்குள் இருந்தால் தான் அதைப் பிடிப்பதோ அல்லது கொல்லுவதோ சிரமம் இனி நிரந்தரமாகப் புகுவதற்கு அதற்கு இடமில்லை. எனவே நாம் சண்டையை காலையில் வைத்துக் கொள்ளத் தீர்மானித்தோம்.

22ம் திகதி இரவும், 23ம் திகதி பகலும் நடந்த கடுமையான சண்டையில் இராணுவத்திற்கு ஏற்பட்ட தோல்வியை அவர்களின் இயலாத் தன்மையை ஏற்றுக்கொண்ட விட்டார்கள்.

இன்னுமொரு சண்டைக்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை. ஆனாலும் அடுத்த நாள் புலிகள் தாக்குவார்களா? அல்லது தாக்கமாட்டார்களா? என்பதில் இராணுவத்திருக்கு சந்தேகம் இருந்திருக்கின்றது.

தாக்கினாலும் சரிதான், தாக்காது விட்டாலும் சரிதான். எது நடந்தாலும் தப்பிக் கொள்வதற்கு முடிவெடுத்து விட்டார்கள்.

ஆகவே இறந்த இராணுவத்தினரது ஒரு சில ஆயுதங்களையும், சில வெடிமருந்துகளையும் முகாமுக்கு மத்தியில் இருந்த கிணற்றுக்குள் போட்டு விட்டு தூக்கிக் செல்லக் கூடிய ஆயதங்



கரும்புலி லெப். கேணல் போர்க்
மாப்பாணப்பிள்ளை அரசெத்தினம்
வவுனியா
23.11.1990 மாங்குளம் ஸ்ரீலங்கா இராணுவ
முகாம் மீதான தாக்குதல்

வெடிமருந்து வாகனம் உட்செல்ல நிலைமை யை புரிந்துகொண்டு தப்பி ஓடப் புறப்பட்டிருக் கின்றார்கள்.

24.11.1990 அதி காலை தப்பியோடிய இராணு வத்தினர் கனகராஜன் ஆற்றுக் குள் வைத்து சுற்றி வளைக்கப்பட்டு தாக் கப்பட்டார்கள்.

இராணுவத் தலை மைப் பீடம் தமக்கு உதவி களை அளித்து மீட்கமுயலும் என்ற நம்பிக்கை யில் ஒரே இடத் தில் குழ மி யிருந்த இராணுவத் தினர் இந்தத் தாக் குதலைத் தொடர்ந்து சிதறி ஓடத் தொடங் கினர். இயந் திரத் துப்பாக்கிகளை காடு க ளு க் கூ ட ா க கொண்டு ஓடமுடியாத நிலை யில் அவற் றைப் போட்டுவிட்டு ஓடத்தொடங் கினர். அந்த இடத்தில் இறந்த இராணுவத் தினரது தொகையிவிடகூடு த ல ான ஆ ய த ங் களைக் கைப் பற்றி னோம்.

சிறு, சிறு குழுக்களாக திசைமாறி காடுகளுக் குள் அலைத்தவர்களை கிராம மக்களின் உதவியுடன் அழித்து ஆயுதங்களை கைப்பற் றினோம்.

பல இடங்களில் மக்களின் துணிச்சலும், தப்பி யோடிய இராணுவத்தினர் தேடி அழிக்கப்பட வேண்டும் என்ற உணர்வுடன், உள்ளூரில் செய்யப்பட்ட வேட்டைத்துப்பாக்கிகள் கொண் டு எங்களுடன் காடுகளில் அலைந்து மக் கள் அனைத்தையும் எடுத்து வைத்தபடி தயாராக இருந்திருக்கின்றார்கள்.

மீண்டும் முகாம் தாக்கப்பட்டால் காடுகளுக் குள் ஓடுவது என்றும் தாக்காது விட்டால் முகாமிலேயே தொடர்ந்து இருப்பது என்றும் தீர்மானித்திருக்கின்றார்கள்.

23ம் திகதி நள்ளிரவு முகாம் தாக்கப்பட்டு, களும் நடத்திய இராணுவ நடவடிக்கைகள் எமக்கு மேலும் உற்சாகத்தை அளித்தது.

பாலமோட்டை என்ற காட்டுப் பகுதியில் அலைந்து திரிந்த ஒரு சிப்பாய் அருணாசலம் என்ற முதியவரை தற்செயலாகக் கண்டு அவரை மிரட்டி வவுனியாவுக்கு பேகும் வழியை வாட்டுமாறு கேட்டிருந்தான்.

முதியவரும் சமயோசிதமாக முடிவேடுத்து அவரை காட்டுக்குள்ளிருந்து கிராமத்தை நோக்கி அழைத்துவந்து அங்கே வைத்து சிப் பாயினது ஆயுதத்தைப் பறிக்க முயன்றிருக் கின்றார். இந்த இழுபறியில் சிப்பாய் எறிய முயன்ற கைக்குண்டு தவறி அவனது கால டியிலேயே வெடிக்கின்றது. சிப்பாய் சாவடை கின்றான். கடுங்காயங்களுக்கு உள்ளான முதியவர் அவனது துப்பாக்கியையும், கோல் சரையும் எடுத்து சத்தம் கேட்டு அவ்விடத்துக்கு விரைந்து சென்ற — போராளிகளிடம் ஒப்படைத்தார்.

இந்த முதியவர் யாழ் - வைத்தியசாயில் சேர்க்கப்பட்டு அங்கு வீரச்சாவடைந்தார்.

இதேபோன்று கனகராஜன் குளப்பகுதியில், மூன்றுசிப்பாய்கள் ஆயுதங்களுடன் சென்று ஒரு மூதாட்டியை மிரட்டி உணவு கேட்டிருக் கின்றார்கள். அதற்கு இசைந்த மூதாட்டியும் உணவைக் கொடுத்து விட்டு போராளிகளுக்கு செய்தியை அனுப்பிவைத்தார். சிறிது நேரத் தில் அவ்விடத்துக்கு வந்த போராளிகள் அவர் களைச் சரணடையவைக்க முயன்று அதில் தோல்வி கண்டு இறுதியில் சுட்டுக்கொன்று ஆயுதத்தையும் கைப்பற்றினார்கள்.

இன்னுமொரு இடத்தில் ஒரு இயந்திரத் துப் பாக்கியுடன் (எல்.எம்.ஜி) வீடோன்றுக்குள் பலாத்காரமாக புகுந்து உணவருந்திக் கொண்டிருந்த போது அவ்வீட்டுப் பெண் அவ னது இயந்திரத் துப்பாக்கியை தூக்கிக் கொண்டு போராளிகள் நின்ற இடத்தை நோக் கி ஓடிச்சென்று அவர்களிடம் ஒப்படைத்தார். பின்னர் போராளிகள் அவ்விடத்துக்கு விரைந் தபோது அந்தச் சிப்பாய் மீண்டும் காட்டுக்குள் ஓடி மறைந்து விட்டான்.

கனகராஜன் குளப்பகுதிக் கிரமமொன்றில் திடீரென ஒரு இராணுவீரனைக் கண்ட ஒரு வர் கத்தியுடன் அவனை துரத்திச் சென்றிருக் கின்றார். அவன் துப்பாக்கிப் பிரயோகம் செய்த படி ஓடியிருக்கின்றான். இவர் மீண்டும். மீண் டும் விரட்டிச் சென்று அவனது ஆயுதத்தைப் பறிக்க முயன்றிருக்கின்றார். இவர்கள் இரு வருக்கும் இடையில் நடந்த சண்டையில் இராணுவத்தினது துப்பாக்கிச்சூடுபட்டு இந்த மண்ணின் மைந்தன் வீரச்சாவடைந்தான். வற்றைப் போன்று மக்கள் பங்குகொண்ட பலசம்பவங்கள் நடந்துள்ளன.

உலங்கு வானூர்தி மூலம் படையினர் மீட்பு

இதேசமயம் 26ம் திகதி (26.11.1990) மாலை ஆறு உலங்கு வானூர்திகளும் இரண்டு போர் விமானங்களும் மாங்குளம் முகாமிலிருந்து சுமார் 5 கி. மீற்றர் தொலைவிலுள்ள கனக ராயன் குள காட்டுப்பகுதியை சுற்றி வட்டமிட் டபடி இருந்தது — சிறிது நேரத்தில் ஐந்து உலங்கு வானூர்திகள் தரையிறங்கி ஏறின. தப்பியோடிய இராணுவத்தினரில் ஒருபகுதி யினர் அந்த முயற்சிமூலம் மீட்டுச் செல்லப்பட் டனர்.


இதேபோன்று இரண்டு நாட்களுக்குப் பின்னர் மீண்டுமொருமுறை அதே பகுதிக் காட்டுக்குள் ளிருந்து சில இராணுவத்தினர் உலங்கு வானூர்தி மூலம் மீட்டுச் செல்லப்பட்டனர்.

எஞ்சியவர்களை மீட்பதற்கென்று வவுனியா வின் எல்லைப்புறக் காடுகளிலிருந்து பெரிய தொரு இராணுவ நடவடிக்கையை சிங்கள இராணுவம் செய்து பார்த்தது. ஆனால் காட்டுக் குள் வைத்து இரண்டு இடங்களில் அது பல மான அடியைப் பெற்றதினாலும், முன்னேற முயற்சிப்பதில் பலன் இல்லை என படையினர் கண்டுகொண்டதாலும் வந்தவழியே திரும்பிச் சென்றுவிட்டனர்.

அதன் பின் மாங்குளத்தில் சுதந்திரக்காற்று வீசியது. இந்த முகாமை தகர்த்தெறியும் முயற் சியில் உயிரிழந்த 108 போராளிகளின் இறுதி மூச்சு வன்னிப்பிராந்தியத்தில் ஒரு தென் றலாய் படர்ந்து. இன்று மறுபடியும் எமது மண் சிங்கள ஆக்கிரமிப்பாளர் கைவசம் சென்றது. மறுபடியும் பயணம் தொடரும், விடிவு கிட்டும்வரை.

-விடுதலைப்புலிகள் மார்கழி 1990-







காடுகளை இன்னும் அழித்துக்கொண்டிருக்கும் நாடுகள் எவை?

20 நவம்பர் 2021




அமேசானிலிருந்து வரும் வெட்டப்பட்ட மரங்கள்

பல உலக நாடுகளின் தலைவர்கள் 2030 வாக்கில் காடுகள் அழிப்பை நிறுத்தவும், மீண்டும் காடு வளர்க்கவும் உறுதி அளித்துள்ளனர்.

ஆனால், 15 ஆண்டுகளில் பிரேசிலின் அமேசான் மழைக்காடுகளில் காடழிப்பு மிக அதிக அளவில் உள்ளது. மற்ற இடங்களிலும் காடழிப்பை நிறுத்துவது சவாலான ஒன்றாகவே உள்ளது.

பிரேசில்: தொடரும் சட்டவிரோத மரம் வெட்டுதல்

பரந்து விரிந்துள்ள அமேசான் மழைக் காடுகளில் 60 சதவீதம் பிரேசில் நாட்டுக்குள் வருகின்றன. தீங்கு விளைவிக்கிற கரியமில வாயுவை உறிஞ்சுவதில் இந்த அமேசான் மழைக்காடுகள் முக்கியப் பங்காற்றுகின்றன. இந்த காடுகள் இப்படி இந்த கரியமில வாயுவை உறிஞ்சிக்கொள்ளாவிட்டால், அது வளிமண்டலத்தில் கலந்துவிடும். பிரேசிலில் காடு அழிப்பு நடவடிக்கைகள் 2006ம் ஆண்டு முதல் தொடர்ந்து குறைந்து வந்த நிலையில்



மீண்டும் காடழிப்பு அதிகரித்துள்ளதாக அந்நாட்டின் தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் (INPE) தெரிவித்துள்ளது.

பிரேசில் காடழிப்பு

அக்கழகத்தின் சமீபத்திய அறிக்கையில் கடந்த ஆண்டு மட்டும் 22 சதவீதம் காடழிப்பு அதிகரித்துள்ளதாகவும், 13,235 சதுர கி.மீ. காடுகள் அழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமேசானில் சுரங்கத் தொழிலை ஊக்குவிப்பது, காடுகளை அழித்து அங்கே விவசாயம் செய்ய ஊக்கு விப்பது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள் வதாக அந்நாட்டின் அதிபர் சயீர் போல்சனாரோ விமர் சனத்துக்கு உள்ளாகிறார்.

சுற்றுச்சூழல் சட்டங்களை மீறும் மரம் வெட்டிகள் மற்றும் விவசாயிகள் மீது சட்ட நடவடிக்கை மேற் கொள்ளும் அரசு முகமைகளுக்கான நிதி யை போல் சனாரோ குறைக் கிறார். சட்ட விரோதமாக மரம் வெட்டுவோரிடம் இருந்து வசூலிக்கப்படும் அபராதம் 2020 ம் ஆண்டில் 20 சதவீதம் அளவுக்கு குறைந்துள்ளது.

மிகத்துல்லியமான புள்ளிவிவரங்கள் கிடைக்கவில்லை. ஆனால், சமீபத்திய ஆய்வுகளின்படி பிரேசிலில் நடந்த காடழிப்பு மற்றும், வாழிட அழிப் பு ஆகியவற்றில் 94 சத வீதம் சட்ட விரோதமாக செய்யப்பட்டவை.

ஆனால், அமேசான் காடுகள் அழிக்கப்படுவது பிரேசிலில் மட்டும் நடப்பதில்லை. அதன் அண்டை நாடான பொலிவியாவிலும் இது நடக்கிறது.

கடந்த ஆண்டு பொலிவியாவில் கிட்டத்தட்ட 3 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலான வெப்பமண்டலக் காடுகள் அழிவை சந்தித்தன - உலகில் நடந்த நான்காவது பெரிய காடழிப்பு இது.

முக்கிய நாடுகளின் வன அழிப்பு விவரங்கள்

காங்கோ படுகை: வேளாண்மை மற்றும் சுரங்கம்


காங்கோ படுகை என்பது உலகின் இரண்டாவது பெரிய மழைக்காடு ஆகும். இந்தப் படுகை பாதிக்கு மேல் காங்கோ ஜன நாயகக் குடி யரசு நாட்டுக் குள் வருகிறது.

பெரிய மற்றும் சிறிய நிறு வனங்களை நடத்தும் சட்ட விரோத மரம் வெட்டும் நடவடிக்கையால்தான் காட ழிப்பு நடக்கிறது என சுற்றுச்சூழல் பிரசார அமைப்பான கிரீன்பீஸ் தெரிவிக்கிறது.

பிழைப்புநிலை வேளாண்மை (குடும்பத்தின் தேவையை நிறைவு செய்ய மட்டும் செய்யப்படும் வேளாண்மை), எரிபொருளாகப் பயன்படும் கரி தயாரிப்புக்காக காடுகளை அழித்தல், நகர்ப்புற விரிவாக்கம், சுரங்கத் தொழில் ஆகிய வேறு அச்சுறுத்தல்களும் நிலவுகின்றன.

காங்கோவில் காணாமல் போகும் வன பரப்பு

கடந்த ஐந்து ஆண்டுகளில், ஆண்டு தோறும் கிட்டத்தட்ட 5 லட்சம் ஹெக்டேர்




முதன்மைக் காடுகள் அழிக்கப்பட்டதாக குளோபல் ஃபாரஸ்ட் வாட்ச் என்ற அமைப்பு கூறுகிறது.

பொதுக்காடுகளில் அறுவடை செய்வதற்கான குத்தகை ஒதுக்கீடுகளை தணிக்கை செய்ய கடந்த மாதம் உத் தரவிட்டார் அதிபர் ஃபெலிக்ஸ் ஷிசேகெடி. 14 லட்சம் ஹெக்டேர்கள் தொடர் பான உத்தரவு ஒன்றும் அதில் அடக்கம். இது தொடர் பாக ஊழல் குற்றச்சாட் டுகளும் வந்தன. இதை செயற்பாட்டாளர்கள் வரவேற் றனர்.

மரம் வெட்டுவது தொடர்பாக 2002ம் ஆண்டு முதல் இருந்துவந்த தடை உத் தரவு ஒன்று இந்த ஆண்டு தொடக்கத்தில் ரத்து செய்யப்படுவது தொடர்பாக ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. ஆனால், இத் தனை காலம் அது செயல்படுத்தப்பட்டதே இல்லை.

இந்த ஆண்டு தொடக்கத்தில் காடுகளைக் காக்கவும், காட்டு பரப்பளவை 8 சதவீதம் அதிகரிக்கவும் அளிக்கப்பட்ட ஒப்புதலுக்கு




முரண்பாடாக அமைந்துள்ளது இது.

இந்தோனீசியா – பாமாயில் தோட்டங்கள்

இந்தோனீசியாவில் காணாமல் போகும் வன பரப்பு

கடந்த இரு தசாப்த காலங்களில் உலகில் காட ழிப்பு அதிகம் நடந்த 5 நாடுகளில் இந்தோனீசியாவும் ஒன்று.



2002 முதல் 2020 வரையிலான கால கட்டத்தில் இந்த நாட்டில் 97.5 லட்சம் ஹெக்டேர் காடுகள் அழிவை சந்தித் துள்ளதாக குளோபல் ஃபாரஸ்ட் வாட்ச் அமைப்பு கூறுகிறது.

காடுகள் அழிப்புக்கு முக்கியக் காரணமாக உள்ள பாமாயில் தோட்டத் தொழில் மீது நடவடிக்கை எடுப்பதாக 2014ல் உறுதி அளித்தார் அதிபர் விடோடோ.

அதிகாரபூர்வமான புள்ளிவிவரங்களின் படி 80 சதவீத காட்டுத் தீ இதற்காகவே மூட்டப்படுகிறது. 2016ல் அதிகபட்சமாக 9.29 லட்சம் ஹெக்டேர் காடுகள் காணாமல் போயின. ஆனால், அதன் பிறகு காடழிப்பு விகிதம் குறைந்துவந்தது.

2020ல் ஆண்டு காடழிப்பு 2.70 லட்சம் ஹெக்டேராக குறைந்தது. 2019ல் அதிபர் விடோடோ புதிதாக காடுகளை அழிக்கும் திட்டங்களுக்கு மூன்றாண்டு தடை விதித் தார். 6.6 கோடி ஹெக்டேர் காடுகள் தொடர்பானது இந்த தடை. இந்த ஆண்டு இந்த தடை காலவரையறை இன்றி நீட்டிக்கப்பட்டுள்ளது.

காடழிப்பை நிறுத்த என்ன திட்டம் உள்ளது?

இந்தோனீசிய வன அழிப்பு

புவி வெப்பநிலை அதிகரிப்புக்கு முக்கியக் காரணமான கரியமில வாயுவை பெரிய அளவில் காடுகள் உறிஞ்சிக்கொள்கின்றன. எனவே, மரங்களை வெட்டுவது பருவநிலை மாற்றத்தில் பெரிய தாக்கத்தை செலுத்தும்.


1990 முதல் 42 கோடி ஹெக்டேர், அதாவது 100 கோடி ஏக்கர் காடுகள் அழிவை சந்தித்துள்ளன என்கிறது ஐ.நா. இதற்கு முக்கியக் காரணம் வேளாண்மை.

சமீபத்தில் நடந்த காலநிலை மாநாட்டில், 2030 வாக்கில் காடழிப்பை தடுத்து நிறுத்தவும், காடுகளை வளர்க்கவும் 100க்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் வாக்குறுதி அளித்தனர்.

இதற்கு முன்பே காடுகளைக் காக்க முயற்சிகள் நடந்துள்ளன. காடழிப்பை 2020ல் பாதியாகக் குறைக்கவும், 2030ல் நிறுத்தவும் 2014ம் ஆண்டே ஒரு திட்டத்தை அறிவித்தது ஐ.நா.

2030 வாக்கில் காடுகளின் பரப்பளவை உலக அளவில் 3 சதவீதம் அதிகரிக்க ஒரு புதிய இலக்கு 2017ல் நிர்ணயிக்கப்பட்டது.

1990-2020 வரை இழந்த வன பரப்பு



வரைபடம்

ஆனால், காடழிப்பு தீவிரமாக நடந்துவந்தது என்கிறது 2019ல் வெளியான அறிக்கை ஒன்று. இது பருவநிலை மாற்றத்துக்கு எதிராகப் போராடுவதற்கு ஒரு சவாலாக உருவாகியிருப்பதாகவும் அது கூறுகிறது.

இயற்கையாகவோ, மரம் நட்டதாலோ சில இடங்களில் மறு காடு வளர்ப்பு நடந்துள்ளது. கரியமில வாயுவை முழுமையாக உறிஞ்சும் அளவுக்கு மரங்கள் பக்குவ மடைய பல ஆண்டுகளாகும்.

பிபிசி உண்மை சரிபார்க்கும் குழு



கடந்த பத்தாண்டில் ஆண்டுதோறும் 47 லட்சம் ஹெக்டேர் காடுகள் அழிந்துள்ளன. பிரேசில், காங்கோ ஜனநாயக குடியரசு, இந்தோனீசியா ஆகிய நாடுகளில் இந்த அழிவு அதிகம் நடந்துள்ளது.

நன்றி: BBC Tamil

15 ஆம் ஆண்டு
வீரவணக்கம்



04.03.1938 தேசத்தின் குரல் 14.12.2006

அன்ரன் பாலசிங்கம்

{அன்டன் ஸ்டானிஸ்லாஸ் பாலசிங்கம் – மண்ணூர், மட்டு ...கரவெட்டி, யாழ்}

விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் மூத்த தலைமகனாக, பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்று சேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன்.

-தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் -

With Best Wishes From

KENNEDY LAW OFFICE

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....

கெனடி சட்ட அலுவலகம்

- ☑ REAL ESTATE LAW காணி, வீடுகள் - வாங்கல், விற்றல், அடமானம்
- ☑ BUSINESS LAW வணிகச் சட்டம்
- ☑ CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
- ☑ FAMILY LAW குடும்பச் சட்டம்
- ☑ IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
- ☑ ODSP APPEALS
- ☑ SMALL CLAIMS
- ☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- ☑ NOTARIZING & COMMISSIONING





W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC


Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com

2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)

WEXFORD
WELLNESS CARE INC.







We treat all car accident injuries!

- ✶ Massage Therapy
- ✶ Physiotherapy
- ✶ Orthopaedic
- ✶ Acupuncture
- ✶ Chiropractic
- ✶ Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203



வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

ஒதிய மலை படுகொலை 01.12.1984



முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டு சுட்டான் பிரதேசசெயலர் பிரிவில் நெடுங்கேணிக்கு அருகில் ஒதிய மலை என்ற கிராமம் அமைந்துள் ளது. தமிழ் மக்கள் நீண்ட காலமாக வாழ்ந்து வந்த பகுதிகளில் குற்றச் செயல்களில் தண்டனை பெற்ற சிங் களக் குற்றவாளிகளும் அவர்கள் குடும்பங்களும் இராணுவப் பாது காப்புடன் சிங்கள அரசு குடியேற்றி வந்தது. அந்த வகையில் கென்பாம், டொலர்பாம் போன்ற இடங்களைத் தொடர்ந்து ஒதியமலைப் பகுதி யிலும் குடியமர்த்தப்பட்டார்கள்.

1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் இருபத்தொன்பதாம் திகதியி லிருந்து மார்கழி இரண்டாம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தது. மார்கழி மாதம் முதலாம் திகதி பதவியாவிலிருந்து ஒதிய மலை கட்டுக்கரை ஊடாக வந்த இராணுவத்தினர் ஒதியமலைக் கிராமத்தைச் சுற்றிவளைத்தனர். மக்கள் அதிகாலை வீட்டின் கதவு களைத் திறந்தபோது பச்சை நிற உடைகளுடனும் ஆயுதங்களுட னும் இராணுவத்தினர் நின்றனர். "நாங்கள் அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தினுள் கூட்டம் வைக்கப் போகிறோம் ஆம்பிளைகள் மட்டும் வாங்க என சரளமாகத் தமிழில் கூறி, முற்பதிற்கும் மேற்பட்ட ஆண் களை கைது செய்து கிராம அபி விருத்திச் சங்கக் கட்டடத்திற்குள் அழைத்துச் சென்றனர். அவர் களின் கைகளை பின்னாற் கட்டி சித்திரவதை செய்து சுட்டும் வெட் டியும் படுகொலை செய்தனர். இராணுவம் சென்றபின் அங்கு சென் று பார்த்தபோது கைதுசெய் யப்பட்டவர்களில் இருபத்தேழு பேர் மிகவும் கோரமாக கொல்லப்பட்டு மண்டபத்தினுள் கிடந்தார்கள். இறந்தவர்களில் அனேகர் திருமண மாகிக் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். பலர் முதியவர்கள், சிலர் கிளிநொச்சி மாவட்டம், பளை, பச்சிளைப் பள்ளியிலிருந்து வயல் வேலைக்காக ஒதியமலை வந்தவர் கள், வேறு சிலர் அயல்க்கிராமமான பட்டிக்குடியிருப்பிலிருந்து உறவினர் வீட்டுத் திருமணத்திற்காக வந்தவர் களாவார்கள். இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட இச்சம்பவத் தினை தொடர்ந்து ஒதியமலைக் கிராம மக்கள் இடம் பெயர்ந்து முல்லைத்தீவில் உள்ள பாட சாலைகளிலும் கோயில்களிலும் தஞ்சமடைந்தார்கள்.

கிராம அபிவிருத்திச் சங்கத்தலை வர் நா.கந்தசாமி இப்படுகொலை தொடர்ப்பாகக் குறிப்பிடுகையில்:

"அன்றைய தினம் காலை 6.30 மணியளவிலே எமது கிராமத்திற் குள் புகுந்த இலங்கை இராணுவத் தினர் எமது கிராமத்தை நான்கு பக்கத்தாலும் சுற்றிவளைத்து, எமது கிராம மக்களில் கண்ணிற்பட்டவர் களையெல்லாம் பிடித்து ஓரிடமாக்கி அவர்களது மேலங்கியைக் கழற்றி அதனைக்கொண்டு அவர்களது கைகளைப் பின்பக்கமாகக் கட்டி ஒதியமலைக் குளக்கட்டருகே கொண்டு வந்தனர். அந்த நேரத்திலே அவ்வீதியாற் சென்ற செல் வராசா என்பவரது உழவு இயந் திரத்தை மறித்து அதிலிருந்தவர் களையும் பிடித்து கிராம அபிவிருத் திச் சங்கக் கட்டடத்திற்குக் கொண்டு சென்றார்கள். சிறிது நேரத்தின் பின் அலறல் சத்தமும் அதைத் தொடர்ந்து துப்பாக்கிச் சூட்டுச்சத்தமும் கேட்டது. அத்துடன், பிடித்தவர்களில் வயோதிபர்களாகப் பார்த்து கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், சின்னையா, கனகையா, ஆகியோரைத் தங்களது பாதுகாப்பிற்காக அவர் களுடைய பண்ணைக்கு எனது உறவினர் ஒருவரின் உழவு இயந் திரத்தில் ஏற்றிக்கொண்டு சென்று விட்டார்கள்.

இராணுவம் வந்ததை அறிந்து காட்டுக்குச் சென்றிருந்த நான் பின்னர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத் தினுள் ஓடிச்சென்று பார்த்தபோது மூன்று நான்கு பேராக நிறுத்தி வைத்து இருபத்தி ஏழு பேரையும் சுட்டும் வெட்டியும் படுகொலை செய் திருப்பதைக் கண்டேன். நான் பார்த்த பொழுது குற்றுயிருடன் இருந்த சிலரும் தண்ணீர் தண் ணீர் எனக் கேட்டுக் கொண்டு இறந் ததையும் கண்டேன். பின்னர் அவர் களில் கால் வேறு, தலை வேறாக இருந்தவர்களை சீராக கட்டடத்தின் இரு மருங்கும் அடுக்கி விட்டு அங் கிருந்து கால்நடையாக முல்லைத் தீவு நோக்கிஓடினோம்.

அந்த நேரம் இராணுவக் கெடு பிடிகள், ஊரடங்கு உத்தரவுகள் அதையும் மீறி பெரிய முயற்சி யெடுத்து அரசாங்க அதிபர், காவல்த் துறை அதிகாரிகள், நீதியாளர்கள், உதவி அரசாங்க அதிபர், கிராம சேவையாளர்கள் என அனை வரையும் அழைத்து வந்து நடந்த சம்பவத்தைக் காட்டினோம். இறந் தவர்களது கைகள் கட்டப்பட்ட நிலையில் அவர்களது கண்கள், காதுகள், மூளைகள் வெளியிலே வந்த கோரக்காட்சியைப் பார்த்து அவர்கள் கதிகலங்கிப் போனார் கள். பின்னர் முழுக் கிராமத்தின ரும் சேர்ந்து கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு முன்பாக பெரிய மரங் கள் போட்டு அதன் மேல் அவர் களை அடுக்கித் தீ மூட்டினோம். அதன் பின்பு இறந்த உறவுகளை நினைத்து அழுது புலம்பிக் கொண்டிருக்கும் சமயம் முல்லைத்தீவி லிருந்தும் சிலோன் தியேட்டர், டொலர்பாம், கென்பாம்களிலிருந் தும் இராணுவத்தினர் ஒதியமலை நோக்கி வருவதாகக் கேள்விப்பட்டு எல்லோரும் பாதுகாப்பிற்காக நெடுங்கேணி நோக்கி வந்தோம்."



வெலிஓயா சிங்களக் குடியேற்றத் திட்டத்தால் பாதிக்கப்பட்ட ஒதிய மலைக் கிராமம் தொடர்ப்பாக அக் கிராம வாசியான சிவசேகரம் சததிய நாதன் அவர்க்களின் ஒதியமலைப் படுகொலைகள் தொடர்ப்பான சுரக் கக் குறிப்பு.

"நான் பிறந்து வளர்ந்த பூர்வீகக் கிராமம் வெலிஓயா எனச் சொல்லப் படும் சிங்களக் குடியேற்றத்தின் எல்லைக் கிராமமான ஒதியமலைக் கிராமம் ஆகும். அதற்கு அடுத்தாற் போல் பெரியகுளக் கிராமமும் காணப்படுகின்றது. 1984ம் ஆண்டு மார்கழி மாதம் இரண்டாம் திகதி யன்று வெலிஓயாக் கிராமச் சிங் களக் காடையர்களும், சிறிலங்கா இராணுவத்தினரும் இணைந்து ஒரே இடத்தைச் சேர்ந்த இருபத் தேழு அப்பாவிப் பொதுமக்களை யும், அதற்கு முதல் நாள் ஐந்து பொதுமக்களையும் கைதுசெய்து சென்றனர். கென்பாம் என்கின்ற இடத்தில் வைத்து இவர்கள் அனை வரையும் சுட்டுக் கொன்றார்கள். அதன் தொடராக இவர்கள் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வருவதும் கண்ணிற் படுபவர்களைப் பிடித்துச் சுடுவதுடன், இங்கு வசித்த தமிழ் மக்களின் பொருட்களைக் கொள் ளையடிப்பதும், வழக்கமாக இருந் தது. குறிப்பாக விளைபொருட்களை யும் விவசாய இயந்திரங்கள், துவிச் சக்கரவண்டிகளென என்னவாக இருந்தாலும் எடுத்துச் சென்று விடு வார்கள்.

இவ்வாறான அட்டூழியங்கள் இடம் பெற்று வரும்வேளை குறிப்பாக 1986ம் ஆண்டு பங்குனி மாதம் இருபத்தாறாம் திகதி காட்டுப் பகுதி யால் வந்த இராணுவத்தினர் மாலை 3.00 மணியளவில் திரு கோளம் என்று சொல்லப்படும் இக் கிராமத்தில் சுப்பிரமணியம் என் பவரின் கடைக்குள் வைத்து கார்த் திகேசு விசுவலிங்கம், பழனி யாண்டி செல்லத்துரை என்ற இரு வரையும் உயிருடன் கடைக்குள் வைத்துத் தீமூட்டி எரித்த சம்பவம் நடந்தது. இச்சம்பவம் நடந்ததால் பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த அப்புத்துரை என்பவர் அவருக்குச் சிங்களம் தெரியுமாதலால் அந்தக் காடையர்களிடம் சென்று "ஏன் இவ்வாறான அநியாயம் செய்கிறீர் கள், யார் உங்களுக்கு அதிகாரம் தந்தது" என்று கேட்டதற்காக அவ ரின் வாய்க்குள் துப்பாக்கியாற் சுட்டு ஜெயம் என்பவரின் வீட்டிற்குள் போட்டு எரித்ததுடன், தொடர்ச்சியாக அப்பகுதியிலிருந்த பதினைந்திற் கும் மேற்பட்ட வீடுகளை எரித்த பின்னர் படையினர் காடுகளுக்குள் பதுங்கியிருந்தார்கள். அதற்கு அடுத் தநாள் விடியற்காலை பதவியாப் பகுதியிலிருந்து

ஒதியமலை படுகொலை 01.02.1984



வாகனங்களில் இராணுவத்தினர் வந்ததைத் தொடர்ந்து நெடுங்கேணிப் பிர தேசத்தைச் சுற்றிவளைத்தனர். இதன்போது இராணுவம் கிரா மத்துள் இருக்கிறதா இல்லையா எனத் தெரியாமல் வந்த பல அப் பாவி மக்கள் அதனிடம் மாட்டிக் கொண்டார்கள். அப்படி வந்தவர் களிற் பலர் சுடப்பட்டார்கள். குறிப் பாகச் சொல்லப்போனால் வினாசிக் குளத்தைச் சேர்ந்த பொன் னம்பலம் என் பவரும் அவருடைய இளைய மகனும் என்னுடைய கடைக்கென வந்தவிடத்தில் அந்த நேரம் நானும் எனது உறவினரான இராஜரட்ணம் என்பவரும் ஓரிடத்தில் ஒளிந்திருந் தோம். என்னைத் தேடி வந்த பொன்னம்பலத்தின் மகனை இரா ணுவத்தினர் கலைத்துச் சுட்டார் கள்.

அதன் பின்னர் அவனைத் தேடி வந்த மூத்த சகோதரன் தம்பி இறந்து இருப்பதைப் பார்த்து அழுது கொண்டிருந்த சமயம் அவரையும் சுட்டுவிட்டு வல்லிபுரத்தின் மகனான பேரின்பநாயகம் என்ப வரையும் பழம்பாசிக் கிராமத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளையின் மக னான கைலையையும், சிவலிங்கத் தின் மகனையும் சுட்டுக் கொலை செய்தனர். ஈசன் என்பவருக்கு கை யில் வெட்டுக்காயம் பட்ட நிலையில் உயிர் தப்பி வந்தார். இப்படியாக இரண்டு நாட்களாக பாரிய அட்டூ ழியங்கள் செய்தார்கள். கிட்டத்தட்ட பதின்நான்கிற்கும் மேற்பட்ட பொது மக்களைக் கொலை செய்திருந்தார் கள். இப்படியாக இரண்டு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கொலை ச் ச ம் ப வ ங் க ள் இ ட ம் பெ ற் று வ ந் த வ ண் ண மி ரு ந் த து . இ வ் வ ா ற ா ன செயற்பாடுகளை நடத்தி இப்பிரதேச வாழ் தமிழ் மக்கள் அனைவரை யும் அங்கிருந்து வெளியேற்றி அப் பிரதேசத்தை ஒரு சிங்களக் குடி யேற்றப் பிரதேசமாக்குவதே அவர் களின் குறிக்கோளாக இருந்தது. ஏனென்றால் சிலோன் தியேட்டர் மற்றும் அங்கு காணப்பட்ட டொலர் பாம், கென் பாம் போன்ற பண் ணைகளிலும் தமிழர்கள் இருந்தார் கள். அவர்களுக்கு 1984ம் ஆண்டு காலப்பகுதியில் இவ் விடங் க ளை விட் டு வெளியேற வேண் டுமென்ற நேரடியான இராணுவ அச்சுறுத்தல் இருந்தது. அதாவது 1984ம் ஆண் டு ஆறாம் மாதமளவில் நேரடியாகத் துண்டுப் பிரசுரங்கள் மூலம் இத னைத் தெரிவித்து தமிழரை வெளி யேற வைத்த சம்பவம் இடம்பெற் றது. அதன்பின்னர் தென்னிலங் கையின் சிறைகளிலிருந்த ஆயுட் கைதிகளுக்கு ஆயுதங் கள் வழங் கி புனர்வாழ்வு என்ற பெயரில் இங்கு குடியேற்றி அ வ ர் க ளை யே இ ர ா ணு வ க் காடையர்களாகவும் பயன்படுத் தி வந்தனர். இவர் களது கொலைக் கொள் ளைச் சம்பவங்கள் 1987ம் ஆண்டு இலங்கை-இந்திய ஒப்பந் தத்திற்குப் பின்னர் வரை நீண்டு சென்றது.

01.12.1984 அன்று ஒதிய மலைப் படு கொலையில் கொல்லப்பட் டோர் விபரம்

01. நாகமணி சின்னையா - 50
02.நாகரத்தினம் கேதீஸ் வரன்-23
03. நல்லையா நவரட்ணம் - 17
04. கந்தையா கனகையா - -
05. கந்தையா பொன்னம்பலம-48
06. கந்தையா சிவசிதம்பரம் - 35
07. கிருஸ்ணபிள்ளை இராச லிங்கம் - 29
08. கறுபையா தங்கராசா - தொழி லாளி 18
09. கணபதிப்பிள்ளை சின்னையா - 35
10. கணபதிப்பிள்ளை சிவபாதம் 28
11. தாமோதரம்பிள்ளை கணபதிப் பிள்ளை - 51
12. தாமோதரம்பிள்ளை சதா சிவம் - 46
13. தம்பிஜயா காசிப்பிள்ளை - 45
14. தம்பிஜயா வேலுப்பிள்ளை - 38
15. தம்பிஜயா சுப்பிரமணியம் - 26
16. தம்பிஜயா சிவஞானம் - 23
17. அழகையா ஜெகாதன் - 17
18. கோவிந்தர் கணபதிப் பிளளை - 55
19. பொனன்ம்பலம் தேவராசா - 25
20. வேலுப்பிள்ளை சிதம்பரப் பிள்ளை - 36
21. சுப்பையா கெங்காதரன் - 26
22. சின்னையா இராசேந்திரம் - 21
23. சிதம்பரப்பிள்ளை இராசையா - 27
24. சங்கரப்பிள்ளை சபாரத்தினம் - 40
25. சங்கரப்பிள்ளை சண்முகசுந் தரம் - 25
26. சண்முகராசா இரவிச்சந்திரன் - 16
27. வீரகத்தி தில்லைநடராசா - 25

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடிய வில் லை.

செட்டிக்குளம் படுகொலை 02.12.1984



வவுனியா மாவட்டத்தின் எல்லைக் கிராமமாக வவுனியா-மன்னார் வீதியில் வவுனியா நகரிலிருந்து இருபது கி.மீ தூரத்தில் செட்டிக் குளம் அமைந்துள்ளது. இக்கிராமத் தில் விவசாயிகள், வர்த்தகர்கள், கூலித்தொழிலாளர்கள், அரச உத்தி யோகத்தர்கள் எனப் பலரும் வாழ் கின்றார்கள்.

1984.12.02 அன்று இராணுவத் தினரால் செட்டிகுளப் பகுதி எங்கும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட் டது. இராணுவத்தினர் செட்டிக் குளம் கிராமத்தினை காலை 5.30 மணியளவில் சுற்றிவளைக்கத் தொடங்கினார்கள். கிராம மக்களில் கூடுதலானவர்கள் உறக்கத்தில் இருந்தனர். செட்டிகுள கிராமத்திற் குள் நுழைந்த இராணுவத்தினர் கிராம மக்களில் ஆண்களை விசார ணைக்காக அழைத்துச் சென்றார் கள். இவர்களில் ஐம்பத்திரண்டு பேரைச் செட்டிகுளச் சந்தியில் வைத்து இராணுவ வாகனங்களில் ஏற்றி மதவாச்சிக்குக் கொண்டு சென்றனர். இதன்பின் இவர்கள் பற்றிய எந்தத் தகவலும் இல்லை. ஆனாலும் இவர்கள் மதவாச்சி யிலுள்ள ஓர் சிங்களக் கிராமத்தில் வைத்து இராணுவத்தினரால் வெட் டிப் படுகொலை செய்யப்பட்டனரென் றும் குற்றுயிராக இருந்தவர்கள் மீது டோசரை ஏற்றிக் கொன்றனரென் றும் செட்டக்குள மக்கள் கூறுகின் றனர்.

செட்டிகுளம் மகா வித்தியாலய ஆசி ரியரான தி.யேசுதாசன் சம்பவம் பற்றிக் குறிப்பிடுகையில்:

“ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து விட்டு வந்த இராணுவத்தினர் சுற்றி வளைத்து ஐம்பத்திரண்டு ஆண் களைக் கைது செய்து விசாரணைக் காக அழைத்துச் சென்றனர். இச்சம் பவத்தில் எனது தம்பியும் எனது அக் காவின் கணவரும் உயிரிழந்தனர். அத்துடன் எனது வீட்டில் வேலை செய்த இருவரும் கைது செய்யப் பட்டனர், சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் பின் பு அவ் வூர் மக் கள் வன்னி, மடு, இந்தியா போன்ற இடங் களுக் கு இடம் பெயர் ந் து சென்றனர்.”

02.12.1984 அன்று படுகொலை செய்யப்பட்டவர்களின் விபரம்

01. சூசைப்பிள்ளை கிறிஸ்துராசா (கமம் - 32)
02. இராசையா - -
03. இராமசாமி பொன்னுத்துரை (கமம் - 45)
04. ஊர்கனசாமி கமம் (23)
05. கந்தையா - -
06. கந்தையா கெங்காரட்ணம் - -
07. குமார் மோகன் - -
08. குமார் வரதராசா வியாபாரம் (19)
09. குருகுலசாமி (கமம் - 23)
10. குலசேகரம் பிள்ளை யூஜின் (கமம் -18)
11. பாண்டியன் பெரியரசு - -
12. பி.அருள்பிரகாசம் (கமம் - 30)
13. பிலிப்பையா அருள்பிரகாசம் (கமம் - 38)
14. பரமலிங்கம் பரமநாதன் - -
15. ஐயம்பிள்ளை பரமநாதன் (கமம் - 33)
16. துரையப்பா நாதன் - -
17. முத்துசாமி கோணார் கோபால் - -
18. முருகேசு சங்கரப்பிள்ளை (தொழிலாளி - 38)
19. அப்பாப்பிள்ளை வெற்றிவேற் பிள்ளை (கமம் -)
20. அல்பின் றொபின்சன் (கமம் - 26)
21. அல் வின் அந் தோனிஸ் ரி வின்சன (தச்சுத் தொழில் - 24)
22. அல் வின் அலைக்சாண்டர் (தச்சுத் தொழில் - 21)
23. அல்வின் அன்ரன் - -
24. பொன்னுத்துரை கிறிஸ்துராசா - -
25. பொன்னுத்துரை தனநாயகம் - -
26. டொண்பொஸ்கோ றொமன் - -
27. சௌந்தரராசன் புஸ்பராசன் (மரவேலை - 27)
28. செல்லையா யூட் - -
29. செல் லையா கேதீஸ் வரன் (கமம் - 28)
30. செல்லர் மூர்த்தி - -
31. செல்லர் மகேந்திரன் - -
32. வேதநாயகம் செபமாலை (கமம் - 31)
33. வேலுப் பிள் ளை சிவபால சிங்கம் (விவசாயம் - 35)
34. சந்தணப்பிள்ளை இருதைய ராசா (கமம் - 25)
35. சின்னக்குட்டி கந்தசாமி - -
36. சிவகணேசன் - -
37. சங்கரப்பிள்ளை பாலேந்திரன் (கமம் - 29)
38. வடிவேல் அசோக்குமார் - -
39. விநாயகமூர்த்தி யோகநாதன் (கமம் - 24)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப் படைந்த அனைவரது பெயர் விபரங் களையும் பெறமுடியவில்லை.

குமுழமுனைப் படுகொலை 02.12.1984

முல்லைத் தீவு மாவட்டத்தின் கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயலர் பிரிவில் குமுழமுனைக் கிராமம் அமைந்துள்ளது. இக்கிராம மக்களின் பிரதான தொழிலாக விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பன அமைந்துள்ளன.

1984ஆம் ஆண்டு காலப்பகுதியில் குமுழமுனைக் கிராமம் அதிகாலையில் இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்படுவதும், மக்கள் கைது செய்யப்பட்டுத் துன்புறுத்தப்படுவதும் வழக்கமாக இருந்தது.

வழமைபோல 01.10.1984 அனறு அதிகாலை சுற்றி வளைக்கப்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். தொடர்ந்து 29.11.1984 அன்றும் பலர் கைது செய்யப்பட்டனர். இதில முன்பு கைதான ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் ஏனைய நான்கு சகோதரர்களும், மோகன் என்பவரும் (குமுழமுனையைச் சேர்ந்தவர்) தவிர்ந்த ஏனையோரை இராணுவத்தினர் விடுதலை செய்தனர்.

இவர்களின் மனைவியர் தமது கணவன் மாரை விடுதலை செய்யுமாறு இராணுவத்தினரைக் கேட்ட பொழுதெல்லாம் அவர்களை விசாரணை செய்தபின் விடுதலை செய்வதாகக் கூறிய இராணுவத்தினர் அவர்களை 02.12.1984 அன்று தாம் சுட்டுவிட்டதாக உரிய வர்களின் வீடுகளுக்கு 14.02.1985 அன்று அறிவித்தனர்.

இச்சம்பவத்தில் குமுழமுனையைச் சேர்ந்த பொன்னம்பலம் என்பவரின் பிள்ளைகள் 6 பேர் உட்பட அதே கிராமத்தைச் சேர்நத் ஒருவர் அடங்கலாக 07 பேர் உயிரிழந்தனர். அக்கிரமத்தைச் சேர்ந்த 06 குடும்பங்களில் குடும்பத்த தலைவர்கள் இல்லாமல், 06 பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர். இச்சம் பவம் 1983 ஆம் ஆண்டு இனக்கல வரத்தை தொடர்ந்து முல்லைத் தீவில் நடைபெற்ற முதலாவது சம்பவம் ஆகம்.

02.12.1984 அன்று குமுழமுனைப் படுகொலையில் கொல்லப்பட்டோர் விபரம்.

1. பொன்னம்பலம் நமசிவாயம் (வயது 51)
2. பொன்னம்பலம் ஆனந்தன் (வயது 53)
3. பொன்னம்பலம் கெங்காதரன் (வயது 45)
4. பொன்னம்பலம் பொன்ராசா (வயது 43)
5. பொன்னம்பலம் சந்திரலிங்கம் (வயது 49)
6. பொன்னம்பலம் விவேகானந்தம் (வயது 47)
7. மோகனதாஸ் (வயது 32)

குறிப்பு :- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

தென்னமரவடி படுகொலை 03.12.1984



தமிழர் வரலாற்றில் மறக்கமுடியாத தென்னமரவடி படுகொலை 03.12.1984 இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக்கொண்டனார். தமிழர் தாயக பிரதேசமான வடக்கையும் கிழக்கையும் புவியியல் இனரீதியாக இணைத்து நிற்கும் கிராமமே தென்னமரவடி எனும் பழமை மிக்க தமிழ் கிராமம். தென்னவன் எனும் தமிழ் மன்னன் தென்னமரவடி இராசாதானியை ஆட்சிபுரிந்ததால் தென்னன் மரபு அடி என அழைக்கப்பட்டதாக வரலாறுகள் சொல்கின்றன.புரதான ஆறு வன்னிமைகளோடு தென்னமரவடியும் ஒன்றாக விளங்கியுள்ளது.

புரதான காலத்தில் பல குறுநில தமிழ் மன்னர்கள் தென்னமரவடியை ஆட்சிபுரிந்துள்ளனர். பாண்டிய மன்னர்காலத்தில் பல பிராமணர்களும். வேதாரணிய வைத்தியர்களும். பல குலத்தவர்களும் தென்னமரவடியில் குடியேறியதாக வரலாறுகள் சொல்கின்றன. அத்தோடு பாண்டிய மன்னர்களினுடைய மரக்கலங்கள் தென்னமரவடி துறையில் வந்தடைந்ததாகவும் குமுளமுனையில் கட்டப்படும் யானைகள் செம்மலைக்குடா தென்னமரவடி குடாக்களினூடாக தென்னிந்தியாவுக்கு அனுப்பப்பட்டதாகவும் வரலாற்று நூல்கள் ஆதாரப்படுத்துகின்றன.

இத்தகைய வரலாற்று சிறப்புமிக்க தென்னமரவடி போர்த்துக்கீசர் ஆட்சிக்காலத்தில் இருந்து எதிரிகளால் மாறி மாறி முற்றுகைக்குட்பட்டதனால் தென்னமரவடி பெரும் பிரதேசமக்கள் திருகோணமலை. தம்பலாகாமம். செம்மலை. அனுராதபுரம் என புலம் பெயர்ந்தார்கள் என்றும் அங்கே புதிய குடியேற்றங்களை நிறுவினார்கள் என்றும் சொல்லப்படுகின்றது. தென்னமரவடியோடு இணைந்த திருந்த அமரிவயல் எனும் தொன்மைமிக்க தமிழ்கிராமம் முற்றாக அழிந்து போனதாகவும் சொல்லப்படுகிறது. இவ்வாறாக வீழ்ச்சி கண்ட தென்னமரவடி பிரித்தானியர் வருகைக்கு பின்னரான காலத்தில் பெரும்பான்மை சிங்களவர்களாலும் சிதைக்கப்பட்டது. இக்கிராமம் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச 31நு பிரிவின் கீழ் அமைந்துள்ளது. திருகோணமலையில் 65கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. முல்லைத்தீவையும் திருகோணமலையையும் இணைத்து நிற்பதால் வடகிழக்கை இணைக்கும் இருதய நிலமாக தென்னமரவடி அமைவுபெற்றுள்ளது.

முல்லைத்தீவு கொக்கிளாய்கடல் நீரேரிக்கு மறுகரையில் வடகிழக்கை பிரித்து ஓடும் பறையனாற்று கரையில் தென்னமரவடி அமைந்துள்ளது.

தென்னமரவடியின் அமைவிட சிறப்பு தமிழ் பேசும் மக்களின் ஈழ நிலப்பரப்பை இணைத்து விடும் என்பதால் தென்னமரவடி மீது சிங்கள ஆட்சியாளர்கள் ஆக்கிரமிப்பு, இல்லாது அழித்தல் எனும் சதித் திட்டத்தையே மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் செய்துவருகின்றனர். இக்கிராமத்தை 1970 களில் திருகோணமலையில் இருந்து பிரித்து அனுராதபுர மாவட்டத்தோடும் இணைத்தனர். பின்னர் தமிழ் அரசியல் தலைவர்களின் தொடர் அழுத்தத்தால் மீண்டும் திருகோணமலையோடு இணைக்கப்பட்டது.



இருந்தும் தென்னமரவடி கிராமத்தை சிங்களமயமாக்கும் பணியை சிங்களம் நிறுத்தவில்லை.1980 களில் பல தொன்மை சிறப்புடைய இக்கிராமத்தின் பல கல்வெட்டுக்களை இல்லாமல் ஆக்கினர். அகழ்வாராட்சி என்ற பெயரில் பல வரலாற்று அடையாளங்களை திருடிச் சென்றுள்ளனர். அதை இன்று வரை இக்கிராமத்தவரிடம் ஒப்படைக்கவில்லை. கந்தசாமி மலை பிரதேசத்தில் இன்றும் பல தொன்மை அடையாளங்களும் பழம் பெரும் முருகன் ஆலயமும் அமைந்துள்ளது.இதனால் இவ் வலயத்தை பௌத்தபுனித பூமி என தொல் அகழ்வாராச்சி சபை ஆக்கிரமித்துள்ளது. அத்தோடு இத் தொன்மை மிக்க தமிழ் கிராமத்தின் வயல்நிலங்களை சிங்களவர்க்கு கைமாற்றியது. அத்தோடு மட்டுமன்றி பதவியா. சிறிபுர. சிங்கபுர.13ம் கொலணி சிங்கள குடியேற்றங்களை தென்னமரவடி கிராமத்தில் அத்துமிறி சிங்களம் நிறுவியது. இதனால் தென்னமரவடி மக்கள் 1980, 1984ம் ஆண்டு காலப்பகுதிகளில் தனித்து நின்று தென்னமரவடி நிலத்தை பாதுகாப்பதற்காக சிங்கள காடையர்களோடு முரண்பட்டு மோதிக்கொன்றனர். பல தடவைகள் சிங்கள குடியேற்றவாசிகளை விரட்டி அடித்னர். தமக்கே உரித்தான இடியன் துவக்குகளை இவர்கள் பயன்படுத்தி சிங்களவர்களை விரட்டி அடித்த வீரம்மிக்க கிராமமாக தென்னமரவடிமக்கள் விளங்கினர்.

இதனால் ஆத்திரம் கொண்ட சிங்கள இனவாத அரசும் சிங்களை காடையர்களும் ஒன்றாகி பலமாகி பலதடவைகள் தென்னமரவடி கிராம மக்களை விரட்டி அடித்தனர்.

காடுகளில் பலநாட்கள் தங்கிய மக்கள் சொல்லண்ணா துயர்களை அனுபவித்தனர்.அத்துமீறிய சிங்களவர்கள் இக்கிராமத்தவரின் சொத்துகளை சூறையாடி சென்றும் இருந்தனர். மீண்டும் கிராமத்துக்குள் வந்தவர்கள் இந்நிலை கண்டு அச்சமும் கவலையும் கொண்டனர். தென்னமரவடிதமிழர்க்கும் சிங்கள வர்க்கும் பகை உச்சம் கொண்டிருந்தது.

எந்த நேரத்திலும் தென்னமரவடி அபகரிக்கப்படும் சூழல் உருவானது. மக்கள் அச்சத்துடன் ஒவ்வோர் இரவையும் கழித்தனர்.

அன்று 1984 மார்கழி மாதம் மூன்றாம் திகதி தென்னமரவடியை அண்மித்த பகுதிகளில் வேட்டு சத்தம் பலமாக கேட்டது. தென்னமரவடியை சேர்ந்த பலரை சிங்கள காடையர்கள் கொலைசெய்துவிட்ட செய்தி பரவியது. தோட்டங்கள். வயல் நிலங்களிற்கு சென்ற பலர் வீடு திரும்பவில்லை. பிள்ளைகள். கணவன் மார்களை காணாது தவித்த உறவினர்கள் அவர்களை தேடி சென்றனர். இவ்வாறு பிள்ளைகளையும் கணவன்மாரையும் தேடிச்சென்ற பல பெண்களை சிங்கள காடையர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர். பலர் சிதறி ஓடியும் கடையர்களிடமிருந்து தப்பமுடியவில்லை. தாய்மார் முன்னிலையில் பிள்ளைகள் வெட்டிக்கொல்லப்பட்டனர். கணவர்மார் முன்னிலையில் பல பெண்கள் அம்மணமாக்கி கற்பழித்து கொலைசெய்யப்பட்டனர்.

இந்த கொடும் செயலை சிங்களம் செய்து முடித்தது.

பிள்ளைகளை தேடிச் சென்ற இரத்தினம். வேலாயுதம் மனைவி ஆகிய இருவரையும் தவிர ஏனைய எல்லோரும் கொலைசெய்யப்பட்டனர்.

1.. சண்முகம் முருகுப்பிள்ளை (42)
2. முருகுப்பிள்ளை அபிராமி (40)
3. முருகுப்பிள்ளை பாலகிருஸ்ணன் (18)
4. விநாசித்தம்பி கனகையா (45)
5. கனகையா சேதுப்பிள்ளை (38)
6. கந்தையா கெங்காதரன் (24)
7. சண்முகம் சதாசிவம் (35)
8. கணபதி வேலாயுதம் (48)
9. பூசாரி சின்னையா (65)
10. நமசிவாயம் கலையன் (18)
11. ஐங்கரப்பிள்ளை திருச்செல்வம் (23)

ஆகியோர் காடையர்களால் படுகொலை செய்யப்பட்னர்.

ஆனால் இரு பெண்கள் மட்டும் கடும் சித்திரவதைக்கு பின்னர் ஆடைகள் எதுவும் இன்றி ஏதோவொரு விதத்தில் தப்பித்துக் கொண்டனார். “ஐயோ சிங்களவர் திரண்டு வாறான்கள். எல்லோரும் ஊரைவிட்டு ஓடுங்கோ. பிடிச்சு வைச்சிருந்த எல்லோரையும் வெட்டிக்கொண்றிட்டான்கள் ...” என்ற அந்த இரு பெண்களின் அலறல் தென்னமரவடியை நிலைகுலைய செய்தது. அன்றே தென்னமரவடி மக்கள் காடுகளிற்குள் தஞ்சம் புகந்தனர்.அந்த நொடிப்பொழுதில் சிங்கள காடையர்கள் தென்னமரவடியை சூறையாடி ஊர் முழுவதையும் எரித்தனர்.

காடுகளிற்குள் ஒளிந்த மக்கள் கண்களில் தென்னமரவடி எனும் வளமான ஊர் எரியூட்டப்பட்டு புகை மண்டலம் வெளிவந்ததை பார்த்தனர்.. ஆறாத வடுக்களுடன் கண்களில் நீர் கசிந்திட முதியோர். இளையோர். குழந்தைகள் என பதினெட்டு நாள் அச்சமான காட்டு வழி பயணமாக முல்லைத்தீவு. முள்ளிவளை. புதுக்குடியிருப்பு. செம்மலை போன்ற பகுதிகளிற்கு இடம் பெயர்ந்து சென்றனர். 1984ல் இல் தமிழர் தாயகத்தில் முற்று முழுதாக முதலில் இடம் பெயர்ந்த தென்னமரவடி கிராமத்தின் இடம் பெயர் அவலமும் தென்னமரவடி படுகொலையும் நடந்து முப்பத்து ஏழு வருடத்தை கடந்தும் இன்னும் ஆறாத துயரமாகவே தமிழர் மனங்களில் பதிந்துள்ளது.



மன்னார் – முருங்கன் வீதிப் படுகொலை 04.12.1984

04.12.1984 அன்று காலை பதினோராம் கட்டைப் பகுதியில் காலை 11:00மணியளவில் பாரிய வெடிச் சத்தம் ஒன்று கேட்டது. அதன் பின்னர் இராணுவத்தினர் அனைவரும் தள்ளாடி முகாமிற்கு சென்று பின் மதியம் திரும்பவும் உயிலங்குளப் பகுதிக்கு வந்தனர். அவ்வேளை வானத்தில் உலங்குவானூர்தி ஒன்றும் சுற்றிக்கொண்டிருந்தது. அங்கு வந்து வீதியோரமாக அமர்ந்திருந்தவர்களைப் பிடித்துச் சுட்டுப் படுகொலை செய்த இராணுவத்தினர் பதினோராம் கட்டையடிப் பக்கமாகச் சென்றுகொண்டிருந்த போது வவுனியாவிலிருந்து வந்த பேருந்தை மறித்து அதிலேற முற்பட்ட வேளை சிங்கள இனத்தவரான நடத்துநர் அதனை அனுமதிக்கவில்லை. அதனால் அவரைச் சுட்டுவிட்டு, பேருந்தில் வந்த நாற்பது பேரையும் துப்பாக்கியாற் சுட்டுக் கொன்றார்கள். இதன்போது ஒரு வயோதிபர் மாத்திரம் மயக்கமுற்ற நிலையில் உயிர் தப்பினார். அதைத் தொடர்ந்து திரும்ப முருங்கன் தபாற்கந்தோர் வரை தம் கண்ணிற்பட்ட அனைவரையும் சுட்டுக்கொன்றுவிட்டு இராணுவத்தினர் சென்றனர்.



குறிப்பாக ஒரு பாரவூர்தியில் வந்த ஓட்டுநர், நடத்துநர், மற்றும் அருகிலிருந்த வீட்டில் நின்றவர்களையும் சுட்டுப் படுகொலை செய்தனர். இந்தப் படுகொலைச் செயல் அன்று மாலை வரை நடந்தேறியது. அதில் இறந்தவர்கள் பெரும்பாலும் பாதுகாப்பு தேடி ஓடிவிட்டு மீண்டும் பொருட்களை எடுப்பதற்காக திரும்ப வீடுகளுக்கு வந்தவர்களேயாவர். பின்னர் அடுத்த நாள் இராணுவத்தினர் முகாங்களுக்குச் சென்ற பின் பங்குத் தந்தையின் உதவியுடன் அனைத்துச் சடலங்களும் எடுக்கப்பட்டன. பேருந்தில் வந்தவர்கள், வயலில் வேலை செய்தவர்கள் என்று நூற்றுக்கும் மேற்பட்டவர்களது சடலங்கள் எடுக்கப்பட்டது. கிட்டத்தட்ட முருங்கனிலிருந்து தள்ளாடி முகாம் வரை இருநூறுக்கும் மேற்பட்ட பொதுமக்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. 1984 ஆம் ஆண்டு மார்கழி மாதம் நான்காம் திகதி மன்னார் மாவட்டம் சிறிலங்கா இராணுவத்தின் கொலைவெறியால் சோக மயமாகியது. சம்பவம் நடந்து இரண்டாம் நாள் (06.12.1984) சிறீலங்கா இராணுவத்தின் அனுமதி பெற்று மன்னர் ஆயர், அரச அதிபர் போன்றோர் மக்களுடன் சேர்ந்து தொண்ணூறு உடல்களை (சில உடல்கள் எரிந்தவை) மன்னார் வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றனர். இந்தச் சம்பவத்தில் இறந்தவர்களின் தொகை இருநூறுக்கும் அதிகமாகும்.

வட்டக்கண்டலைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் அந்தோனிப்பிள்ளை தெரிவித்ததாவது:

"இதில் தப்பி வந்த கால் இயலாத ஒரு வயோதிபர் கூறும்போது: பேருந்தினை மறித்து அனைவரையும் இறக்கித் தன்னைப் போல ஒரு சிலரைத் தவிர ஏனையோரை வரிசையாக நிற்கவிட்டுத் தானியங்கித் துப்பாக்கியால் பல இராணுவத்தினர் சேர்ந்து சுட்டதாகக் கூறினார். இச்சம்பவத்தில் எந்தவிதப் பாகுபாடுமில்லாது வயல்வேலை செய்து கொண்டிருந்த அனைவரையும் சுட்டனர். அவர்களது சடலங்கள் அனைத்தும் ஆடைகள் இல்லாது அடையாளங் காணமுடியாத நிலையில் மூன்று நாட்களின் பின்னர் மன்னார் மருத்துவமனையில் போடப்பட்டிருந்தது. இச்சம்பவத்தின் போது வீதியிலிருந்த கடைகள் சில பொதுமக்களின் வீடுகள் என அனைத்தும் உடைக்கப்பட்டும் எரிக்கப்பட்டும் இருந்தன"

வட்டக்கண்டல் பாலப் பெரு மாள்கட்டைச் சேர்ந்த கதிரன் சௌந்தரராஜன் சம்பவத்தைப் பற்றிக் கூறுகையில்:

"1984ஆம் ஆண்டு பதினோராம் கட்டையில் கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு வந்த சிறீலங்கா இராணுவத்தினர் இருநூறிற்கும் மேற்பட்ட மக்களை வெட்டியும் வைக்கோலுக்குள் போட்டு எரித்தும் கொன்றார்கள். இச்சம்பவத்தில் எமது உறவினர்கள் நிறையப்பேர் உயிரிழந்திருக்கின்றார்கள். எனது சகோதரன் ஒருவரை இரத்தத்தைக் குடிக்குமாறு கூறி சித்திரவதை செய்தார்கள். நடராசா என்கின்ற எனது அண்ணன் ஒருவரைச் சுட்டுக் கொன்றார்கள். 1984ம் ஆண்டு மூன்றாம் பிட்டியில் வைத்து எனது மற்றைய அண்ணனான கந்தசாமி என்பவரை சித்திரவதை செய்து கொன்றார்கள்"

04.12.1984 அன்று மன்னார்ப் படுகொலைச் சம்பவத்தில் கொல்லப்பட்டோர் விபரம்:

1. சூசை நிக்கிளாஸ் (வயது 38 – தொழிலாளி)
2. சூசை அந்தோனி (வயது 52 – விவசாயம்)
3. சூசேப்பு இன்மனுவேல் லெம்பேட் (வயது 24 – விவசாயம்)
4. இம்மானுவேல் சூசையப்பு லெம்பட் (வயது 24 – தொழிலாளி)
5. இராமையா கந்தசாமி (வயது 50 – தெழிலாளி)
6. இராசையா இரகுநாதன் (வயது 40 – கூட்டுறவு பரிசோதகர்)
7. இராமலிங்கம் இலச்சுமணன் (வயது 50 – தொழிலாளி)
8. யக்கோவு மனுவல் / அலஸ் (வயது 50 – விவசாயம்)
9. க.த.இராஜரெட்ணம் (வயது 67 – வைத்தியர்)
10. கந்தப்பு அப்புத்துரை (வயது 64 – விவசாயம்)
11. கப்பநெயினா நஜீமுதீன் (வயது 32 – தொழிலாளி)
12. குப்புசாமி செல்லத்துரை (வயது 55 – கணக்குப் பரிசோதகர்)
13. கபிரிகேல் ஜீவானந்தம் (வயது 40 – தபால் சேவகர்)
14. கறுப்பையா அச்சுதன் வயது 34 – பொறியிலாளர்)
15. கறுப்பையா பெருமாள் (வயது 60 – தொழிலாளி)
16. பூசாரி கந்தசாமி (வயது 46 – தொழிலாளி)
17. பிலேந்திரன் அல்யோண்ஸ் (வயது 55 – கமம்)
18. பிறஞ்சிசவிரி சாரம் (வயது 54 – விவசாயம்)
19. பிலிப்பு பிலேந்திரன் (வயது 56 – விவசாயம்)
20. மயில்வாகனம் ஜெயக்குமார் (வயது 32 – விவசாயம்)
21. மனுவல் அலஸ் (வயது 52 – விவசாயம்)
22. முகமட் கனிபா சுல்தான் (வயது 36 – கொண்றைக்ரர்)
23. முத்துச்சாமி சுப்பிரமணியம் (வயது 58 – மெக்கானிக்)
24. மீலாசாகிபு அப்புல்மஜீது (வயது 43 – விவசாயம்)
25. மஞ்சன் சின்னப்பன் (வயது 34 – தொழிலாளி)
26. முருகேசு நவரெட்ணம் (வயது 54 – விவசாயம்)
27. முருகேசு செல்லம்மா (வயது 60)
28. அந்தேனி பிரான்சிஸ் மொறாய் (வயது 29 – தபால் சேவகர்)
29. அந்தோனி செபமாலை (வயது 48 – லிகிதர்)
30. அந்தோனி குருதாசன் (வயது 23 – விவசாயம்)
31. அந்தோனி யோகநாதன் (வயது 18 – மாணவன்)
32. அந்தோனி யோகநாதன் மிறால் (வயது 18- விவசாயம்)
33. அக்கினிமுத்து இராமசாமி (வயது 34 – தொழிலாளி)
34. அப்புத்துறை வீரசிங்கம் (வயது 40 – மெக்கானிக்)
35. அப்பையா செல்லையா (வயது 57 – வியாபாரம்)
36. அரியபுத்திரன் திருநாவுக்கரசு (வயது 49 – வியாபாரம்)
37. அலெக்ஸ்சாண்டர் மாட்டின் ராஜ்குமார் (வயது 34 – மின் அத்தியட்சகர்)
38. அழகன் காளிமுத்து (வயது 65 – தொழிலாளி)
39. அழகையா காளிமுத்து (வயது 31 – விவசாயம்)
40. அருள்மலர் ஜோன்ஸப்பிஸ்ட் (வயது 28 – வீட்டுப்பணி)
41. அருளானந்தம் துரைராஜா (வயது 32 – அரச ஊழியர்)
42. அல் பிறட் போல் நோயல் இம்மானுவேல் (வயது 45 – விவசாயம்)
43. அல்போன்ஸ் சூசைநாதன் குரூ (வயது 34 – மானேஜர்)
44. ஆண்டி ஆறுமுகம் சுந்தரராஜ் (வயது 45 – விவசாயம்)
45. நேசராசன் (வயது 50 – விவசாயம்)
46. கென்றிமரியதாஸ் மியேஸ் (வயது 57 – விவசாயம்)
47. பொன்னம்பலம் (வயது 40 – வியாபாரி)
48. பொன்னையா அழகையா (வயது 65 – விவசாயம்)
49. பேதுரு அரியரட்ணம் (வயது 42 – தபால் சேவகர்)
50. பெஞ்ஜமின் ஸ்ரீபன்ஜெறே தவரெட்ணம் (வயது 45 – சிறைச்சாலை அதிகாரி)
51. செபமாலை மேரிகார்மிலாராணி (வயது 28)
52. செல்லையா சண்முகநாதன் (வயது 45 – மருந்தாளர்)
53. வேலு இராஜலிங்கம் (வயது 25 – தொழிலாளி)
54. வேலு கணேஸ் (வயது 40 – தொழிலாளி)
55. வேலு கணபதிப் பிள்ளை (வயது 58 – விவசாயம்)
56. வேலு பன்னீர்செல்வம் (வயது 31 – வியாபாரம்)
57. வேலுப்பிள்ளை கணவதிப் பிள்ளை (வயது 58 – விவசாயம்)
58. லோறன்ஸபிள்ளை பாபிலுப் பிள்ளை (வயது 47 – விவசாயம்)
59. சன்னாசி ரெங்கையா (வயது 55 – தொழிலாளி)
60. சந்தாம்பிள்ளை மரியாம் பிள்ளை (வயது 30 – கமம்)
61. சந்தியா அல்யோன்ஸ் சூசைநாதன் (வயது 36 – வியாபாரம்)
62. சுந்தரம்பிள்ளை செபஸ்தியான் பிள்ளை (வயது 45 – விவசாயம்)
63. சுப்பன் கிருஸ்ணபிள்ளை (வயது 38 – வர்த்தகர்)
64. சுப்பையா (வயது 75 – பிச்சைக்காரன்)
65. சாமிநாதன் கண்ணுசாமி (வயது 28 – காவலாளி)
66. சாசீம் சமது (வயது 36 – வியாபாரம்)
67. சின்னக்குட்டி கதிரவேல் ஆறுமுகம் (வயது 72)
68. சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது 51 – விவசாயம்)
69. சீமான்பிள்ளை சந்தியாம் பிள்ளை (வயது 58 – விவசாயம்)
70. சவிரியான் சந்தியோகுபறுனா (வயது 32 – விவசாயம்)
71. வல்லிபுரம் தியாகராசா (வயது 40 – உதவி தபால் அதிபர்)
72. றிச்சாட்குலாஸ் சேக்கிழாயார்

குறிப்பு:- இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

கொக்கிளாய் – கொக்குத்தொடுவாய் படுகொலை 15.12.1984

கொக்கிளாய் - கொக்குத்தொடுவாய் கருநாட்டுக்கேணி போன்றன தமிழ் மக்களின் பூர்வீக கிராமங்களாகும். இப்பிரதேசங்கள் மீன்பிடிக்குப் புகழ் மிக்க பிரதேசங்களில் ஒன்றாகும். இம்மக்களும் நல்ல செல்வச் செழிப் புடன் வாழ்ந்துவந்தார்கள். 1984. 12.15 ஆம் திகதி இராணுவச் சிப் பாய்கள் முல்லைத்தீவு மாவட்டத் திலுள்ள கொக்கிளாய், கொக்குத் தொடுவாய், கருநாட்டுக்கேணி, நாயாறு, குமுழமுனை, அளம்பில் ஆகிய சிராமங்களுக்குள் நுழைந்து சொத்துக்களை நாசம் செய்ததுடன் மக்களைப் படுகொலையும் செய் தனர். இச்சம்பவத்தில் கருநாட்டுக் கேணி, கொக்கிளாய், கொக்குத் தொடுவாய் ஆகிய கிராமங்களை விட்டு இரண்டாயிரம் தமிழ் குடம் பங்கள் கையில் கிடைத்த பொருட் களை மட்டும் எடுத்துக்கொண்டு இடம்பெயர்ந்தனர். இச்சம்பவத் தின்போது இதில் முப்பத்தொரு பெண்கள், இருபத்தொரு குழந் தைகள் உள்ளடங்கலாக நூற்று முப்பத்தொரு பேர் உயிரிழந்தனர்.

சுண்டிக்குளம் நல்லதண்ணித் தொடுவாய் மீதான கிபீர் குண்டுவீச்சுத் தாக்குதல் 02.12.1998

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டா வளைப் பிரதேசசெயலர் பிரிவின் எல்லைக் கிராமமாகச் சுண்டிக் குளம் அமைந்துள்ளது. இயற்கை எழில் கொஞ்சும் இப்பிரதேசத்தில் பறவைகள் சரணாலயம் காணப் படுவது சிறப்பம்சமாகும். கடலும் கடல் சார்ந்த இப்பிரதேசத்தில் மீன் பிடி பிரதான தொழிலாகும்.

கடற்படையின் வடக்குக் கிழக்கில் கடற்கரையோரப் பகுதிகளில் வாழ் கின்ற மக்கள் மீது பல்வேறு கால கட்டங்களிலும் தொடர்ச்சியான தாக் குதல்களை மேற்கொண்டு வந் தனர். இந்தவகையில் சுண்டிக் குளக் கிராமமும் கடற்படையினரின் தாக்குதல்களுக்கு உள்ளாகியது.

1995 ஆம் ஆண்டு சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையால் மருதங்கேணி பிரதேசசெயலர் பிரிவைச் சேர்ந்த உடுத்துறை, தாளையடி, ஆழியவளைப் பிரதேச மக்கள் தமது தொழில் நிமித்தம் சுண்டிக்குளப் பகுதியில் வந்து சிறிய குடிசைகள் அமைத்து கடற் கரையை அண்டிய பிரதேசங் களில் குடியேறினார்கள். இம்மக்கள் கடற்படையின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் தமது வாழ்க்கையை ஓட்டுவதற் காக கடற்தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். இவ் வாறு தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது 1998.12.02 ஆம் திகதி நண்பகல் 12:00 மணியளவில் விமானப் படையின் இரண்டு கிபீர் விமானங் கள் இப்பகுதி வான் பரப்பினுள் பேரிரைச்சலுடன் நுழைந்து விட்டமிடத் தொடங்கின. இதனைக்கண்ட மக்கள் செய்வதறியாது அங்குமிங்கும் ஓடினர். சுமார் பத்து நிமிடங்கள் வரை அப்பகுதியை வட்டமிட்ட பின்னர் அவை நல்லதண்ணித் தொடுவாய் குடியேற்ற முகாம் மீது ஆறு குண்டுகளைப் போட்டன. இக்குண்டுவீச்சுத் தாக்குதலினால் சிறுவர்கள், பெண்கள் உட்பட மொத்தம் எழு பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழக்க, பலர் காயமடைந்தனர்.

1. விஸ்வலிங்கம் யோகராணி (38, உடுத்துறை)
2. யோகச்சந்திரன் மல்லிகாதேவி (36, தாளயடி)
3. சிவா (13, மாணவன்)
4. கமலநாதன் தணுசா (15, மாணவி, உடுத்துறை
5. இராசலிங்கம் சுதாஸ் (13, மாணவன்)
6. வேலுப்பிள்ளை செல்லத்துரை (75)

காயமடைந்தவர்களின் விபரம்
கணபதிப்பிள்ளை சுப்பிரமணியம் (48)
சுப்பிரமணியம் கெங்கரூபி (16, மாணவி)
கே. சோதிமலர் (38)





கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE
FRESH START

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)


மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

DSC DEBT SOLUTION CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

வங்கிக் கடன்களில்
80% வரையிலான
கழிவு
Reduce your
debts upto
80%



Suren Sornalingam
Certified Insolvency Counsellor

Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

விடுதலைப்புலிகள் 06.04.1985

மரியமலர் படுகொலை

தமிழீழப் பகுதியில் இருந்து தமிழர்களை விரட்ட திட்டமிட்ட அடிப்படையில் தமிழர்கள் படு கொலை செய்யப்பட்டு வருவது இன்று சாதாரண நிகழ்ச்சியாகி விட்டது. தமிழீழத்தின் எல்லைப் புறத்தில் அமைந்துள்ள முல்லைத் தீவு மாவட்டத்தின் ஒதியமலைப் பிரதேசத்தில் நூற்றுக்கு மேற் பட்ட தமிழர்கள் வீடுகளில் இருந்து கடத்திச் செல்லப்பட்டு கட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். நவம்பர் மாதம் 29ம் திகதியில் இருந்து டிசம். 2ம் திகதி வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்தபோது வீடுகளுள் புகுந்த சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களைக் கடத்திச் சென்று கட்டுக் கொன்றுள்ளது.

சிங்கள இராணுவத்தின் "**தீவிரப் படுகொலைத் திட்டத்தால்**" பீதி யடைந்த ஒதியமலைத் தமிழர்கள் உட்பட பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறி முல்லைத்தீவு மாவட் டத்திலுள்ள கோவில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சம்அடைந் துள்ளனர்.

கைகள் பின்னால் கட்டப்பட்ட நிலையில், பயங்கரச் சித்திரவதை களின்பின், கண்களும் வாய்களும் துப்பாக்கிக் குண்டுகளால் தூளாக்கப்பட்டு கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட அப்பாவித் தமிழர் களது உடல்கள் ஒதியமலைக் கிராம முன்னேற்ற சங்கக் கட்டி டத்திலிருந்து கண்டு பிடிக்கப்பட் டுள்ளது.

இவர்களில் அனேகர் திருமண மாகி குடும்பத்துடன் வாழ்ந்து வந்தவர்கள். இவர்களில் பலர் முதியோர்கள். ஆனால் இக்கொலை களைப் புரிந்த அரச பயங்கரவாதி களின் தலைவரும் (சிங்களப்) பாது காப்பு அமைச்சருமான அத்துலத் முதலி இவர்கள் அனைவரும் பயங் கரவாதிகள் எனக் கூறியுள்ளார். அழுகிய நிலையில் கண்டுபிடிக்கப் பட்ட 30 பேரின் சடலங்களில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த பலர் அடங்கி இருந்தனர். இவர்கள் 'பயங்கரவாதிகள்' அல்லர். அப்பாவித் தமிழர்களே, என் பதை உறுதி செய்வதற்காக அவர்களது முழு விபரத்தையும் தருகிறோம்.





ச. தருமலிங்கம்	4 பெண் பிள்ளைகள்
நா. கேதீஸ்வரன்	(திருமணமாகி இரு மாதம் இனஞர்)
ச. நடராசா	இனஞர்
க. சின்னையா	2 ஆண் 2 பெண் பிள்ளைகள்
சா. செல்வராசா	3 ஆண்கள் 1 பெண் பிள்ளை (பச்சிலைப் பள்ளியில் இருந்து வயல் வேலைக்காக ஒதியமலைக்கு வந்தவர். இவர் கொலை செய்யப் பட்டதோடு இவரது உழவு இயந்திரமும் கொழுத்தப்பட்டுள்ளது.)
க. சின்னையா	2 ஆண் 2 பெண் பிள்ளைகள்
ச. சபாரத்தினம்	4 பெண் 2 ஆண் பிள்ளைகள்
ச. சண்முகசுந்தரம்	திருமணமாகி 5 மாதம்
க. சிவசுந்தரம்	5 பெண் பிள்ளைகள்
கா. சதாசிவம்	2 பெண் 3 ஆண் பிள்ளைகள்
து. ஜெகநாதன்	இனஞர்
வே. சந்திரன்	(தந்தை இல்லை 5பெண் சகோதரி களுக்கும் 2 ஆண் சகோதரருக்கும் இவரே பொறுப்பு)
ப. வேலுப் பிள்ளை	3 பெண் 5 ஆண் பிள்ளைகள்
ப. காசிப்பிள்ளை	3 ஆண் 5 பெண் பிள்ளைகள்
ப. சுப்பிரமணியம்	திருமணம் ஆகி 2 மாதம்
ப. சிவஞானம்	இனஞர், தகப்பன் இல்லை
ச. மோகன்	5 பெண் பிள்ளைகள்
க. சிவபாதம்	இனஞர்
ப. ரவிச்சந்திரன்	இனஞர்
ந. நவரத்தினம்	இனஞர்
வி. நடராசா	1 பெண் பிள்ளை
சி. தனபாலசிங்கம்	1 ஆண் பிள்ளை
சி. இராசலிங்கம்	இனஞர்
கு. கெங்காதரன்	(பட்டுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் உறவினர் வீட்டுத் திருமணத்துக் காக ஒதியமலைக்கு வந்தவர்.)
பொ. தேவராசா	இனஞர்
சி. இராசன்	சித்த சுவாதீனம் அற்றவர்
சி. இராகேந்திரன்	இனஞர்
சி. க. சிதம்பரம்	4 ஆண் 2 பெண் பிள்ளைகள்
எம். மணியம்	இனஞர்
கோ. கணபதிப்பிள்ளை	4 பெண் 3 ஆண் பிள்ளைகள்
கா. கணபதிப்பிள்ளை	5 பெண்கள் 1 ஆண் பிள்ளை
ச. பொன்னம்பலம்	5 பெண்கள் 1 ஆண் பிள்ளை
க. சின்னையா	4 பெண்கள் 1 ஆண் பிள்ளை





கடல் நடுவே ஒரு களம்

கடல்களோத் தாண்டிக் கேட்கிறது
வீறிட்ட சிசுக் குரல்
தாய்புடைந்த பெண்ணின் கீதறல்
தனன்றெரியும் வீட்டின் கூரறல்
சமாதிப் பேச்சின் அலங்கார வசீகரத்துள்
எதிரெதிர் இனத்து மகனும் மகளும்
முகூர்த்த வேளையில்
சிரசறுபட்டு அலறிவிழும் ரணகளம்.
இனம் மொழி மதம் என்று
ஊர்வலம் எருத்த
ஜனாயின் நாதுக்கள் மோதி
சிங்கமம் பிறழ்ந்து
சிக்கெடுத்தது முடிச்சு.
முடிச்சு இனி
வேஷ்டிக்கும் முந்தாணிக்குமல்ல.
மூஷ்டிக்கும் பொறியில்லுக்கும்.
அமைதியின் அநுஷ்டானங்களும்
ஆரவாரம் ஒருங்கி ஸ்தம்பித்தன.
கல்லும் உருகி
அலையெடுக்கிறது.
எரிமலைப் நிழம்பு.
மரணம் மட்டுமே என்ற பின்
மரணம் தான் என்ன
அழிவது உடலின்
கற்பூர நிர்த்தத்துவம்
அழியாதது வோ உயிரின்
ஆரத்திச் சுடர்.

—பிருமிள் சிவராம்

சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302
Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

A**ruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694
Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483
Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427
Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095
Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721
St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049
Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685
Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494
Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

தலைமைச்செயலகம்,
தமிழீழ விடுதலைப் புலிகள்,
தமிழீழம் - 14.12.2006

தேசத்தின் குரலுக்கு வீரவணக்கம்

எமது சுதந்திர இயக்கத்தின் அரசியல் இராஜதந்திர நகர்வுகளில் எனக்குப் பக்கபலமாக இருந்து செயற் பட்ட எமது தேசத்தின் ஒளிவிளக்கு இன்று அணைந்துவிட்டது. ஆலோசனை வேண்டி, ஆறுதல் தேடி ஓடுவதற்கு பாலாண்ணை இன்று என்னுடன் இல்லை. இவரது மறைவு எனக்கு மாத்திரமல்ல தமிழீழ தேசத்திற்கே இட்டுநிரப்பமுடியாத பேரிழப்பு.

பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடையே விரியும் காலமாக மனிதவாழ்வு நிலைக்கிறது. இந்த வாழ்வுக்காலம் எல்லா மனிதர்களுக்கும் ஒரேமாதிரியாக, ஒத்ததாக, ஒருசராக அமைவதில்லை. காலச்சீரற்றதாக ஒருவருக்குக் கூடி, மற்றவருக்குக் குறுகி, இன்னொருவருக்கு அதிகம் நெடுத்து கூடிக்குறைந்து செல்கிறது. துரதிஸ்ட வசமாக, பாலாண்ணையினது வாழ்வு இடைநடுவில் நின்றுபோய்விட்டது. தீவிரம்பெற்றுள்ள எமது விடுதலைப்போருக்கு அவர் நிறையப் பணி களை ஆற்ற வேண்டியிருக்கின்ற தருணத்தில் அவருக்கு மரணம் சம்பவித்திருக்கிறது. இதனை என்னால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. துயரத்தின் சுமை என் ஆன்மாவை அழுத் துகிறது. என் உள்ளத்தை உடைத்து, நெஞ்சத்தைப் பிளக்கிறது. கட்டுக்கடங்காத காட்டாறு போல சீறிப்பாயும் உணர்ச்சிப் பெருவெள்ளத்தை என்னால் வார்த்தைகளால் கொட்டமுடியாது. மனித மொழியில் இதற்கு இடமுமில்லை.

பழக ஆரம்பித்த நாள் முதலே எமக்கிடையே ஒரு இனம்புரியாத புரிந்துணர்வு ஏற்பட்டது. அந்தப் புரிந்துணர்வால் எழும் பற்றுறவால் பிணைந்துகொண்டு, எமது உறவு நல்லுறவாக வளர்ந்து நட்புறவாகப் பரிணமித்தது. சிந்தனையாலும் செயலாலும் ஒன்றுபட்ட மனிதர்களின் சங்கமமாக அந்த உறவு மலர்ந்தது. தினம்தினம் நாம் கிர்ந்துகொண்ட வாழ்பனுபவத்தில் வலிமைபெற்று வளர்ந்தது. சாதாரண மனித உறவுகளிலிருந்து இது முற்றிலும் வேறுபட்டது. காலத்தால் கனிந்து, வரலாற்றால் வடிவம் பெற்ற ஒரு அலாதியான இலட்சிய உறவு அது.

பாலாண்ணையை நான் ஆழமாக நேசித்தேன். விடுதலை இயக்கம் என்ற மாபெரும் குடும்பத்தில் ஒரு மூத்த தலைமகனாக பிதாமகனாக மூன்று தசாப்தங்கள் வாழ்ந்தவர் அவர். நானும் அவரை அப்படித்தான் நோக்கினேன். ஒரு குடும்பமாக ஒன்றுசேர்ந்து ஒத்திசைவாக ஒன்றித்திருந்த நாட்களில் அவர் ஒரு சாதாரண மனிதப்பிறவி அல்ல என்பதைக் கண்டுகொண்டேன். மோசமாகச் சுகவீனமுற்று தினம்தினம் சாவோடு போராடியபோதும், தாங்கமுடியாத உடல்உபாதைகளால் வருந்தியபோதும், தளர்ந்துபோகாத உறுதிப்பாடு அவரிடம் இருந்தது. அவரின் இந்த இலட்சிய உறுதி எனது நெஞ்சத்தைத் தொட்டுநின்றது. அவர் துன்பத்தால் துவண்ட போதெல்லாம் எனது ஆன்மாவும் கலங்கியழுதது.

எமது இயக்கத்தின் வளர்ச்சியிலும் அதன் இன்றைய விரிவாக்கத்திலும் பாலாண்ணைக்கு ஒரு நிரந்தரமான இடம் இருக்கிறது. ஒரு மூத்த அரசியல் போராளியாக, ஒரு மதியுரைஞராக, ஒரு தத்துவாசிரியராக எல்லாவற்றுக்கும் மேலாக எனது உற்ற நண்பனாக இருந்து எனக்கு ஊக்கமும் உத்வேகமும் அளித்தவர். ஆலோசனையும் ஆறுதலும் தந்தவர். எனது உணர்வுகளைப் பகிர்ந்துகொண்டு, எனது பழுக்களையும் பங்கிட்டுக்கொண்டவர். எமது விடுதலை இயக்கம் தோற்றம்பெற்ற ஆரம்பகாலம் முதல் என்னோடு இருந்து, எல்லாச் சோதனைகளையும் வேதனை களையும் சவால் களையும் சங்கடங்களையும் தாங்கிக் கொண்டவர். எமது அரசியல் இராஜதந்திர முன்னெடுப்புக்களுக்கு மூலாதாரமாக, முன்னால் நின்று செயற்பட்டவர்.

ஈழத்தமிழினம் பெருமைகொள்ளும் வகையில் அரசியல் உலகிலும் இராஜதந்திர உலகிலும் அளப்பெரும் சாதனைகள் புரிந்து, எமது தேச சுதந்திரப் போராட்டத்தை உலக அரங்கில் முன்னிறுத்திய பாலாண்ணையின் மாபெரும் போராட்டப்பணிக்கு மதிப்பளித்து "தேசத்தின் குரல்"என்ற மாபெரும் கௌரவப்பட்டத்தை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன். பாலாண்ணை உண்மையில் எம்மைவிட்டுப் போகவில்லை. அவர் எமது நினைவலைகளில் என்றும் நங்காத நினைவுகளாக நிலைத்து நிற்பார்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" வே. பிரபாகரன், தலைவர், தமிழீழ விடுதலைப் புலிகள்.



★ Basement ★ Carpet ★ Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★ Painting ★ Tiles ★ Stairs
★ Moulding ★ Window ★ Garage Door
★ Spotlight ★ Plumping ★ Electrical

உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

RASAN
Cell: 647-532-4162
Office: 647-821-0356
Email: rasan311@gmail.com| Web: www.jathurenovation.com

AFFORDABLE REFRIGERATION SERVICES INC

Walk - In Freezers
Walk - In Coolers
Reach - In Freezers
Reach - In Coolers

We Sell. Install used & new Walk in Cooler, Walk in Freezer



Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com



ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS SALES REPRESENTATIVE

C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai




Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4



விண்கல்லில் மோதி உலகைக் காக்கும் பணியைத் தொடங்கும் விண்கலம்: அறியவில் சாதனை – டார்ட்

23 நவம்பர் 2021



டார்ட் டைமோஃபோஸ்

அபாயகரமான விண்கற்களை மாற்றுப் பாதையில் தள்ளிவிடுவதற்கு எதிர்காலத்தில் தேவைப்படக்கூடும் தொழில்நுட்பத்தை ஒரு விண்கலம் துவக்கி வைத்துப் பரிசோதிக்க உள்ளது.

நாசாவின் "டார்ட்" திட்டம், பூமியை நோக்கிவரும் பெரும் விண்கற்களை நிலைப்படுத்துவதற்காக நீண்டகாலமாக இருந்துவரும் திட்ட முன்மொழிவினை மதிப்பீடு செய்யும்.

இந்த விண்கலம் டைமோர்ஃபோஸ் எனும் விண்கல்லுடன் மோதி, அதன் வேகமும் பாதையும் எந்த அளவு மாற்றப்பட முடியும் என்பதைச் சோதிக்கும்.

ஒரு சில மீட்டர்கள் குறுக்களவு கொண்ட ஒரு அண்டச் சிதைவு, பூமியோடு மோதினால், அது கண்டம் தழுவிய அழிவினை ஏற்படுத்தும்.

இந்தக் குறிப்பிட்ட விண்கல் பூமிக்கு எந்த ஆபத்தையும் விளைவிக்காது என்ற போதும், பூமியைக் காப்பாற்றுவது எப்படி என்று கற்கும் நோக்கத்துடன் ஒரு விண்கல்லை திசைமாற்றும் முதல் முயற்சி இது.

"டார்ட், டைமோர்ஃபோஸ் தன் சுற்றுப்பாதை வட்டத்தை முழுக்க எடுத்துக்கொள்ளும் காலத்தை ஒரு சிறு அளவு மாற்ற மட்டுமே செய்யும். ஒரு விண்கல் வெகு முன்னரே கண்டுபிடிக்கப்பட்டு விடும் பட்சத்தில், இதுவே போதுமானது," என்கிறார் நாசாவின் கிரகப் பாதுகாப்பு ஒருங்கிணைப்பு அலுவலகத்திலிருக்கும் கெல்லி ஃபாஸ்ட்.

புதன்கிழமை 06:20 ஜி.எம்.டி மணிக்கு, டார்ட் விண்கலத்தைச் சுமக்கும் ஃபால்கன் 9 ராக்கெட், கலிஃபோர்னியாவின் வாண்டென்பெர்க் விண்வெளிப் படைத்தளத்திலிருந்து கிளம்பும்.


நாசா விண்கலம் விண்கல்லின் நிலவில் சென்று மோதும்

விண்கற்கள் சூரியக் குடும்பக் கட்டமைப்பின் எஞ்சிய மூலப்பொருட்கள், இவைகளில் பெரும்பாலானவை பூமிக்கு எந்த அச்சுறுத்தலும் விளைவிக்காதவை. ஆனால், இரண்டும் சந்தித்துக்கொள்ளுமாறு, சூரியனைச் சுற்றும் ஒரு விண்கல்லின் பாதையும் பூமியின் பாதையும் குறுக்கிட்டால், மோதல் நிகழலாம். $325 மில்லியன் (+240 மில்லியன்) மதிப்புள்ள டார்ட் திட்டம், "பைனரி" என்றழைக்கப்படும், மிக நெருக்கமாக ஒன்றையொன்று சுற்றிவரும் ஒரு ஜோடி பொருட்களைக் குறிவைக்கும். இவ்விரண்டில் அளவில் பெரியதான, டிடிமோஸ் 780 மீட்டர் குறுக்களவு கொண்டது, அதன் சிறிய துணையான டைமோர்ஃபோஸ் 160 மீட்டர் அகலமானது.

டைமோர்ஃபோஸின் அளவுள்ள பொருட்கள் ஒரு அணுகுண்டின் ஆற்றலைவிட பன்மடங்கு ஆற்றலோடு வெடிக்கக் கூடும், இது மக்கள் வசிக்கும் பகுதிகளை அழித்து, பல பத்தாயிரம் பேரைக் கொல்லவும் கூடும். 300 மீட்டரோ அதற்கு அதிகமான அளவோ விட்டம் கொண்ட விண்கற்கள் கண்டம் தழுவிய அழிவினை ஏற்படுத்தக் கூடும், 1 கிலோமீட்டருக்கும் பெரியவை உலகளாவிய பாதிப்புகளை எற்படுத்தும்.

டார்ட் ஏவப்பட்டவுடன், முதலில் அது சூரியனைச் சுற்றிய தனது சொந்த வட்டப்பாதையைப் பின்பற்றி, பூமியின் புவியீர்ப்பு மண்டலத்திலிருந்து வெளியேறும். தொடர்ந்து அது, செப்டெம்பர் 2022ல், பூமியிலிருந்து 6.7 மில்லியன் மைல் தொலைவில் பைனரியை இடைமறிக்கும்.

டார்ட், "சிறு நிலவான" டைமோர்ஃபோஸின் மீது 15,000mph (6.6km/s) அளவு வேகத்தில் சென்று மோதும். இது, அதன் வேகத்தை ஒரு நொடிக்கு ஒரு மில்லிமீட்டரின் சிறு பகுதியளவுக்குக் குறைக்கும் - இது டிடிமோஸைச் சுற்றிய அதன் பாதையை மாற்றும். இது




மிகச்சிறிய அளவிலான மாற்றமே, ஆனால் இது பூமியின் மீது மோதவரும் ஒரு பொருளை அதன் பாதையிலிருந்து தள்ளிவிடுவதற்குப் போதுமானது.

டார்ட்டின் தாக்கம்

"பெரும் விண்கற்களைவிடச் சிறியவை நிறைய உள்ளன, அதனால் பெரும்பாலும் நாம் சந்திக்கக் கூடிய விண்கல் அச்சுறுத்தல் - நாம் அப்படி ஒன்றைச் சந்திக்க வேண்டி வந்தால் - அது அநேகமாக இந்த அளவிலுள்ள ஒரு விண்கல்லின் மூலமாகத்தான் வரும்," என்கிறார் நாசாவில் இந்தத் திட்டத்தின் விஞ்ஞானியான டாம் ஸ்டார்ட்லர்.

2005ல் அமெரிக்க நாடாளுமன்றம், பூமிக்கு அருகிலுள்ள விண்கற்களில் 140 மீட்டரினும் (460 அடி) பெரியவற்றில் 90 சதவீதமானவற்றைக் கண்டுபிடித்துக் கண்காணிக்கும்படி நாசாவுக்கு ஆணையிட்டது. இவ்வகையான விண்கற்களில், இப்போதைக்கு பூமியை அச்சுறுத்துபவை எதுவும் அறியப்படவில்லை, ஆனால் இவற்றில் 40மூ மட்டுமே உண்மையில் கண்டறியப்பட்டுள்ளன.

டார்ட், ட்ரேகோ எனும் கேமராவைச் சுமந்து செல்கிறது, இது இரண்டு விண்கற்களின் படங்களையும் அளித்து, விண்கலம் டைமோர்ஃபோஸ/டன் மோதுவதற்கான சரியான



பாதையில் செல்ல உதவும்.

தனது இலக்கினைத் தாக்குவதற்கு 10 நாட்கள் முன், இந்த அமெரிக்க விண்கலம், இத்தாலியால் உருவாக்கப்பட்ட லிசியாக்யூப் எனப்படும் ஒரு சிறிய விண்கலத்தைச் செலுத்தும். இந்தச் சிறிய விண்கலம் மோதலின் தாக்கத்தின், அதனால் கிளம்பும் புழுதியின், அதனால் ஏற்படும் பள்ளத்தின், படங்களை பூமிக்கு அனுப்பும்.

டைமோர்ஃபோஸின் பாதை எந்த அளவு மாறும்?

டிடிமோஸைச் சுற்றிய டைமோர்ஃபோஸின் பாதையில் ஏற்படும் மிகச்சிறிய மாற்றத்தை பூமியிலுள்ள தொலைநோக்கிகள் அளவெடுக்கும். டாம் ஸ்டார்ட்லர் கூறுகிறார்: "நாம் உண்மையில் அறிந்துகொள்ள விரும்புவது என்னவெனில்: நாம் உண்மையிலேயே அந்த விண்கல்லை திசைமாற்றினோமா, எவ்வளவு திறனாக அதைச் செய்தோம்?"

ஒரு பைனரி இத்தகைய பரிசோதனைக்கான கச்சிதமான இயற்கைச் சோதனைக்கூடம். இந்தத் தாக்கம் டிடிமோஸைச் சுற்றிய டைமோர்ஃபோஸின் பாதையை தோராயமாக 1% மாற்றும், இதனை பூமியிலுள்ள தொலைநோக்கிகள் சில வாரங்களிலோ மாதங்களிலோ கண்டறியும்.

இருந்தும், டார்ட் ஒரு தனி விண்கல்லுடன் மோதுமானால், சூரியனைச் சுற்ற அந்த விண்கல் எடுத்துக்கொள்ளும் கால அளவு சற்றேறக் குறைய 0.000006% மாறும், இதை அளவிட பல வருடங்கள் பிடிக்கும்.

இந்த பைனரி மிகச்சிறியது, மிகவும் ஆற்றல் மிக்கத் தொலைநோக்கிகளுக்குக் கூட இது ஒற்றை ஒளிப்புள்ளியாகவே காட்சியளிக்கிறது. ஆனாலும், சுற்றி வருகையில், டைமோர்ஃபோஸ் டிடிமோஸிலிருந்து பிரதிபலிக்கும் ஒளியைச் சற்று மறைக்கிறது, ஒரு சிறிய பொருள் தன்னினும் பெரிய ஒன்றன் பின்னால் செல்லும் போது, இதற்கு எதிரான விளைவு நிகழ்கிறது.

"இப்படி ஒளி மங்குவது எத்தனை முறை நிகழ்கின்றது என்று நம்மால் கணக்கிட முடியும்," என்று விளக்குகிறார் டார்ட்டின் விசாரணை அணித் தலைவர் ஆண்டி ரிவ்கின்: "இப்படித்தான் டைமோர்ஃபோஸ் டிடிமோஸை 11மணி, 55 நிமிடங்களில் சுற்றி வருகிறது என்று நமக்குத் தெரியும்."

தாக்கத்திற்குப் பிறகு வானியலாளர்கள் மீண்டும் இதனைக் கணக்கிடுவார்கள். "இவை ஒரு குறிப்பிட்ட கால அளவில் அதிக எண்ணிக்கையில் நிகழும் - ஒவ்வொரு 11 மணி 45 நிமிடங்களுக்கு இருமுறை நிகழலாம், அல்லது அது 11 மணி 20 நிமிடங்களாகவும் இருக்கலாம்," என்கிறார் டாக்டர் ரிவ்கின், இவர் மேரிலாண்டின் ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தின் பயன்பாட்டு இயற்பியல் ஆய்வகத்தைச் சார்ந்தவர்.

நிச்சயமின்மை

டைமோர்ஃபோஸின் உள் வடிவம் தெரியாது என்பதால், அது தாக்கத்திற்கு எவ்வாறு எதிர்வினையாற்றும் என்பதில் நிச்சயமற்ற தன்மை இருப்பதாக அவர் கூறினார். டைமோர்ஃபோஸ் தன்னுள்ளே, காலியிடங்கள் கொண்டிருப்பதைவிட, ஒப்பீட்டளவில் திடமாக இருந்தால், அது அதிகளவு சிதைவுகளை உருவாக்கும் - இது அதனை மேலும் வலுவாகத் தள்ளிவிடும்.



அபாயகரமான விண்கல்லை டார்ட் சமாளிக்கும் முறை "கைனெடிக் இம்பாக்டர் டெக்னிக்" என்று அழைக்கப்படுகிறது. ஆனாலும், வேறு யோசனைகளும் உள்ளன, விண்கல்லை இன்னும் நீண்ட கால இடைவெளியில் மெதுவாக நகர்த்துவது, மற்றும் அதன்மீது ஒரு அணுகுண்டை ஏவுவது உட்பட - இது ஆர்மகெட்டான், டீப் இம்பேக்ட் போன்ற ஹாலிவுட் திரைப்படங்களின் மூலம் பிரபலமான ஒரு விஷயம்.

நன்றி: தமிழ் பிபிசி

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின்
நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள்,
தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு
அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள்
அறிவித்தல்களையும்,
மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து
ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது.
தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம்,
இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.
எமது மின்னஞ்சல் முகவரிக்கு
தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு
வேண்டுகிறோம்.
sangathamilcanada@gmail.com

விளம்பரம் என்பது
உங்கள் வணிகத்தின்
ஒரு முதலீடு
தொடர்புகளுக்கு

437.345.4203





HAND CAR WASH



WE SPECIALIZE IN:
. Interior / Exterior
. Wash & Vacuum
. Interior Shampoo
. Leather Treatment
. Engine Shampoo
. High Speed Buff
. Waxing / Polishing
. Headlight Restoration
. Auto Tinting
. Ceramic Pro
. Insurance Approved



HEADED LIGHT RESTORATION
We use only natural quality high-end products on all our vehicles



புதிய இடத்தில் புதிய பொலிவுடன்
GRAND AUTOMOTIVE INC.
www.grandautomotive.ca

ALL REPAIRS & MANINTENACE ALL KIND OF CARS
உங்கள் வாகனங்களின் சகலவிதமான
திருத்த வேலைகளையும் தரமான முறையில்
திருத்திக்கொள்ள நாங்குகள்

Free Estimates, All Mechanical & Electrical Repairs
Muffler Work, Body Work & Painting
Friendly Services, Quality Workmanship & Guaranteed

We also install car Audio Systems,
Alarm Systems, Auto Glass & Seat Covers
If You are looking for a used Car, let us know
We can find you the best car in Town
Rust Proofing & Undercoating (Save you Body)
GOOD NEWS
Touch-up & Body Work on lease return cars
All kind of Mechanical Work, Call Us

Call: Louis
Tel: 416.757.7891 Dir: 647.831.2709
Email: itouchcarwash43@gmail.com
435A Midwest Road, Unit 5A, Scarborough ON M1P 3A6




BEST QUALITY WORK FOR REASONABLE PRICES!
OUR AIM IS TO SATISFY THE CUSTOMERS

GTA CHIROPRACTIC CENTRE

We are specialized in

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



Health is Wealth

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486
GTA Square Mall 5215 Finch Ave, E#206
Scarborough, ON, M1S 0C2
www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஒரு விராட் விஸ்வப் பிரம்மனே முயலு

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171
S.மூர்த்தி
Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

FRONTLINE COMMUNITY CENTRE

குடிவரவாளர்களுக்கான சேவைகள்

பெண்கள் மற்றும் முதியோர்
நலதிட்டங்கள் கனடிய மனநல அமைப்பு

வருமான வரி பத்திரம் நிரப்புதல்
கனடிய வருமான வரித்துறை

பொதுவான திட்டங்கள்

மாற்றுத்திறனாளிகளுக்கான திட்டங்கள்

வேலைவாய்ப்பு சம்பந்தமான சேவைகள்

முதியவர்கள் சமூக நீரோட்டத்தில்
பங்குபெறுவதற்கான திட்டங்கள்

தன்னார்வத் தொண்டாற்றல்

(416) 840-4425
3031 Markham Rd, Unit 26 & 27
Scarborough ON M1X 1L9

Frontline Community Centre
frontlinecommunitycentre
http://fcccanada.org/

Nickon நிக்கொன்
Photo & Video போட்டோ & வீடியோ
Digital Album டிஜிட்டல் அல்பம்





உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...



Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio



வழுக்கையாறு வழிவந்த வரலாறு

செ. கிருஷ்ணராஜா - முதநிலை விரிவுரையாளர் வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்



யாழ். குடாநாட்டின் சமூக, பண்பாட்டு உருவாக்கத்தில் இயற்கையமைப்பும் செல்வாக்குச் செலுத்தியிருக்கும் என்பதில் ஐயமில்லை. அவ்வகையில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும், தொண்டைமானாற்றிற்கு கிழக்கே மாயக்கை நீரேந்துப்பரப்பும் மக்கள் வாழ்வின் ஜீவனோபாய முறைகளில் செல்வாக்குச் செலுத்தியிருந்தமைக்கான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. குறிப்பாக மாயக்கையிலிருந்து சேகரிக்கப்பட்ட புராதன, மத்தியகாலப் பகுதிக்குரிய மட்பாண்ட ஓடுகள், கீச்சுக்கிட்டங்கள் (Iron Slage), நாணயங்கள், மணிகள், கல்லில் செய்யப்பட்ட கருவிகள் போன்றன சிறந்த சான்றுகளாக அமைந்துள்ளன. இதே போன்று வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் ஓரங்களிலில் இருந்து சேகரிக்கப்பட்ட கல்லாகிப்போன உயிரினச் சுவடுகள், மிகவும் காலத்தால் முந்திய மட்பாண்ட ஓடுகள், நாணயங்கள் போன்றன இப்பிராந்தியத்தின் வரலாற்று முக்கியத்துவத்தினை வெளிப்படுத்துவனவாக உள்ளன. இவற்றுள் எவையுமே திட்டமிடப்பட்ட தொல்லியல் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படாத நிலையில் இருந்துகொண்டிருப்பினும் கூட, கந்தரோடையிலிருந்தும், ஆனைக்கோட்டையிலிருந்தும் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்ட பண்பாட்டு எச்சங்கள் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு கொண்டிருந்திருக்கக்கூடிய பண்பாட்டுப் பங்களிப்பினையும், அவற்றின் முக்கியத்துவத்தினையும் உணரவைக்கின்றன.

அளவெட்டி, தொல்புரம், எள்ளாலை (ஏழாலை) ஆகிய மையங்களை இணைக்கின்ற நீரேந்துப் பரப்பிலிருந்து மாரி காலத்தில் உருவாகும் நீரோடையானது. வளைந்து வளைந்து சென்று ஆனைக்கோட்டையில் யாழ்ப்பாணக் கடல்நீரேரியுடன் சங்கமமாவதையே வழுக்கையாறு என்கிறோம். மாரிப் பருவத்தில் மத்திரம் இப்பள்ளத்தாக்கில் நீர் நிறைந்து அலைகள் தோன்றுவதனைக் காணலாம். கோடைகாலத்தில் ஆங்காங்கு வற்றாத கோடையூற்றுக்களாக அப்பள்ளத்தாக்கில் நிலைத்து நிற்கும் நீர்ச்சுனைகளிலிருந்து மக்கள் பயிர்ச்செய்கைக்காக நீரைப் பயன்படுத்துகிறார்கள். பல்லாயிரம் ஆண்டுகளாகத் தொடரும் இச்செயற்பாடானது. அப்பள்ளத் தாக்கினை மையப்படுத்தி வாழும் மக்களது வாழ்விலும் உணர்விலும் பெரும் செல்வாக்கினை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. தமிழகத்தில் காவிரி நதிப் படுக்கை எவ்வாறு மக்கள் வாழ்வின உயிரோட்டமாக விளங்கியதோ அதே போன்று, யாழ்ப்பாணக் குடா நாட்டிலும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு மக்களது ஜீவனோபாயத்துடன் ஒன்றித்திருந்தது எனலாம். அப்பின்னணியில் மக்களது சமய வாழ்வு மலர்வதற்கும் அப்பள்ளத்தாக்கு வழிசமைத்துக்கொடுத்திருந்தது.

யாழ்ப்பாணத்தின் சமூக உருவாக்கம் பற்றி ஆராய்வோருக்கு, வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு வளமான சான்று சேர்க்கும் மையமாக அமையும் என்பதும் எமது நம்பிக்கையாகும். யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள ஏனைய பிராந்தியங்களை விடவும், வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கிலேயெ பூர்வீகக் குடியிருப் புக்களையும், பாரம்பரிய சமூகக் கட்டுக்கோப்பு முறைகளையும் கண்டுகொள்ள முடிகிறது. இவ்வாறான சமூக உருவாக்கத்துக்கான உற்பத்தியுறவினையும், உற்பத்தி முறைகளையும் உருவாக்கிக் கொடுத்த ஒரு மையம் என்ற வகையில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் வரலாற்றுப் பின்புலம் எதிர்காலத்தில் நன்கு ஆராயப்பட வேண்டியதாகவுள்ளது.

உற்பத்தி வேளாண்மை, மேலதிக உற்பத்தி, நகரவாழ்வு

வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் கோடைப் பருவத்தில் விவசாயப் பெருங்குடி மக்கள் எள்ளு. குரக்கன், தினை. சாமை, பூசனி போன்ற பயிர்வகைகளையெ உற்பத்தி செய்தனர். மாரிகாலத்தில் நெல் வேளாண்மை சிறப்பிடத்தினைப் பெற்று வந்தது. ஆனைக்கோட்டை ஈறாக மாரிப் பருவத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனைக்கோட்டை என்ற மையமானது எள்ளு உற்பத்திக்கும் எண்ணை ஊற்றும் கைத்தொழிலுக்கும் அன்று தொட்டு இன்றுவரைக்கும் சிறப்பிடம் பெற்று வருவதனைக் காணலாம். இப்பொழுது ஏழாலை என்று அழைக்கப்படும் மையமானது புராதன காலத்தில் எள்ளு ஆலைகள் நிறைந்த தொழிற்களமாக விளங்கியிருந்திருக்க வேண்டும். "எள்ளாலை"ப் பெருங்குடி மக்கள் "கிணற்றைக் காத்தால் வயிற்றைக் காக்கலாம்" என்ற தத்துவத்தினை நன்கு தெரிந்து வைத்திருந்தவர்கள். எள்ளுணவு வகை செய்வதில் கைதேர்ந்தவர்கள், வழுக்கையாற்றின் வழி சென்று பொருளீட்டிய பெருமக்கள் இவர்களாவர். இதே போன்று தொல்புரம் (தொள்புரம்), அளவெட்டி (அளைவெட்டி) பிராந்திய மக்களும் வழுக்கையாற்று வழிசென்று தத்தமது ஜீவனோபாயத்தினை அமைத்து வந்தவர்களாகும். இவ்வாறு உற்பத்தி வேளாண்மைத் துறையில் மிகவும் உந்துசக்தியாக விளங்கிய இப்பள்ளத்தாக்கானது மேலதிக உற்பத்தி முறைமை உருவாவதற்கு உரிய பல சாதகமான நிலைகளைத் தன்னகத்தே கொண்டிருந்ததில் வியப்பேதுமில்லை. இப்பின்னணியில் இப்பள்ளத்தாக்கின் ஓரமாக நகரங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வகையில் கந்தரோடை என்ற நகரத்தின் தோற்றமானது பின்னர் ஏற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு வாணிப நடவடிக்கைகளுடன் இணைக்கப்பட்டவுடன் சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த மையமாக வளர்ச்சியடைவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. இதனால் பலவேறு வகையான பண்பாட்டு அம்சங்கள் அவ்விடத்தில் காலத்திற்குக் காலம் மையம் கொள்வதற்கும் வாய்பாயிற்று. இவ்வாறான ஒரு நிலைக்கு வடி காலாக அமைந்தது வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கென்றே குறிப்பிட வேண்டும். இதனால் யாழ்ப்பாணத்துப் பண்பாட்டு மரபுகள் பலவற்றுடனும் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கு இணைத்துக் கூறப்படுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டது.

காலத்தால் முற்பட்ட பண்பாட்டு மரபுகள்

"கடவை" என்று முடியும் இறுதிப் பெயர்ச் சொற்கள் பல இக்குடாநாட்டின் குறிப்பிட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மையங்களில் காணப்படுவது அவதானிக்கத் தக்கது. ஆயக் கடவை, அங்கண் அம்மைக் கடவை, பெருமாக் கடவை, கந்தவனக்கடவை, இலப்பைக் கடவை என்பன அவற்றுள் சிலவாகும். பாண்பாட்ட மரபுள் பரிமாற்றத்திற்குட்பட்ட முதல் மையங்களே "கடவை" என்று வழங்கும் இறுதிப் பெயர்ச்சொற்களுடன் காணப்படுகின்றன எனலாம். அவ்வகையில் அங்கண் அம்மைக் கடவை என்ற மையமும் பண்பாட்டு மரபு ஒன்றுடன் இணைத்துக் கூறப்படுவதனைக் காணலாம். அம்மையமானது கந்தரோடைக்கு நேர் மேற்கே பள்ளத்தாக்கிற்கு அப்பால் அமைந்துள்ள கல்வளைப்பிள்ளையார் கோவிலுக்கு வடதிசையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அங்கண் அம்மைக் கடவையில் அமைந்துள்ள கண்ணகி அம்மன் கோவில் மிகவும் புராதனம் வாய்ந்தது என்று கூறப்படுகின்றது. இப்புராதனக் கோவிலுடன் தொடர்புபட்ட மரபானது ஈழத்திற்கு கண்ணகி வழிபாடு பரவிய பண்பாட்டுப் புலத்துடன் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. சேரநாட்டில் சேரன் செங்குட்டுவன் மதுரையை எரித்த கண்ணகியைத் தெய்வமாக்கி, அத்தெய்வத்திற்கு இமயத்துக் கல்லில் சிலை வடித்து, விழா எடுத்த சமயத்தில் இலங்கை மன்னனான முதலாம் கயவாகு வேந்தனும் உடனிருந்து பங்கு கொண்டான் எனவும், பின்னர் அம்மன்னன் திருவடி நிலையில் வந்திறங்கி அங்கண் அம்மைக் கடவையில் "மதுரையை எரித்த கண்ணகிக்கு" தனது முதற்கோயிலை நிர்மாணித்துவிட்டு பின்னர் வழுக்கையாற்றினூடாகப் பயணம் செய்து, தனது வாழ்விடத்திற்கு மீண்டான் என வும் மரபுக் கதைகள் வாயிலாக அறியமுடிகின்றது.



சேர நாட்டிற்கும் ஈழ நாட்டிற்கும் இடையிலான தொடர்புகள் பெருமளவுற்கு வாணிப முயற்சிகளுக்கூடாகவே கையாளப்பட்டிருக்க வேண்டும். தென்னிந்தியாவில் வாணிப முயற்சிகளில் ஈடுபட்ட ரோம வியாபாரிகள் ஈழத்திற்கு நேரடியாக வந்து அம்முயற்சிகளில் ஈடுபட்டிருக்கவில்லை. பதிலாக சேரநாட்டு வயாபாரிகளுக்கூடாகவே அவ்வியாபார முயற்சிகளில் அவர்கள் ஈடுபட்டமைக்கான சான்றுகளை மகாவம்சம் போன்ற இலக்கியங்களின் ஊடாக அனுமானிக் முடிகிறது. இக்காரணத்தினாலேயே சேரன் செங்குட்டுவன், கயபாகு உறவு மிகவும் நெருக்கமடைந்திருக்க வேண்டும். யாழ்ப்பாணத்திலுள்ள "செங்குந்தர்" (செங்குட்டுவர்) ' கட்டுவன்" போன்ற பெயர்கள் சேரநாட்டுடன் கொண்ட தொடர்புகளின் அடியாகவே பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். இப்பின்னணியில் வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கும் சேரநாட்டு, ஈழநாட்டு வியாபாரிகளுக்கு மரக்கலம் ஓட்டுவதற்கு சாதகமான நிலையை தோற்றுவித்திருந்தது எனலாம். பாண்டிய நாட்டின் சமணமும், சேர நாட்டின் பௌத்தமும் எதிர்ப்பியக்கத்திற்குள் அகப்பட்டமையைத் தொடர்ந்து பௌத்தமானது தனது வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்குமான வகைகளை அயல் நாடுகளிலும் தேடிக் கொள்ள முற்பட்டது. இச்சூழலில் இலங்கையிலும் பௌத்தம் பரவிக்கொண்டது. இவ்வாறான பௌத்தப் பண்பாட்டின் இலங்கை வருகையில் அதன் ஒரு பிரிவானது சேர நாட்டின் ஊடாக இலங்கைக்கு எடுத்து வரப்பட்டிருக்காலம் எனக் கருதுவதற்கு உதவும் சில சான்றுகளை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில், குறிப்பாக கந்தரோடையில் கண்டுகொள்ள முடிகின்றது. கந்தரோடையில் காணப்படும் எச்சங்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற கலை மரபுகளில் சேரநாட்டினூடாக வெளிப்படுத்தப்பட்ட அமராவதி பண்புகளின் சாயலை அவதானிக்க முடிகிறது. பழந்திராவிடத்தின் ஒரு பிரிவான சேரநாடு பௌத்தத்தின் செல்வாக்குக்குட்பட்ட நிலையில் பௌத்த கலைக் கூறுகளான ஸ்தூபி, விகாரைகள், புத்தர் உருவங்கள் என்பவற்றைக் கொண்டிருந்தன. தனித்துவம் வாய்ந்த ஸ்தூபி அமைப்பு முறைகளை சேரநாடு கொண்டிருந்தமை அவதானிக்கத்தக்கது. சிலப்பதிகாரப் பண்பாட்டினைத் தோற்றுவித்த அதே சேர நாடு, பின்னர் மணிமேகலை கண்ட துறவு வாழ்வினையும் கொண்டது என்றால், அது சேர நாட்டின் அமைவு எந்த அளவுக்குப் பண்பாட்டுப் பரிமாற்ற முறைகளில் பங்கெடுத்திருந்தது என்பதனை நிரூபிப்பதாக அமையும். கந்தரோடையிலும் இவ்வாறான பண்பாட்டு வளர்ச்சி ஏற்பட்டிருந்தது என்பதனை கிடைத்துள்ள சில சான்றுகள் வாயிலாக வெளிப்படுத்த முடிகின்றது.

கந்தரோடை, தமிழ்ப் பௌத்த மையமா?

கந்தரோடை தொடர்பான தொல்லியல் சான்றுகள் இதுவரையில் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பிரகாரம் அடிப்படையில் திராவிடப்



பண்பாட்டுக்குரியதாகவும் மேற்படையில் பாளிபௌத்தப் பண்பாட்டுக்குரியதாகவும் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. இங்கு பெருங்கற் காலப் பண்பாட்டுக்குரிய திராவிடப் பழங்குடி யினரே முதலில் வாழ்க்கையினைத் தொடங் கியிருந்தனர் என்பதும் பின்னரே பௌத்தப் பண்பாடு வந்து மையங்கொண்டிருந்தது என்பதும், இப்போது பெருமளவுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. மிகப் பூரணத்துவமான தொல்லியல் அகழ்வாய்வினைக் கந்தரோ டையில் நடத்தி முற்றுவிக்கப்படும் வரைக்கும் கந்தரோடை பற்றிய காலமும் கருத்தம் ஐதீக மான அளவிலேயே இருந்துகொண்டிருக்கும். இந்நிலையில் கந்தரோடையைப் பற்றிய வரலாறு பண்பாட்டுப் பகைப்புலமானது பலராலும் திரிபுபடுத்தப்பட்டு, காலத்திற்கேற்ற வகையில், காலத்தின் தேவைகருதி, அவ ரவர்க்குச் சாதகமாக எடுத்துக் கூறப்பட்டு வரு வதனைக் காணலாம். கந்தரோடையில் எவ் வாறு பண்பாட்டுமாற்றங்கள் நிகழ்ந்திருந்தன என்பதும், அதனை எவ்வாறு பண்பாட்டு ஆய்வாளர்கள் இனிமேல் விளங்கிக் கொள்ள வேண்டும் என்பதனைக் கண்டுகொள்வதும் எதிர்கால அதிகார மாற்றங்களின் ஊடாகவே தீர்மானிக்கப்பட்ட வேண்டியவை ஆகிவிட் டன.

கந்தரோடையில் பௌத்தம் தொடர்பான தொல்லியல் எச்சங்கள் பெருங்கற்காலத் திராவிடப் பண்பாட்டுக்கான மண்படை அடுக் குகளுக்கு மேல் அமைந்து காணப்பட்டிருக் கின்றன. ஆனால் ரோமப் பண்பாட்டுக்குரிய எச்சங்கள் இவ்விரண்டு நிலைமைகளிலும் கலந்து காணப்பட்டிருக்கின்றமை இங்கு அவ தானிக்கப்பட வேண்டிய ஓரம்சமாகும். தென் னிந்தியாவில் ரோமப் பண்பாட்டுக்குரிய தொல் லியல் எச்சங்கள் பெருமளவுக்குப் பெருங்கற் காலத் திராவிடப் பாண்பாட்டுடன் இணைந்து காணப் படுவதனை அவதானிக் காலம். ஆனால், கந்தரோடையிலும் கேரளத்திலும் ரோமப் பண்பாட்டுக்குரிய தொல்லியல் எச்சங் கள் திராவிட பௌத்தப் பண்பாட்டுக்குரிய மண்படைகளுடன் கலந்து இணைந்த வகை யில் காணப்பட்டிருக்கின்றன. அந்நிலை மைனது நாம் எதிர்நோக்கும் சிக்கலை ஓரள வுக்காவது விடுவிப்பதற்கு உதவுவதாகலாம்.


வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கின் அருகில் வளர்ச்சி பெற்ற இந்நகரமானது முதலில் விவ சாயப் பொருளாதார நடவடிக்கைகளின் பின் னணியில் தோற்றுவிக்கப்பட்டது என்பதனை எவருமே மறுக்க முடியாது. அதாவது பெருங் கற்காலத் திராவிட விவசாய மக்களே இந் நகரத்தின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக் குமுடைய அடிப்படைகளை அமைத்துக் கொடுத்திருந்தனர் என்பதாகும். பின்னர் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச வியாபார நடவடிக்கைகளின் பின்னணியில் சர்வ சமூகங்களையும் உள்ளடக்கிய ஒரு வியாபார மையமாக கந்தரோடை வளர்ச் சியடைந்திருக்கு வேண்டும் என்பதனை அங் கிருந்து கண்டெடுக்கப்பட்ட பிரமி, பிராகிருத, சிங்களக் கல்வெட்டுக்கள் உறுதிப்படுத்துகின் றன. இவ்வாறான ஒரு வளர்ச்சி நிலைக்கு வழுக்கையாற்றினூடாக இடம்பெற்றிருந்த மரக்கலங்களின் பயணங்கள் உதவியிருந்த தன என்பது தெளிவாகின்றது. நல்லதேவன் துறை என்ற பெயரில் ஒரு பழங்கிராமம் அங்கு இன்றுவரைக்கும் நாவாய் போக்கு வரத்து நடைபெற்றிருந்தமைக்குச் சிறந்த உதாரணமாகின்றது.

மரக்கலங்களின் பயணங்களும் சர்வதேச வியாபார நடவடிக்கைகளும் தடைப்பட்டாது அபிவிருந்தி அடைந்த வந்தது வரையில் கந்தரோடையில் பௌத்தமும் செழிப்புற்றிருந்த தது எனக் குறிப்பிடலாம். சிலப்பதிகாரச் செழிப் பின் பின்னணியில் அங்கண் அம்மைக் கடவை தோன்றியது போன்று மணிமே கலையின் துறவின் பின்னணியில் கந்த ரோடை வளர்ச்சி பெற்றது எனக் கூறினால் அது மிகையாகிவிடாது. வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் எதிரும் புதிருமாக இவ்விரு மையங்களும் அமைந்திருப்பது இரட்டைக் காப்பியங்களுக்கும் ஈழத்துக்கும் உள்ள உற வினை வலுப்படுத்த உதவுகின்றது ஆகலாம். ஆனால், அவையிரண்டுமே சேரநாட்டுத் தொடர்பினால் வலுப்படுத்தப்பட்டவை என் பதை மறந்துவிடலாகாது.

சேரநாடு, கந்தரோடைத் தொடர்புகள்

கந்தரோடையில் அகழ்ந்து வெளிப்படுத்தப் பட்ட வட்டமானதும், சதுராமானதுமான பௌத்தக் கட்டிடங்களின் அத்திபாரங்களது தோற்றப்பாடானது தாய்லாந்திலும் கேரளா விலும் காணப்படுகின்ற வற்றைப் பெரிதும் ஒத்திருக்கின்றன.

அடிப்படையில் இப்பௌத்தக் கலையம்சங்கள் ஆந்திர மரபுக் குரியவையாகக் காணப்படு கின்ற பொழுதிலும், கந்தரோடையில் காணப் படுகின்ற பௌத்தமதத்துக்குரிய கட்டிடக்கூறு களில் கேரள நாட்டுக்குரிய தனித்துவமான கட்டுமான அம்சங்கள் பொருந்தியுள்ளது. அவற்றுள் ஒன்று கடற்பவளக் கற்களைக் கட்டி டங்களுக்குப் பயன்படுத்தும் முறைமை யாகும். கேரளா வில் போர்க்களம், பாலக்காடு ஆகிய இடங்களில் கி.மு. 1ம் நூற்றாண்டுக் குரிய ஸ்தூபிகள் கடற் பவளக்கற்களினால் கட்டப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள் ளது. கந்தரோடையிலும் கடற்பவளக் கல்லினால் கட்டப்பட்டவை பெரிதும் கேரள ஸ்தூபி அமைப்பு முறையினைக் வெளிப் படுத்தப்பட்ட பௌத்த கட்டிடக் கூறுகளில் தூண்களைத் தாக்குகின்ற துளை கற்கள், கற்றகடுகள் போன்றவை கேரள நாட்டு கற்கட்டுமானக் கலையின் அடியாக உருவாக்கப்பட்டிருந்தன. கேரள நாட்டில் பாறைப்பரப்புகளில் நுண் டுளைகள் இடும் முறையைப் பின்பற்றியே கந்தரோ டையில் ஸ்தூபிகளின் உச்சிக் கற்கற் துளையிடப்படடிருந்தன. மேலும், மிகப் பெரிய உச்சிக் கல்லின் நடுப்பாகம் கல்லறை போன்று அகழப்பட்டு விலை உயர்ந்த நவரத்தின மணி கள் இட்டு வைக்கப்பட்டிருந்த முறைமையும் கந்தரோடையில் கண்டுபிடிக்கப்பட்டது. இது வும் கேரள கட்டிடக்கலை மர பினையே வெளிப்படுத்துவதாக உள்ளது. இவை எல்லா வற்றுக்கும் மேலாக கந்த ரோடை அகழ்வின் போது கண்டபிடிக் கப்பட்ட "திருகு கற்கள்" (தானியம் அரைப் பதற்காக பயன்படுத்தப் பட்டவை) கேரள நாட்டுப் பாணியை அப்படியே வெளிப் படுத்துவதாகவுள்ளது. இன்னும் பல அம்சங் களை ஆய்வின் அடிப்படையில் எதிர் காலத் தில் எடுத்துக் காட்ட முடியும் இப்பின் னணியில் சேரநாடு புராதன கந்தரோடை பற்றிய தொடர்பினை மேலும் ஆராய வேண் டும். அவ்வழியே வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கின் வரலாற்று முக்கியத்துவத்தினையும் மேலும் ஆராயக்கூடிய நிலை உருவாகலாம். சிலப்பதிகாரக் காலப் பண்பாட்டினைத் தொடர்ந்து மணிமேகலையின் "அறஒளி" தோன்றியமை போன்று கந்தரோடையிலும் பண்பாட்டு மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள் ளன. அப்பண்பாட்டு மாற்றங்களுக்கொல்லாம் முதுகெலும்பாக வழுக்கையாற்றுப் பள்ளத் தாக்கு விளங்கிவந்திருக்கின்றது. ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தின் போதும் எவ்





வாறு பருத்தித்துறையிலிருந்து மலையாளத் துடன் தொடர்புகள் ஏற்பட்டிருந்தனவோ, அதே போன்ற ஒரு தொடர்பினையே கந்தரோ டையும் பழைய மலையாளத்துடன் (சேரநாட் டுடன்) கொண்டிருந்தது எனலாம். அத்தொடர் புகளின் பின்னணியில் மலையாள நாட்டுப் பண்பாட்டு மரபுகள் அங்கண் அம்மைக் கடவை கந்தரோடைப் பிராந்தியங்களில் நிலைபெறுவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டது. சாத் துப்படியும், மேளமும் இப்பண்பாட்டு மரபின் எச்சசொச்சமாக இருந்துகொண்டிருக்கின்றன. பெருங்கற்காலப் பண்பாடு, பௌத்த பண்பாடு, கண்ணகி வழி பண்பாட்டு மரபு போன்றன ஒரே பிராந்தியத்தில் மாறி மாறிச் செல்வாக்குச் செலுத்திய தன்மையை வழுக்கையாற்றுப் பள்ளத்தாக்கில் காணமுடிகின்றது. இவற்றிற் கெல்லாம் மையமாக கந்தரோடை விளங் கியிருக்கின்றது. இப்பிராந்தியத்தில் மேற் கொள்ளப்பட்டவிருக்கும் எதிர்கால ஆய்வு களே மேலும் பல புதிய தகவல்களைத் தரு வதாக அமையும். எனவே, புதிய சிந்தனை நோக்கில் அமைந்த இக்கட்டுரையானது மேலும் சிந்திக்கத் தூண்டுமாயின் அதுவே எடுத்துகொண்ட நோக்கத்தின் வெற்றியாக அமையும்.

நன்றி: வெளிச்சம், எரிமலை 11, 1993

துப் பார்ப்பதற்கு வழி பிறக்குமல்லவா?

கார்த்திகை 1994 - எரிமலை

2022ஆம் ஆண்டின்

உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது
செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம்
வீண் விரயமன்று அது உங்கள்
வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும்
முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை



விளம்பரத் தொடர்புகளுக்கு

437 345 4203

www.ulagavanikam.com
thamilarvanikam@gmail.com

தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கம் காலத்தின் தேவை

– நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி. உருத்திரகுமாரன் –

நவம்பர் 27. 2021

தேர்தல் அரசியலுக்கு அப்பாற்பட்ட உலகளாவிய தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கம் காலத்தின் தேவை என தனது மாவீரர் நாள் செய்தியில் தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திர குமாரன், தற்போதைய பல்துருவ உலக ஒழுங்கினை தமிழர்கள் எதிர்கொள்ளுதல், இந்தியாவினதும் ஈழத் தமிழர்களதும் நலன்கள் என பல்வேறு சமகால விடயங்களை சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறீலங்கா அரசினது தமிழினவழிப்பு முயற்சியினைத் தடுத்து நிறுத்த, தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தாயகத் தமிழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், தமிழக மற்றும் உலகத் தமிழ் மக்கள் ஓரணியில் அணிவகுத்து நின்று செயற்படுதல் அவசியமானது எனவும் அவர் தனதறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மாவீரர் நாள் செய்தியின் முழுவிபரம் :

இன்று தேசிய மாவீரர் நாள்.

தமிழீழ தேசத்தின் விடுதலைக்காய் தமது இனிய உயிர்களை ஈகம் செய்த நமது மாவீரர்களை நாம் எமது இதயக்கோயில்களில் வைத்துப் பூசிக்கும் நாள்.

தமிழீழ மக்களின் விடுதலை வேட்கையினை தம் நெஞ்சக்கூட்டினுள் சுமந்து, நெருப்பாறுகள் பலவற்றைக் கடந்து, போர்க்களத்தில் தம் பெரும் வீரத்தை நிலைநிறுத்தி, தமிழீழ தேசத்தின் இருப்பை, அத் தேசத்தின் சுதந்திரத்துக்கான துடிப்பை உலகப்பரப்பில் ஓங்கி முரசறைந்த நம் தேசப் புதல்வர்களின் திருநாள்.

தமிழீழ மக்கள் சிங்கள பௌத்த பேரினவாதப் பூதத்தின் பிடியிலிருந்து விடுபட்டு தேசிய சுதந்திரம் அடைந்தவர்களாக, சமூக அநீதி நீங்கி, சமூகநீதி நிலவுகின்ற, பெண் அடிமைத்தனம் அகன்ற, சாதி, சமய, பிரதேச, பொருளாதார சமத்துவம் நிலவுகின்ற சமூகமொன்றில் சமூக விடுதலை அடைந்தவர்களாக, உன்னத வாழ்வை வாழ வேண்டும் என்ற உயரிய கனவுடன் நம் மண்ணில் விதையாய் வீழ்ந்த நம் வீரர்களின் பெருநாள்.

மாவீரர்கள் இலட்சிய உறுதி நிரம்பியவர்களாகக் களமாடினார்கள். தமது இலட்சியம் மனித அறத்தின் அடிப்பிடையிலானது என்பதில் மிகுந்த தெளிவோடு போர்க்களத்தில் எதிரியை எதிர்கொண்டார்கள்.

நாம் எந்த மக்களது மண்ணையும் ஆக்கிரமிக்கவில்லை என்ற அறத்துணிவோடு, தமிழீழ தாயகத்தை ஆக்கிரமித்து நிற்கும் சிங்கள அரச ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்துப் போராடுவது தமது வரலாற்றுக்கடமை என்ற தற்துணிவோடு களமாடினார்கள்.

தமிழீழ விடுதலைக்கான போராட்டம் தமிழீழ மக்களது அரசியல் உரிமை என் பதிலும், தமிழர் தேசத்தின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்துக்கு அனைத்துலக சட்டங்களில் இடம் உண்டு என் பதிலும் தளராத மனவுறுதி கொண்டு விடுதலைப் போராளிகளாய் களத்தில் நின்றார்கள்.

மாவீரர்களின் போராட்டம் அறநெறி வழி நின்றதால் எப்போதும் அவர்களது உறுதியும் ஓர்மமும் வானளாவி நின்றன. ஆட் பலத் திலும், ஆயுத பலத்திலும் பல்மடங்கு பலத்தைக் கொண்டிருந்த சிங்கள அரசின் பெரும்படைகளைத் துவம்சம் செய்து போர்க்களத்தில் பெருபெற்றிகள் பலவற்றை நமது மாவீரர்கள் குவித்தனர்.

போர்க்களத்தில் தார்மீகபலம் பொருட் பலத்தை விட மூன்று மடங்கு வலியது என்ற நெப்போலியனின் கூற்றுக்கு உதாரணமாக போர்க்களத்தில் நம் மாவீரர்கள் களம் கண்டார்கள்.

தமக்கென சுதந்திரமும் இறைமையும் கொண்ட அரசை அமைக்கும் தேசத்தின் சுதந்திர வேட்கையைச் சுமந்தவர்களாய், தமிழீழத் தேசத்தின் பெரும் கனவுக்கு உயிர் கொடுத்தவர்களாய் நமது மாவீரர்கள் நம் கண்முன்னே வாழ்ந்தார்கள்.

நம் மண்ணில் விதையாய்ப் புதைந்தார்கள்.

நமது மாவீரர்களின் போராட்டம் ஆக்கிரமிப்புக்கானதல்ல. மாறாக சிங்கள பேரினவாத அரசின் இனவழிப்பில் இருந்து தமிழீழ மக்களைப் பாதுகாப்பதற்கானது என்பதும் தமிழர் தேசத்தில் சமூகநீதியும் சமத்துவமும் நிலைக்கும் சமூகமொன்றைப் படைக்க வேண்டும் என்பதும் எவ்வாறு உண்மையோ அதுபோலவே நமது மாவீரர்களின் போராட்டம் அனைத்துலக மக்களுக்கு எதிரானதுமல்ல. மாறாக உலகெங்கும் வாழும் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டங்களுடன் தோழமையுணர்வு கொண்டு, உலகின் முற்போக்கான மாற்றங்களுக்கு ஆதரவு வழங்கும் உலகப்பார்வையின் வழிப்பட்டு நின்றது.

தர்மத்தின் சக்கரத்தில் இந்த உலக அரசியல் ஒழுங்கு சுற்றவில்லை. மாறாக நலன்களின் அச்சுகளிலேயே சுற்றுகிறது என்ற உலக அரசியல் குறித்த புரிதலுடனும், புவிசார்அரசியல் குறித்த கவனத்துடனும்தான் மாவீரர்கள் தமது விடுதலைப்பயணத்தை தொடர்ந்துள்ளார்கள். வாய்ப்புகள் வரும் போதெல்லாம் அனைத்துலக அரசுகளின் அக்கறையினைப் புரிந்து கொண்டு போராட்டத்தினை நெறிப்படுத்தி நின்றனர்.

உலக அரசுகளின் நலன்களையும் தமிழீழ மக்களின் நலன்களையும் இணையவைக்கக்கூடிய வாய்ப்புகளையும் வெளிகளையும் கண்டு கொள்ள மாவீரர்கள் தயாராக இருந்தனர். ஆனால் உலக அரசுகளின் நலன்களுக்காக தமிழீழ மக்களின் நலன்களைக் கைவிடவோ அல்லது சமரசம் செய்யவோ மாவீரர்கள் தயாராக இருக்கவில்லை.

இதனால், உலக அரசுகளின் நலன் சமன்பாட்டில் அவர்களின் "நீதி" சிறீலங்கா அரசின் பக்கம் சரிந்தது. நமது மாவீரர்களையும், விடுதலை இயக்கத்தையும் பயங்கரவாதியாய் முத்திரை குத்தி அந்த உலக சமூகம் மகிழ்ந்தது. அரசியல் அங்கீகாரத்தை மறுத்தது. சிறீலங்கா அரசுடன் இணைந்து கொடிய இனவழிப்புப் போரை



நிகழ்த்தினார்கள்.

இப் போரை எதிர்கொண்டு இறுதிவரை இலட்சியத்துக்காகப் போராடி நம் தேசத்தின் புதல்வர்கள் தம்முயிர் ஈந்தார்கள். தமிழீழ தேசத்தின் வரலாறாய் நிமிர்ந்தார்கள்.

நமது மாவீரர்கள் தமது தேசத்துக்கு, நமது தேசத்தின் அரசியற்பாதைக்கு வழிகாட்டியாய் இன்று நிற்கிறார்கள்.

நமது தேசத்தின் காற்றினில் கலந்து, நமது மக்களின் மூச்சினில் இணைந்து நமது தேசத்தைக் காவல் காத்து நிற்கிறார்கள்.

மாவீரர்கள் நினைவு நம் தேசத்தில் இருக்கும் வரை நம் தேசம் என்றும் தலை குனியாது. எதிரியின் சூழ்ச்சிக்குள் சிக்கிச் சிதைவுறாது. இந்த உறுதியுடன் நாம் நமது மாவீரர்களுக்கு எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோம்.

இன்றைய தமிழீழத் தேசிய மாவீரர் நாளில் உலகெங்கும் வாழும் தமிழ் மக்களுடன் இணைந்து நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் தலை வணங்கி, தாழ் பணிந்து நமது மாவீர்களுக்குத் தனது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அன்பான மக்களே,

நாம் மாவீரர்கள் வாழ்ந்த காலத்தில் வாழ்பவர்கள். மாவீரர்களின் வரலாற்றை, அவர்களது வீரத்தை, ஈகத்தை, தமிழீழ மண்ணின் மீதும், மக்களின் மீதும் அவர்கள் கொண்ட பற்றை, பாசத்தை நேரில் பார்த்தவர்கள்.

மாவீரர்களும் நமது விடுதலை இயக்கமும் பெண் சமத்துவம் நிலவ எடுத்த முயற்சிகள் குறித்தும், சாதி, சமூக, பிரதேச வேறுபாடுகளால் சமூக அநீதி வெளிப்படுவதைத் தடுப்பதற்கும், இயற்கையைப் பாதுகாப்பதற்கும், பொது மக்கள் சுகாதாரத்தையும் கல்வியையும் வாழ்வையும் மேம்படுத்துவதற்கும் எடுத்த முயற்சிகளுக்குப் பங்காளிகளாக நின்று கண்கண்ட சாட்சிகளாக வாழ்ந்தவர்கள்.

நமது தேசியத்தலைவரால் நிறுவப்பட்ட தமிழீழ நடைமுறையரசு நெருக்கடிக் காலங்களில் எவ்வளவு சிறப்பாகச் செயற்பட்டது என்பதற்கு 2004 ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 26 ஆம் நாள் ஏற்பட்ட சுனாமிப் பேரனத்தத்தை நமது தமிழீழ தேசம் கையாண்டமுறை உலகுக்கு முன்னுதாரணமாக இருந்ததையும் நேரில் கண்டவர்கள்.

தமிழீழ நடைமுறையரசின் ஆளகைக்குள் நமது மக்கள் இருந்த காலத்தில் நள்ளிரவிலும் நமது பெண்கள் சுதந்திரமாய் உலவித் திரிந்தார்கள். போதைப் பொருள் பாவனையோ, ஏனைய சமூகச் சீரழிவுகளோ இல்லாத வாழ்வு நம் தாயகத்தில் இருந்தது. நடைமுறையரசின் நிர்வாகத்தின் மீதும், தமிழீழ காவற்துறை மீதும் மக்கள் நம்பிக்கை வைத்திருந்தார்கள். இவையெல்லாம் நம் கண்முன்னாலே நிகழ்ந்தவைதான்.

தமிழீழ அரசின் ஆளுகைக்குள் நமது தாயகம் இப்போது இருந்திருக்குமேயானால் தற்போதய கொரோனாப் பெருந்தொற்றுக்காலத்தில், தொற்றைக் கட்டுப்படுத்தி மக்கள் வாழ்வை வளப்படுத்துவதில் உலகுக்கு முன்னுதாரணமாக நம் தமிழீழத் தாயகம் விளங்கியிருக்கும்.

அத்தகை சிறப்புகள் கொண்ட நமது விடுதலை இயக்கத்தை, மாவீரர்களைப் பயங்கரவாதிகளாகச் சித்தரிக்கும், முத்திரை குத்தும் முயற்சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன என்பது நமக்குப் பெரும் வேதனையைத் தருகிறது.

சிறீலங்கா அரசு மட்டுமல்ல உலகின் வலுமிக்க சில அரசுகளும் இதனைச் செய்கின்றன. இது அவர்களின் அரசியல் வியூகம் என்பது நமக்குப் புரிந்தாலும் இவற்றை எதிர்க்க வேண்டியது மாவீரர்களுக்கு நாம் செய்ய வேண்டிய வணக்கத்தின் ஒரு பகுதியாகவே நாம் பார்க்கிறோம்.

நமது போராட்டத்தின் அரசியல் நியாயத்தை நிலைநிறுத்தவும், நமது எதிர்காலத் தலைமுறைக்கு வரலாறு சரியாகச் சென்றடையவும் நமது மாவீரர்கள் மீது சுமத்தப்படும் பயங்கரவாதிகள் என்ற முத்திரைக்கு எதிராக நாம் செயற்பட்டாக வேண்டும். இம் முத்திரை குத்தும் முயற்சிக்கு எதிராக நாம் அரசியல், சட்ட, இராஜதந்திர வழிகளில் சாத்தியமான அனைத்து முயற்சிகளையும் எடுக்க வேண்டியது நமது இன்றைய கடமையாகும்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு மீதான பயங்கரவாத முத்திரையையும் தடையையும் அகற்றக்கோரி சட்டப் போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடாத்துவதற்குத் தீர்மானித்து எடுத்துவரும் நடவடிக்கைகளை இப் பின்னணியில் தான் விளங்கிக் கொள்ள வேண்டும்.

சிலர் இது அரசியற் பிரச்சனை. இதனை சட்டவழிமுறை மூலமாக வெல்ல முடியாது என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றனர். இது அரசியற் பிரச்சனை என்ற புரிதல் எமக்குண்டு. சட்டவழிமுறைப் போராட்டத்தை அரசியல் போராட்டத்தின் ஒரு பகுதியாகவே நாம் நோக்குகிறோம். நமது மாவீரர்கள் பயங்கரவாதிகள் அல்ல என வாதிடுவதற்கும் நிறுவுவதற்கும் கருத்துருவாக்கம் செய்வதற்கும் நாம் முயல்கிறோம்.

எமது அடுத்த தலைமுறையினருக்கும் நமது மாவீரர்கள் பயங்கரவாதிகள் இல்லை என்பதனையும் நமது சட்டப்போராட்டங்கள் மூலமும், இப் போராட்டங்களின் ஊடாக நாம் முன்வைக்கும் கருத்துக்கள் மூலமும் வெளிப்படுத்தி வருகிறோம்.

நமது இச்சட்டப்போராட்டங்கள் தற்போது பிரித்தானியா, அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் நடைபெற்று வருகின்றன. பிரித்தானியாவில் நாம் மேற்கொண்ட சட்டப் போராட்டம் விடுதலைப்புலிகள் அமைப்பைப் பயங்கரவாத அரசாகச் சித்தரித்த வழிமுறை தவறு என்பதை நன்கு வெளிப்படுத்தியிருந்தது. இது பிரித்தானிய அரசுக்கு அழுத்தத்தையும் கொடுத்தது. இருந்த போதும் பிரித்தானிய அரசு தடையை அகற்றாது மீண்டும் அதைக் கொண்டு வந்துள்ளது. நாமும் அதனை எதிர்த்து மீண்டும் எமது சட்டப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்.

பிரித்தானிய அரசு இந்தத் தடவை விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்த போது தமிழீழத் தேசியக்கொடி மீது தடையேதும் இல்லை என்பதனை வெளிப்படுத்தியதானது எமக்குப் புதிய வாய்ப்பையும் வெளியையும் வழங்கியுள்ளது. இவ் வாய்ப்பை கையிலெடுத்ததன் மூலம் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரச வையை சிறப்பு அமர்வு ஒன்றுக்காக சென்ற மாதம் அக்டோபர் 24 ஆம் நாளன்று கூட்டியிருந்தோம். அவ் அமர்வில் இனி வருங்காலத்தில் ஆண்டுதோறும் நவம்பர் மாதம் 21 ஆம் திகதி தமிழீழத் தேசியக் கொடி நாளாக விளங்கும் எனத் தீர்மானித்து அறிவித்திருந்தோம்.

முப்பத்தொரு ஆண்டுகட்கு முன்னர் 1990 நவம்பர் மாதம் 21 ஆம் திகதி வரலாற்றின் இரண்டாவது மாவீரர் நாளையொட்டி தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் தமிழீழத் தேசியக் கொடி அறிமுகம் செய்யப்பட்டு ஏற்றி வைக்கப்பட்டது எமது தேசியக் கொடியின் வரலாறு. முப்பத்தொரு ஆண்டு காலமாக தமிழீழ தேசத்தின் தேசியக் கொடியாக மேன்மையுடன் விளங்கிவரும் இக் கொடிக்குரிய சிறப்பை மீள ஒருமுறை வலுவாக நிறுவவேண்டுமென்ற உந்துதலோடு, நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இவ் வாரத்தின் துவக்கத்தில் சென்ற ஞாயிறு நவம்பர் 21 ஆம் நாளன்று முதலாவது தமிழீழ தேசிய கொடிதினத்தை உலகறிய முரசறைந்து நிறுவியுள்ளது. உலகின் பல முனைகளில் பல தமிழ் அமைப்புக்களின் சிறப்பான பங்குபற்றலோடு எமது இனத்தின், எமது தேசத்தின் கொடிதினம் கொண்டாடப்பட்டது பெருமைக்குரியது.

தமிழீழ தேசத்தின் மக்கள் அனைவரையும் உலகப் பரப்பில் பிரதிபலிக்கும் இக் கொடி ஈழத் தமிழினத்தின் இறைமையினதும், சுயநிர்ணய உரிமையினதும் வெளிப்பாடு. இது அன்னியரின் ஆட்சியிலும் பௌத்த சிங்கள மேலாதிக்கத்திலும் இருந்து விடுதலை பெற்று மீள்வதற்காகப்போராடிவரும் ஈழத்தமிழினத்தின் அளப்பரிய உயிர்க் கொடைகளை நினைவுறுத்தும் கொடி.

எமது உன்னதமான மாவீரர்களது உயிர்த் துடிப்பாக விளங்கிய பெருமைக்குரிய இத் தேசியக் கொடியினை அதற்குரிய அனைத்து மரியாதைகளுடனும் ஈழத் தமிழர் அனைவரும் தம் மனதிலும், தங்கள் மனைகளிலும், தாம் கூடும் இடமெங்கும் ஏந்தி வணங்கி ஏற்றமுடன் பறக்க விட வேண்டுமென இம் மாவீரர் நாளில் நான் வேண்டுகோள் விடுக்கிறேன்.

பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் அமைப்புக்கு எதிராக மீண்டுமொருமுறை விதிக்கப்பட்டுள்ள தடையை எதிர்த்து கடந்த ஒக்டோபர் மாதம் 2 ஆம் நாள் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தனது புதிய சட்டப்போராட்டத்தை ஆரம்பித்திருக்கிறது.

பிரித்தானிய அரசின் முடிவு தவறானது என்பதனை பிரித்தானிய மக்களுக்கும் உலகுக்கும் வெளிப்படுத்த நாம் இந்தச் சட்டப்போராட்டத்தைப் பயன்படுத்துவோம். மாவீரர்கள் நமக்கு வழங்கியுள்ள தார்மீக பலத்தின் துணையுடன் இப் போராட்டத்தல் நாம் வெற்றி பெறுவோம் என நம்புவோம்.

இந்தியாவிலும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் சார்பில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிரான தடையை எதிர்கொள்ளும் சட்ட நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்திருக்கிறோம். இச் சட்ட நடவடிக்கையின் ஊடாகத் தமிழீழ மக்களின் தேசியப்பிரச்சினைக்குத் தீர்வாகத் தமிழீழத் தனியரசு அமைய வேண்டியதன் அவசியம் குறித்தும் கருத்துருவாக்கம் செய்ய முயல்கிறோம்.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட அமைப்பு அல்ல எனவும் இவ் அமைப்பு இந்தியாவில் செயற்படுவதற்கோ அல்லது தமிழீழத் தனியரசு குறித்துப் பரப்புரை செய்வதற்கோ தடையேதும் இல்லை எனவும் நீதிமன்றம் தெரிவித்துள்ளமை இச் சட்ட நடவடிக்கை



களால் எட்டப்பட்ட நன்மைகளில் ஒன்றாக நாம் கருதுகிறோம்.

அமெரிக்காவிலும் விடுதலைப்புலிகள் அமைப்பு சார்ந்த தடைக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறோம். தடைவிதிக்குரிய காலம் முடிவடைந்தமையால் விடுதலைப்புலிகள் அமைப்பின் மீதான அமெரிக்கத்தடை தற்போது முடிவுக்கு வந்துள்ளது. மீண்டும் புலிகள் அமைப்பைத் தடைப்பட்டியலில் சேர்க்கக்கூடாது என நாம் எமது வாதங்களை சட்டரீதியாக முன்வைத்திருக்கிறோம். இது குறித்த முடிவை அமெரிக்க அரசு இதுவரை எடுக்கவில்லை.

அரசுகள் விரும்புகின்ற நிலைப்பாடுகளுக்கு எல்லா நேரங்களிலும் நீதிமன்றங்கள் உடன்பட்டு விடுவதில்லை. இதுவும் எமக்கு வாய்ப்பாக அமையக்கூடிய சந்தர்ப்பங்களை அதிகரிக்கும்.

சுவிஸ் நாட்டில் எமது தேசியச் செயற்பாட்டாளர்களுக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட வழக்கில் விடுதலைப்புலிகள் அமைப்பைக் குற்றவியல் அமைப்பாக அறிவிக்கும்படி சுவிஸ் அரசதரப்பு வாதாடிய போதும் நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு நடைமுறை அரசாக இயங்கிய விடுதலைப்புலிகள் அமைப்பைக் குற்றவியல் அமைப்பாகக் கருத முடியாது என சுவிஸ் நாட்டு நீதிமன்றம் தெரிவித்திருந்தமையும் எமக்குச் சாதகமான விடயமாகவே அமைந்தது.

விடுதலைப்புலிகள் அமைப்பு தான் இராணுவ இலக்காக கருதிய இலக்குகளைத் தவிர ஏனைய பொதுமக்கள் இலக்குகள் மீது தாக்குதல் நடாத்தியதில்லை. புலிகள் அமைப்புக்கு எதிராக தடைகள் விதித்துள்ள நாடுகள் மீதும் தாக்குதல் நடாத்தியதில்லை.

யுத்தகாலத்தில் தனது கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் ஒரு நடைமுறையரசினை அமைத்து, அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்வை மேம்படுத்த அனைத்துவகையான நடவடிக்கைகளையும் எடுத்த விடுதலையமைப்பு அது.

இவ் அமைப்பையும் மாவீரர்களையும் பயங்கரவாதிகளாகச் சித்தரிப்பது உலகெங்கும் வாழும் தமிழ் மக்களை அவமதிப்பது போன்றது. சிங்களத்தின் தமிழின அழிப்புக்குத் துணைபோகும் செயலாக அமைவது. தமிழ் மக்களுக்கான அரசியல் ஜனநாயக வெளியினை சுரக்கும் ஒரு நடவடிக்கையாக அமைவது.

இனவழிப்புக்கு உள்ளாகும் ஒரு மக்கள் கூட்டத்தின் குரலாய், நீதிக்காகப் போராடும் மக்களின் குரலாய் எமது விடுதலை இயக்கத்தின் மீதும் மாவீர்கள் மீதும் சுமத்தப்பட்டிருக்கும் பயங்கரவா முத்திரையினை அகற்றுமாறு தடைவிதித்துள்ள உலக நாடுகளை இன்றைய மாவீரர் நாளில் நாம் கோருகிறோம்.

அன்பான மக்களே,

இன்றைய காலகட்டத்தில் பழைய ஒற்றை மைய உலக ஒழுங்கு (Unipolar World) சிதைவடையும் காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இரு துரு வ உலக அரசியல் ஒழுங்கில் (Bipolar World) இருந்து 1989 ஆம் ஆண்டின் பின்னர் அமெரிக்கா தலைமையிலான ஒற்றை மைய உலக ஒழுங்கு உலகில் தோற்றுவிக்கப்பட்டது.

தற்போது சிதையத் தொடங்கிய இவ் ஒற்றை மைய உலக ஒழுங்கு, பல்துருவ உலக ஒழுங்காக வளர்ச்சி அடையும் (Multipolar World Structure) என்ற கணிப்பு அரசியல் அறிஞர்களிடம் உள்ளது. அதற்கான அறிகுறிகளும் உலக அரங்கில் தற்போது தெரிகின்றன. உக் கிரேயின் தேசத்தில் ரஷ்யாவினது தொடர்ச்சியான தலையீடு நேட்டோ (NATO) நாடுகள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதும், தென் சீனக் கடலிலும் தாய்வானிலும் சீன தேசம் தனது அதிகாரத்தைக் காட்டி வருவதும் சிரிய மத்திய தரைகடல் பிராந்தியத்தில் அமெரிக்காவிற்கும் ரஷ்யாவிற்கும் இடையிலான கொதி நிலையும் இச் சிதைப்பின் வலிந்து நிகழ்த்தப்படும் சமகால உதாரணங்களாக உள்ளன.

பல்துருவ அரசியல் ஒழுங்கில் பல அதிகாரமையங்கள் இருக்கும். பல்வேறு வகையான கூட்டுக்களும் அணிகளும் இருக்கும். அமெரிக்காவுக்கு மாற்றாக ரஸ்யா, சீனா போன்ற நாடுகள் வலுவான கூட்டுக்களை அமைத்துக் கொள்ளும். இந்தியா, பிறேசில் போன்ற நாடுகளும் இவ் அணிகளில் முக்கிய இடத்தை வகிக்கும். அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவுக்கும் இடையில் நல்லுறவு இருக்கும் அதே வேளை போட்டிகளும் வலுக்கும். இத் தகைய பல்மைய உலக ஒழுங்கில் முரண்பாடும் உறவுநிலையும் ஒன்றோடு ஒன்று கைகோர்த்துச் செயற்படும் தன்மை வெளிப்படும் என்றே அறிஞர் பலர் தெரிவிக்கின்றனர்.

இத்தகைய உலக ஒழுங்கின் வளரச்சியில் ஒவ்வொரு கூட்டும் உலகில் உள்ள அரசுகளைத் தம் பக்கம் இழுத்துக் கொள்ள முயலும். இது சிறீலங்கா போன்ற ஒடுக்குமுறை அரசுகளுக்கும் சில வாய்ப்புகளை வழங்கும் நிலையை உருவாக்கக் கூடியது.

இத்தையதொரு சூழலைச் சிறீலங்கா அரசு தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயலும். தனது நலன்களையும் உலகின் சக்தி வாய்ந்த நாடுகளின் நலன்களையும் ஒன்றிணைய வைத்து தனது நிலையை வலுவாக்க முயலும். தாயகத்தில் தமிழ் மக்கள் மீதான இனஅழிப்பை விரைவுபடுத்த முயலும்.

இந்த தமிழினவழிப்பு முயற்சியினைத் தடுத்து நிறுத்த, தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்ல தாயகத் தமிழ் மக்கள், புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள், தமிழக மற்றும் உலகத் தமிழ் மக்கள் ஓரணியில் அணிவகுத்து நின்று செயற்படுதல் அவசியமானது.

ஈழத் தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டத்தின் வளர்ச்சி தாயகத்தில் வாழும் மக்களது எழுச்சியில் பெரிதும் தங்கியுள்ளது. தேர்தல் அரசியல் காரணமாக தமிழ்த் தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட அரசியற்கட்சிகளுக்கிடையேயும், கட்சிகளுக்குள்ளும் முரண்பாடுகள் வளர்ந்துள்ள இன்றைய சூழலில் அரசியல் கட்சிகளால் தமிழ் தேசிய அரசியல் இயக்கத்தை ஒருமைப்பாட்டுடன் தலைமை தாங்கி முன்னெடுக்க முடியாதநிலை உள்ளது.

இதனால் தேர்தல் அரசியலில் ஈடுபடாத, தமிழ்த் தேசிய அரசியல் பேரியக்கமொன்றை உருவாக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

இத் தேசிய இயக்கம் தமிழர் தேசத்தின் அரசியற்சக்திகள் அனைத்தையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்காக, சிங்களத்தின் இனவழிப்புக்கு எதிரான அனைத்துலக பொறிமுறைக்கு ஆதரவாக, தமிழர் தாயகத்தின் சமூக, பொருளாதார, பண்பாட்டு மேம்பாட்டுக்காக எழுச்சியுடன் செயற்படவேண்டும்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இயங்கும் தமிழ் அமைப்புகள் ஒரு பொது வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தமக்குள் ஒருங்கிணைந்து கொள்ள வேண்டியது காலத்தின் அவசிய தேவை. தாயக மக்களதும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களதும் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து, தமிழக மற்றும் உலகத் தமிழ்த் தலைவர்களுடன் இணைந்து ஈழத் தமிழ் மக்களுக்கான தேசிய மற்றும் சமூக விடுதலைக்கான மூலோபாயங்கள், தந்திரோபாயங்கள் வகுக்கப்பட்டு அதன் அடிப்படையிலான செயற்திட்டம் வகுக்கப்பட வேண்டும்: இவ்வாறு வகுக்கப்படும் திட்டத்தை வழிநடாத்த தாயகம் புலம் பெயர் தமிழர் தமிழக மற்றும் உலகத் தமிழரைக்கொண்டு ஒரு வழிகாட்டிக்குழு அமைக்கப்பட வேண்டும்.

இவ்வகையான ஒரு கட்டமைப்பு உருவாக்கப் படுமானால் அது மக்களுக்கு மிகுந்த நம்பிக்கையினை அளிக்கும். தமிழீழ மக்களின் தன்னாட்சி உரிமைக்கான போராட்டம் வீச்சுப் பெறும்.

இதனைச் சாத்தியப்படுத்துவது மிகவும் நிதானத்துடனும் சகிப்புத்தன்மையுடனும் பொறுப்பணர்வுடனும் செயற்படுவதன் மூலம்தான் நிகழக் கூடியது. மாவீரர்களை நாம் வணங்கி நிற்கும் இன்றைய நாளில் இத்தகையதொரு ஏற்பாட்டை நமக்குள் ஏற்படுத்திக் கொள்வது குறித்து நாம் அனைவரும் சிந்திப்பது பயன் தரக்

கூடியது.

அன்பான மக்களே,

நமது தமிழீழத் தாயகத்தில் தமிழர் தேசத் தின் இருப்பை வலுவாக்குவது மிகவும் அவசியமானது.

தமிழர் தேசத்தினை வலுப்படுத்தல் அர சியற்செயற்பாட்டாளர்களுக்கு மட்டும் உரியதொரு பணியல்ல. தமிழ் மக்கள் ஒவ்வொருவர் முன்னும் உள்ள பணியே தான் இது.

தமிழர் தாயகத்தின் கல்விநிலையை உயர்த்துவது, தமிழ் மக்களது சுகாதார நிலையை மேம்படச் செய்வது, தமிழர் தாயகத்தின் இயற்கையைப் பாதுகாப்பது, சமூக சமத்துவத்தைப் பேணுவது, பண் பாட்டு வாழ்வை மேம்பாடையச் செய் வது, தொழில் முயற்சிகளை உருவாக்கி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்துவது, விவசாய, கடற்தொழில் மற்றும் தொழில் துறைகள் வளர்ச்சியடைய உழைப்பது, சிந்தனைத்திறனை அதிகரிப்பது, மாவீரர் மேன்மையினைப் போற்றுவது, தமிழ் மொழியின், பண்பாட்டின், தமிழ் மர புரிமையின் சிறப்பைக் கொண்டாடுவது - இவை போன்று நாம் நாளாந்த வாழ்வில் மக்களாகச் செய்யும் பணிகள் தமிழர் தேசத்தினை வளப்படுத்தும் என்பதனை நாம் மறந்து போய் விடக்கூடாது.

நாம் மிகவும் கூர்மையான சிந்தனை யுடன் செயற்படுவதும், சிறீலங்கா அரசின் சூழ்ச்சிகளை தொடர்ச்சியாக அம்பலப்படுத் துவதும் அவசியமானது.

இந்திய நாட்டினையும் இந்திய மக்களை யும் நாம் நட்புச் சக்திகளாக வரித்துக் கொண்டிருக்கிறோம். இந்த நட்புச் சக்தி களிடம் எமது எதிர்பார்ப்பை நாம் உரத்துச் சொல்வதும் அவசியமானதாகும்.

தமிழ் மக்களின் தேசிய அரசியல் பிரச் சினைக்கு 13 வது திருத்தச் சட்டம் என்பது காலாவதியாகிப்போனதொன்று என்ப தனைச் சொல்வதற்கு நாம் தயங்கக் கூடாது.

இலங்கை இந்திய ஒப்பந்தமும் 13 ஆம் திருத்தச் சட்டமும் ஒன்றல்ல என்பதனை தாயகத் தவைர்கள் இந்திய அரசிடம் வலி யுறுத்திச் சொல்ல வேண்டும். இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் கடப்பாடு எழுத் தில் உள்ளதும், இணைப்பில் உள்ளவை குறித்ததும் மட்டுமன்றி தமிழர் தலை மைக்கு இந்திய அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகளும் இணைந்ததுதான் என் பது வலியுறுத்தப்பட வேண்டும்.

13 ஆம் திருத்தச்சட்டம் அரைகுறையாகக் கொண்டுவரப்பட்டு பின்னர் அதில் மாற் றங்கள் செய்யப்பட்டு குற்றுயிராக்கப்பட்டு ஒரு நடைப்பிணமாகத்தான் தற்போது இருந்து கொண்டிருக்கிறது.

சிறீலங்கா கலாச்சார ஒருமைப்பாடு என்ற மாயை மூலமும், இந்தியாவே முதல் (India First) என்ற கூற்றின் மூலமும் தன்னை இந்தியாவின் நட்பு நாடாக காட் டிக்கொள்ள முனைகிறது. சிறீலங்காவில் சீனா நிலைகொள்ளாமல் இருப்பது இந் தியா சிறீலங்காவில் நிலைகொண்டிருப் பதிலும் பார்க்க, இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு உகந்ததாக அமையும். சிறீலங்கா இந்தியாவின் உண்மையான நட்பு நாடே அல்ல. இந்த உண்மை இந்தி யாவுக்கும் தெரியும். இலங்கைத்தீவின் அரசதிகாரம் சிங்கள தேசத்திடம் இருப் பதனால் இந்தியா தனது நலன்களை உறுதி செய்து கொள்வதற்காக சிறீலங்கா அரசுடன் உறவாடுகிறது.

இங்கு நாம் ஒரு விடயத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். இந்தியா ஈழத் தமிழ் மக்கள் விடயத்தில் அக்கறை செலுத் துவது எம் மக்கள் மீது கொண்ட கருணை யால் மட்டுமல்ல. இலங்கைத் தீவில் இந்தியா தனது நலன்களை அடைந்து கொள்வதற்கான கருவிகளகவும் நாம் பயன்படுகிறோம். ஈழத் தாயகத்தில் தமிழ் மக்கள் வலுமிக்க மக்களாக இல்லாது விட் டால் காலப்போக்கில் சிறீலங்கா மீது செல் வாக்கு செலுத்த தனக்குரிய வாய்ப்பினை இந்தியா இழந்து விடும். இந்த உண்மை யினையும் நாம் வெளிப்படையாகவே இந்தி யாவுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும்.

இதனால்தான் தமிழின அழிப்பை விரை வுபடுத்தி ஈழத் தமிழ் மக்களை வலு விழந்த மக்களாக மாற்றுவதற்கு சிங்களம் பகீரத முயற்சி எடுத்து வருகிறது என் பதனையும் நாம் புரிந்துகொண்டு அதனை வெளிப்படுத்தவும் வேண்டும்.

இதனால் நாம் வலுவுள்ள மக்களாக நிலைத்து வாழ்வதற்குரிய நிலைப் பாட்டை நாம் இந்தியாவிடம் வலியுறுத்த வேண்டும். இது எமது நலன் சார்ந்தது மட்டுமல்ல, இந்திய நலன்சார்ந்த விட யமும்கூட.



ஈழத் தமிழ் மக்கள் சுயநிர்ணய உரி மைக்கு உரித்துடைய தேசிய இனம் என்ற அங்கீகாரத்தையும், இலங்கைத்தீவின் வடக்கு கிழக்குப் பகுதிகள் தமிழ் மக்களது பாரம்பரியத் தாயகம் என்பதனையும் இந் திய அரசு பகிரங்கமாக அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தாயக அரசியல் தலைவர்கள் முன்வைக்க வேண்டும். இது ஏதேவொரு வகையில் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிழி வாக வெளிப்பட்ட விடயங்கள்தான். ஆனால் நடைமுறையில் இதற்குரிய இடம் கிடைக்கவில்லை.

இந்த அங்கீகாரத்தின் அடிப்படையில் ஈழத் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என வலியுறுத்த வேண்டும்.

மறுபுறத்தில் புலம் பெயர்ந்த மக்களின் பிர திநிதிகளாகிய நாம் சுதந்திரமும் இறை மையும் கொண்ட தமிழீழ அரசினை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்திச் செயற்படு வோம்.

இவ்விரு நிலைப்பாடுகளும் ஒன்றுக் கொன்று முரண்பட்டதாக நாம் உணரத் தேவையில்லை. தாயகத் தமிழ் கட்சிகள் திம்பு அடிப்படையினை வெளிப்படையாகப் பேசி, அரசியல் தீர்வுக்கு ஆதாரமாக அவை கொள்ளப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியுடன் செயற்பட, அதேவேளை அதன் அடுத்த பரிமாணத் துடன் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் செயற்பட எமக்கான அரசியல் வெளி பெரிதாகும்.

தேசியத் தலைவர் அவர்கள் தனது 2008 ஆம் ஆண்டு இறுதி மாவீரர்நாள் செய்தி யில் இந்தியாவுடன் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு ஏற்பட்ட முரண்பாட்டுக்கான காரணத்தையும், இவ்வுறவு சீர்ப்படுத்தப் பட வேண்டிய தேவையினையும் வெளிப் படுத்தியிருந்தார். தேசியத் தலவரது அச் செய்தி இன்றும் காலப்பொருத்தம் உள் ளதாகவே இருக்கிறது.

மாவீரர்களை நாம் வணங்கி நிற்கும் இன்றையநாளில் தமிழ்நாட்டு மக்களதும் இந்திய மக்களதும் ஆதரவோடு நாம் எவ் வாறு தமிழீழத் தனியரசுக்கான இந்திய அங்கீகாரத்தை வென்றெடுக்க முடியும் என்பது குறித்து நாம் மேலும் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

அன்பாக மக்களே,

சிறீலங்கா அரசு தற்போது பல்வகையான நெருக்கடிகளுக்கு உள்ளானாலும் தமிழர் தேசத்தின் மீதான இனவழிப்பு இலக்கில் உறுதியாகச் செயற்பட்டுக் கொண்டிருக் கிறது.

ஈழத் தமிழ் மக்கள் மாவீரர்களுக்கு தமது வணக்கத்தைச் செலுத்துவதற்கு தடைகள் விதிப்பதும், தமிழர் தாயகத்தை சிதைக் கும் முயற்சிகளில் ஈடுபடுவதும், தமிழ்த் தேசியச் சிந்தனையை மழுங்கடிக்கச் செய் வதும், இராணுவத்தை தமிழர் பகுதிகளில் நிலை கொள்ள வைத்து, தனது உளவு நிரலைத் தமிழர் தாயகப்பகுதிகளில் விரிவுபடுத்தி இராணுவ ஆட்சியினை நடாத்துவதுமாக தமிழர் வாழ்வைச் சிதைக்க முயல்கிறது.

இதனை போர்க்குணத்துடன் எதிர்த்து நின்று பௌத்த சிங்கள மேலாதிக்கத்துக்கு அடிபணியாத வீரமிக்க மக்களாக நாம் வாழ்வதே வரலாற்றில் தமிழ் மக்களின் இருப்பை உறுதி செய்யும்.

நாம் எவருக்கும் அடிபணிந்தவர்கள் அல்ல என்பதனையும் அதுபோல எமக் கும் எவரும் அடிபணிவதனையும் நாம் வெறுக்கவே செய்வோம் என்பதனையும் நாம் உலகுக்கு உரத்துச் சொல்லும் உன்னத மனிதர்களாக வாழ வேண்டும்.

உலகெங்கும் ஒடுக்குமுறைக்குட்பட்டிருக் கும் அனைத்து மக்களும் விடுதலை அடைய வேண்டும் என்று எண்ணும் உலகத் தோழமை கொண்ட மக்களாக நாம் வாழ வேண்டும்.

நமது மாவீரர்களின் கனவை நனவாக்கி, அவர்கள் கனவு கண்ட சுதந்திரமும் பாதுகாப்பும் கௌரவமும், சமத்துவமும் சமூகநீதியும் நிலவும் தமிழீழத் திருநாட்டில் நாம் வாழ வேண்டியதை எமது நியதியாக்குவோம்.

இவற்றையெல்லாம் நாம் எட்டுவதற்கு நமது மாவீரர்கள் நம்மை வழிநடாத்து வார்கள். இதயம் கனத்த நினைவு களுடன் நாம் நமது மாவீரர்களை வணங் கி நமது பணிகளைத் தொடர்வோம் என உறுதி பூணுவோமாக!

நாம் எல்லோரும் சுதந்திரமாக எமது மண்ணில் வாழவேண்டும் என்ற உன்னத இலட்சியத்துக்காக வீரத்துடன் பெருங் களமாடி அறநெறி போற்றி தமிழர் மாண்பை உலகறியவைத்த மாவீரரை எம் தேசத்துக்கென ஈந்தளித்த அற்புதமான அனைத்து பெற்றோரையும் இவ்விடத்தில் சிரம் தாழ்த்தி வணங்கி எனது உரையினை நிறைவு செய்கிறேன்.

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"



துயர் பகிர்வு

மண்ணில்
17.07.1945



விண்ணில்
27.11.2021

திருமதி. தருமலிங்கம் சரஸ்வதி

நயினாதீவு – இலங்கை (பிறப்பிடம்), மற்றும், Whitby, CA (வதிவிடம்)

யாழ். நயினாதீவு 5ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கனடா Whitby ஐ வதிவிடமாகவும் கொண்ட தருமலிங்கம் சரஸ்வதி அவர்கள் 27-11-2021, சனிக்கிழமை அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற நல்லையா (சய்வம்), வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற தருமலிங்கம் (அதிபர்) அவர்களின் ஆருயிர் மனைவியும்,

உமாகரன், காலஞ்சென்ற சுபாகரன், காலநிதி, சுரேஸ், ஜெகதீஸ்வரன், வினிதா, சுகதா ஆகியோரின் பாசமிகு தாயரும்,

கவிதா, பிரபுராஜ், கௌரி, துஷ்யந்தி, ரவீந்திரகுமார், ரங்கநாதன் (ரங்கன் - New Rangans Jewel House, Markham & Steeles) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

இராசதுரை, காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசு மற்றும் துரைராஜா, பராசக்தி, காலஞ்சென்ற நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும்,

புவனேஸ்வரி, புஸ்பவதி, விஜயாதேவி, புனிதமலர், சியாமளாதேவி, பாலசிங்கம், சூரியகலா, காலஞ்சென்றவர்களான சோமசேகரம், தியாகராஜா, மயில்வாகனம், சாமியாப்பிள்ளை, தமோதரம்பிள்ளை, கணபதிப்பிள்ளை, கனகசபை மற்றும் கோபாலுப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும்,

தணிகன், ஜெயானி, சாகிபிரகலாத், தீவிகா, விபீசன், கார்த்திகா, மிதூசன், நிவாசகி, யதீரன், நிக்ஷ்னா, நியாணன், லக்ஷ்மிகா, கனிஷ்கா, உசானி, அஸ்வினி, டிலானி, சங்கவி, அக்ஷயா ஆகியோரின் பாசமிகு பேத்தியும் ஆவார்.

குறிப்பு: இறுதி நிகழ்வுகளில் கலந்துகொள்ள வருபவர்கள் ஊழனை – 19 தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டதற்கான அத்தாட்சி பத்திரத்தையும் தங்களது அடையாள அட்டையினையும் கட்டாயமாக எடுத்து வரவும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

அன்னாரின் இறுதிக்கிரியை விபரம்

நிகழ்வு இடம்: Ajax Crematorium & Visitation Centre
384 Finley Ave, Ajax, ON L1S 2E3, Canada

பார்வைக்கு:	**சனி, 04.12. 2021**	**நேரம்: மாலை 05:00 மணி – 09:00 மணி**
கிரியை:	**ஞாயிறு, 05.12.2021**	**நேரம்: காலை 09:00 மணி – காலை 11:30 மணி**
தகனம்:	**ஞாயிறு, 05.12.2021**	**நேரம்: மதியம் 12:00 மணி**

தொடர்புகளுக்கு

உமாகரன் (மகன்): 416.399.8240, சுரெஸ் (மகன்): 647.787.8715, ஜெகதீஸ்வரன் (மகன்): 437.217.3619, பிரபுராஜ் (மருமகன்): 94773209756,
ரகு (மருமகன்): 647.787.4248, ரங்கநாதன் (மருமகன்): 647.702.2159

– ரங்கன் (மருமகன்) –
New Rangans Jewel House
(Markham & Steeles)









மாவீரர் துயிலுமில்லங்கள் தமிழீழம்

வீரவணக்க நாள்

மாவீரர் நாள் நவம்பர் 27

MAAVEERAR NAAL NOVEMBER 27































































தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம் The Thirst of Thamils is the Homeland of Tamileelam

சங்கத்தமிழ்